Annual Subscription Rs. 6 | 14th February 1937 | Price 2 As.

# சுதேசமித்திரன்

Vol. 8 | வாரப்பதிப்பு | No. 2

## THE SWADESAMITRAN ILLUSTRATED WEEKLY



ஹைதராபாத் அரண்மனை வரவேற்பு மண்டபம்.

எல்லா நோவுகளுக்கும் ஒப்பற்ற சஞ்சீவி

பாடால் பாம்






மூன்று தலைமுறைகளாக
தாய் தன் மகளுக்கு

# வுட்வர்ட்ஸ்
# கிரைப் வாடர்

எப்படி குழந்தைக்கு
சுகம் தருகிறதென்று சொல்லுகிறாள்.

# WOODWARD'S
## GRIPE WATER

W. WOODWARD LTD., LONDON, ENGLAND




கிளாஸ்கோ (ஸ்காட்லண்ட்)வில் உபயோகத்திலிருக்கும் புதிய டிராம் வண்டிகள். இதில் தற்காலத்திய வசதிகளனைத்தும் இருக்கின்றன. டிரைவருக்குத் தனியாக அறையிருக்கிறது. மூடுபனி காலங்களில் ஜன்னல் கதவுகள் மூடப்பட்டு விட்டால் பிரயாணிகளுக்கு டிராம் நிற்குமிடங்களை டிரைவர் அறிவிக்க ஒலிபரப்பு யந்திரமும் அமைக்கப்பட்டிருக்கிறது.

இவ்வருஷத்திய படக்காட்சியில் சிமாவின் பெண்கள் எனும் படமே மிகச் சிறந்ததாகக் கருதப்பட்டு, பதினாயிர ரூபாய் பரிசும் பெற்றது. நம் ஓவிய மறுபிறப்பு இப்படத்துடன் ஆரம்பித்து விட்டதென்பது அறிஞர் துணிபு. எனக்குச் சித்திரங்களைப்பற்றி அதிகந் தெரியாதெனினும், இவ்வளவு புகழ்பெற்ற படத்தைப் பார்க்காதிருப்பது தவறு என்றெண்ணி, ஒரு நாள் அதைப் பார்க்கப்போனேன்.

என்னுடன் பட விமரிசகர்களுள் முதன்மை ஸ்தானம் வஹிக்கும் வைவஸ்வத பட்டரும் வந்தார். படங்களைப் பற்றிப் பட்டருக்குத் தெரியாதது ஒன்றுமே கிடையாது. அவர் வீடே ஒருயர்ந்த படக்காட்சிச் சாலை. பல தேசத்து ஓவிய மணிகளைத் தேர்ந்தெடுத்து ஏராளமான விலை கொடுத்து வாங்கி, அவருடைய சித்திரமாலில் திரட்டி வைத்திருந்தார். அவ்வளவு மேன்மையான படத்திரட்டு கீழ்த்திசையில் வேறெங்குங் கிடையாது. இது சாத்தியமாக இருந்ததற்குக் காரணம் பட்டர் பரம்பரையாகப் பணக்காரர்களான ஒரு ஜமீந்தார் குடும்பத்தில் பிறந்ததுதான் போலும்! பட்டருக்கு எவ்வளவு பணமிருந்தது என்று என் கணக்குக் கெட்டாது. பட்டருக்கு அப்போது வயது அறுபதுக்கு மேலிருக்கும். இந்த அறுபது ஆண்டுகளையும் அவர் ஓவியக் கலை முன்னேற்றத்துக்கே செலவிட்டிருப்பார் என்று சொல்வது வீண் புகழ்ச்சியாகாது.

இந்தப் பட்டரும் நானும் 'பெண்கள்' படத்துக்கருகில் நின்றுகொண்டு அதைக் கண்கொட்டாது ஒரு அரை மணி நேரம் கவனித்தோம். நான் கேட்டதற்கு "சிமாவின் படம் நன்றாயிராமலாயிருக்கும்?" என்றார் பட்டர். அவர் இதைச் சொன்ன பாணியும் குரலும் அர்த்தபுஷ்டியாயிருந்தது. ஏதோ விசேஷமிருக்கிறது என்று ஊஹித்துக்கொண்டேன்.

"இந்தச் சிமாவை உங்களுக்குத் தெரியுமோ?"

"தெரியும்...தெரியாது!"

இப்பதில் என் ஆவலை இன்னும் அதிகமாகக் கிளறிவிட்டது. "அப்படியென்றால்!" என்றேன்.

"அது பெரிய கதை...பழங்கதை, இப்போது சொல்ல அவகாசமில்லை" என்று அவர் சொன்னதைக் காதில் போட்டுக்கொள்ளாமல் "சிமாவின் பழைய..." என்று ஆரம்பித்தேன் நான்.

ஆனால் வைவஸ்வத பட்டர், "எனக்கு நாழியாகிறது. நான் போய் வருகிறேன்" என்று அவசர அவசரமாய் விடைபெற்றுக்கொண்டுபோய்விட்டார்.

# வேலைக்காரன்

———:—:———

(ஸ்ரீமான் க. நா. சுப்ரமண்யம்)

அதற்கப்புறம் ஒரு வாரம் பட்டர் என் கண்ணில் படவேயில்லை. ஒரு நாள் அகஸ்மாத்தாய் அவரை அவர் வீட்டிற்கருகில் சந்தித்தேன்.

"வீட்டிற்கு வாயேன்" என்றார்.

போனேன்.

பட்டர் வீட்டில் அச்சமயம் அவரையும் அவர் வேலைக்காரர்களையுந் தவிர வேறு யாருமில்லை. அவருடைய மகனும், மருமகனும், பேரப் பிள்ளைகளும் தஞ்சாவூர் சென்றிருந்தனர்.

அவருடைய சித்திர மாலில் பொதுவாகப் படங்களையும் ஓவியக் கலையையும் பற்றிப் பேசி வருகையில், சிமாவின் படத்தைப் பற்றியும் இரண்டொரு வார்த்தைகள் பேசினோம். படக்காட்சியில் போலவே அன்றும் அவர் வார்த்தைகள் என் அவாவைத் தூண்டின. சிமாவைப் பற்றி ஏதோ சில விஷயங்கள்—ரஸமான விஷயங்கள்—பட்டருக்குத் தெரியுமென்று ஊஹிக்க முடிந்ததே தவிர வேறு ஒன்றும் நிச்சயமாகப் பிடிபடவில்லை. ஆனால் தானாகக் கேட்டால் முன் மாதிரி மட்டந்தட்டிவிடப் போகிறாரே என்றுநான் என் ஆவலைக் கூடியவரையில் அடக்கிக்கொண்டேன்.

காபி ஆனபிறகு இருவரும் சித்திரமாலில் ஸோபாவிலமர்ந்தோம். ஏதேதோ பல விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம்.

திடீரென்று பட்டர், "நான் ஒரு சேவகனாற்பட்ட சிரமம் மிகவுண்டு" என்று சொல்லி என்னை நோக்கினார்.

"ஓ, யாருக்குமுள்ளது தானே?

கூலிமிகக் கேட்பார்
கொடுத்ததனுந்தரமறப்பார்
வேலைமிக வைத்திருந்தால்
வீட்டிலே தங்கிடுவார்
ஏனடா நேற்றைக்கிங்கு நீ
வரவில்லையென்றால்
பானையிலே தேளிருந்து
பல்லாற் கடித்ததென்
வீட்டிலே பெண்டாட்டிமேல்
பூதம் வந்ததென்பார்
பாட்டியார் செத்துவிட்டப்
பனிரண்டா நாளென்பார்
ஓயாமற் பொய்யுரைப்பார்;
ஒன்றுரைக்கவேறுசெய்வார்
தாயாதியோடு தனியிடத்தே
பேசிடுவார்
உன்வீட்டுச் செய்தியெலாம்
ஊரம்பலத்துரைப்பார்.
என் வீட்டிலில்லையென்றால்
எங்கு முரசறைவார்" என்று

ஒப்பித்தேன்.

"இதெல்லாம் சாதாரண வேலைக்காரர்களால் சாதாரணமாக எல்லோருக்கும் ஏற்படக் கூடிய சிரமங்கள். என்னிடம் ஏழெட்டு வருஷங்களுக்குமுன் பொன்னுசாமியென்ற வாலிப வேலைக்காரன் ஒருவனிருந்தான். அவனை வேலைக்காரத் தெய்வத்தின் அவதாரமென்றே கூறவேண்டும். அப்படியிருந்தும் அவனால் நான் பட்ட சிரமங்கள்......இன்னும் அதை நினைத்தால் எனக்குக் கோபம் வருகிறது. அவன் வேலையிலோ ஒரு குற்றமில்லை. அப்படியிருந்தும்......! அது ஒரு அதிசயம் சொல்லுகிறேன் கேள்."

"எங்கிருந்தோ வந்தான்
உன் சேவகன் நானென்றான்
மாடுகன்று மேய்த்திடுவேன்
மக்களை நான் காத்திடுவேன்
வீடு பெருக்கி விளக்
கேற்றி வைத்திடுவேன்
சொன்னபடி கேட்பேன் துணி
மணிகள் காத்திடுவேன்
சின்னக் குழந்தைக்குச்
சிங்காரப் பாட்டிசைத்தே
ஆட்டங்கள் காட்டி அழாத
படிப் பார்த்திடுவேன்
காட்டுவழியானாலும்
கள்ளர் பயமானாலும்
இரவிற் பகலிலே
யெந்நேரமானாலும்
சிரமத்தைப் பார்ப்பதில்லை
தேவரீர் தம்முடனே
சுற்றுவேன். தங்களுக்கோர்
துன்பமுறாமற் காப்பேன்
தாலி கட்டும் பெண்டாட்டி
சந்ததிகளேதுமில்லை.
நானோர் தனியாள்.....
ஆதரித்தாற் போதுமடி
யேனை; காசுபெரிதில்லை என்று
என்னை வந்தடைந்தான்
பொன்னுசாமி.

அசப்பிலே பார்க்கும் யாரும் அவனை ஒரு வேலைக்காரன் என்றே நம்பமாட்டார்கள். அவ்வளவு மேன்மையான, வசீகரமான தோற்றம்! பழைய வேலைக்காரனை உடனே சீட்டுக் கொடுத்தனுப்பிவிட்டுப் பொன்னுசாமியை வேலைக்கு வைத்துக்கொண்டேன். அவனும் வேலையைப் பற்றியவரையில் ஒரு குற்றமுங் கண்டு பிடிக்க முடியாதபடி நடந்து கொண்டான். எனக்கு அவ்வளவு நல்ல வேலைக்காரன் கிடைத்ததுபற்றி நான் மனம் பூரித்தேன்.

முதலிரண்டு மாதங்கள் ஒன்றுந் நகராறில்லை. மூன்றாவது மாதம் என் மற்ற வேலைக்



ஸர் தாமஸ் மன்ரோவுக்கும் தர்மபுரிக்குமுள்ள சம்பந்தத்தைக் காட்டுவதற்காகச் சென்னை கவர்ன்மெண்டார் இந்த ஸ்தம்பத்தைக் கட்டியிருக்கிறார்கள். மன்ரோ பாராமஹால் ரெவின்யூ சூபரிண்டென்டுக்கு உதவி உத்தியோகஸ்தராகவிருந்து 1792-ம் வருஷம் ஏப்ரல் மாதம் முதல் 1799-ம் வருஷம் மார்ச் மாதம் வரை இங்கே வசித்து வந்தார். இந்த ஸ்தம்பத்திற்கு சமீப தூரத்தில் அவர் வசித்துவந்த வீடும் தோட்டமும் இருக்கின்றன.

காரர்கள் பொன்னுசாமியைப் பற்றி வாயில் வந்தபடியெல்லாம் வம்பளக்க ஆரம்பித்தனர். பொன்னுசாமியின் அறை இந்தச் சித்திரமாலுக்கு மேலண்டைப்புறம் இருந்தது. அங்கு பேய் நடமாட்டம் உண்டென்று ஒரு வதந்தி உலவி வந்ததால் யாரும் அஸ்தமித்த பிறகு அந்தப் பக்கம் போகமாட்டார்கள். இதைத் தெரிந்துகொண்டவுடன் பொன்னுசாமி அங்கு வெறுமனே பூட்டிக் கிடந்த ஒரு அறை தன் உபயோகத்துக்குக் கொடுத்தால் சௌகரியமாயிருக்கும் என்று கேட்டான். நானும் கொடுத்திருந்தேன். அந்த அறையில் இரவுமுழுவதும் விளக்கு அணையாமல் எரிகிறது என்றும், நள்ளிரவில் புது வேலைக்காரன் எங்கெல்லாமோ போய்விட்டு வருகிறான் என்றும் என் மற்ற வேலைக்காரர்கள், என்னிடம் புகார் கூறினர். நான் இதை விசேஷமாகக் காதில் போட்டுக்கொள்ளவில்லை. இந்தப் புகாருக்குக் காரணம் பொன்னுசாமி. அவர்களுடன் அதிகமாகக் கலக்காது தூர நின்றதே என்று எனக்குத் தோன்றிற்று.

ஆனால் எனக்கும் நாளடைவில் படிப்படியாகப் பொன்னுசாமியிடம் கோபம் வர ஆரம்பித்தது. நானும் என் சிநேகிதர்களும் ஏதாவது ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருப்போம்—வேறென்ன முக்கியமான விஷயம்? ஓவியக்கலையைப்பற்றித்தான். தானிருப்பதையே காட்டிக்கொள்ளாமல் பொன்னுசாமி நாங்கள் பேசுவதை ஒரு வார்த்தை விடாமல் மணிக்கணக்காய் ஒட்டுக் கேட்டுக் கொண்டிருப்பான்.

இது மாத்திரமல்ல. வேறு ஏதாவது பேசிக்கொண்டிருக்கையில் பொன்னுசாமி ஒரு தரம் வந்துவிட்டுப்போனதாக வைத்துக்கொள். அத்துடன் எங்கள் சம்பாஷணைக்கு முட்டுக்கட்டை போட்டாய்விடும். அதற்கப்புறம் பொன்னுசாமியைப் பற்றிப் பேச்சு ஆரம்பிக்கும். பொன்னுசாமியைப் பற்றி ஆரம்பித்தால் பேச்சுக்கு முடிவு கிடையாது. என் நண்பர்களை அவன் ஒரு சாதாரண வேலைக்காரன்தான் என்று நம்ப வைப்பது பிரம்மப் பிரயத்தினந்தான்.

அவன் வேலையைப் பொறுத்த மட்டில் ஒரு குற்றங்குறை கிடையாது. ஆனால்...என் வீட்டில் வேலைக்காரர்களுக்கும், சிநேகிதர்களுக்கும், வருவார் போவாருக்கும் அவனே முக்ய மனிதனாகிவிட்டான் என்று சொல்வது மிகையாகாது. என்னையும் என் மனைவியையும் பற்றி விசாரிக்குமுன் "அந்தப் பொன்னுசாமி யிருக்கானா?" என்று கேட்பது எல்

விட்டது. எனக்கோ ஆத்திரம் பொங்கிற்று. உன் வேலைக்காரன் உன்னைவிட மதிக்கப்பட்டவனாகிவிட்டால் உனக்குக் கோபம் வருமா? வராதா? நீயே சொல். என் மனதிற்குள் பொன்னுசாமியை வாயில் வந்தபடியெல்லாம் சபித்தேன்.

கடைசியில் ஒரு வழியாக அவனைப் போகச் சொல்லி விடுவது என்று தீர்மானித்தேன். ஆனால் அதைச் செய்வது சுலபமான காரியமாக இல்லை. வேலைக்காரனாக என்னிடம் வந்தான். அவன் வேலையை...இதை முன்னமே நாலுதரம் சொல்லிவிட்டேனல்லவா! அவனைப்பற்றிப் பிறர் விசாரிப்பதை யவன் அறியவே மாட்டான். அப்படியிருக்க அவனிடம் அதற்காக எப்படிக் குற்றங் கண்டு பிடிக்க முடியும். எனக்குத் தர்ம சங்கடமாகிவிட்டது. அவன் வேலைத்திறனும், தோற்றமும், நடத்தையும், என் மனதைக் கவர்ந்து அவனை வேறிடஞ் செல்லவிடேனென்றது. அவனைப் போகச்சொல்லிவிட்டால், அவனைப் போன்ற வேலைக்காரன் எனக்கு வேறெங்கு கிடைப்பான்? ஆனால் வேலைக்காரனுக்குக் கலைஞனின் தோற்றம் ஏது, எதற்கு? நியாயமா? என்றெல்லாம் நான் எண்ணிப் பார்த்தேன். அவனை முதலில் ஏற்றுக்கொண்டது என்பேரில் தான் பிசகு போலும்!

இப்படி கிட்டத்தட்ட ஒரு வருஷம் கழிந்தது. திடீரென்று ஒரு நாள் ஏதாவது ஒரு சாக்குச் சொல்லி, அவனையனுப்பி விடுவது என்று தீர்மானித்தவனாய், இரவு ஒரு மணிக்குக் கூப்பிட்டனுப்பினேன். வேலைக்கார தோரணையில் அவன் தயாராக வந்தான். அவன் கண்களில் தூக்கக் கலக்கமில்லை. அவனுக்கெதிரில் என் தீர்மானம் பறந்து போய்விட்டது. நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாமென்று அவனை ஒரு டம்ளர் ஜலங் கொண்டு வரச் சொல்லிச் சாப்பிட்டு விட்டு அனுப்பிவிட்டேன்.

இதற்கு நாலைந்து நாள் கழித்து ஓரிரவு நான் ஒரு நாடகத்துக்குப் போகவேண்டியிருந்தது. அதை நான் பொன்னுசாமியிடந் தெரிவிக்கவில்லை. நாடகம் பார்த்துவிட்டு இரவு இரண்டு மணிக்குத் திரும்பி வரும்போது பொன்னுசாமி யறையில் விளக்கு வெளிச்சந் தெரிந்தது. ராத்திரி முழுவதும் விளக்கைப் போட்டுக்கொண்டு என்ன தான் செய்கிறான் அவனைப் பார்ப்போம் என்று அவன் அறையையணுகினேன்.

ஒரே புழுக்கமாயிருந்ததால் பொன்னுசாமியின் அறைக் கதவு திறந்திருந்தது. உள்ளே மூன்று விளக்குகளும் எரிந்து கொண்டிருந்தன. பொன்னுசாமி கையில் வர்ணப் பென்சிலுடன் நின்றுகொண்டிருந்

தான். அவனுக்கெதிரே அன்று நீயும் நானும் படக் காட்சியில் கண்ட 'பெண்களின்' வலது ஓரத்திலுள்ள மோஹினி உருவெடுத்திருந்தாள்.

நான் படத்தை இரண்டாவது தரம் பார்க்கவில்லை. எலக்ட்ரிக் கரண்டை இரவு முழுவதும் வீண் செய்ததற்காகப் பொன்னுசாமிக்கு அப்போதே நோட்டீஸ் கொடுத்து விட்டேன்."

"அப்புறம்?" என்றேன் நான்.

"அப்புறம் என்ன? ஒன்றுமில்லை. அவ்வளவுதான். அன்று படக் காட்சியில் 'பெண்கள்' படத்தைப் பார்த்ததுந்தான் என் வேலைக்காரப் பொன்னுசாமியே சிமாவென்பது தெரியவந்தது. அவன் என் சித்திர மாலில் படங்களைத் தினங் கண்டனுபவித்து ஆனந்திக்க வேணுமென்றே என்னிடம் வேலைக்கு வந்தான்போலும். அப்போது அவனுக்கு வயது இருபதுக்கு மேலிராது. வெறும் விமரிசகனானநான் உயர்கலைஞனை அவனுக்கு எதிரில் என் முக்யத்தை யிழந்ததில் ஆச்சரியமொன்றுமில்லை. எனினும் அந்த நாட்களை நினைத்துப் பார்த்தால் எனக்கு இன்னும் கோபமே வருகிறது.

..."நாழியாகிறது...சரி. போய்வா" என்றார்.

இதற்கு நாலு நாளுக்கப்புறம் ஒரு தினசரிப் பத்திரிகையில் வெளியான ஒரு விஷயம் என் கண்ணில்பட்டது.

'சிமாவின் குரு' என்ற தலைப்பின் கீழ் பின்வரும் செய்தி காணப்பட்டது.

"நேற்று நமது நிருபர் 'பெண்கள்' எனும் படத்தைத் தீட்டிய சிமாவைப் போய்க் கண்டார். சிமாவுக்குக் கலாதத்துவங்களைக் கற்றுக் கொடுத்தது—யார் என்று நினைக்கிறீர்கள்—நம் கலைத் தாத்தா வைவஸ்வத பட்டர்தான். இச் செய்தி நமக்கே ஆச்சர்யத்தை விளைவித்தது. சிமா சொல்வதைப் பார்த்தால், பட்டருக்கும் இது ஆச்சர்யத்தை விளைவிக்குமென்று தோன்றுகிறது. தன் சிஷ்யன் யாரென்று பட்டருக்கே தெரியாதாம்"

இதைப்பற்றி நான் பட்டரைக் கேட்டேன்.

"பொன்னுசாமியை அந்த இரவுக்கப்புறம் நான் பார்க்கவேயில்லை" யென்றார் பட்டர்.

அதற்கப்புறமும் பட்டர் சிமாவைப் பார்க்கவில்லை. இதற்கெல்லாம் எழெட்டு வாரங்களுக்கப்புறம் வைவஸ்வத பட்டர் இவ்வுலகை விட்டு நீங்கிவிட்டார்.

அவர் உயிலில் கண்டபடி அவருடைய சித்திரமால் இப்போது சிமாவுக்குச் சொந்தமாயிருக்கிறது.

* * * *


# அதி அற்புத அழகு

சுகாதாரம் மிகுந்த

## டில்பஹார் ஸோப்பு

(ரிஜிஸ்டர்ட்)

மூன்று கட்டிகளின் விலை

**ஒரு ரூபாய் தான்**

(தபால் செலவு தனி)



டில்பஹார் ஸோப்பு சிறந்த சுத்திகரிப்பைத் தரும் கிருமி நாசினி. சரும எரிச்சல் அல்லது அரிப்பை அகற்றிச் சருமத்தைப் பாதுகாக்கும். அழகை விருத்திசெய்யும்.



## உங்கள் சருமத்தைப் பாதுகாருங்கள்!

ஆட்டங்களில் ஈடுபட்டுள்ளவர்களும், இதர பெண்களும் காமினியா ஸ்னோ வின் சருமப் பாதுகாப்பையும், போஷாக்கையும் பெரிதும் பாராட்டுகிறார்கள். சருமத்திற்குப் புத்துயிரும், உல்லாசமுமளிப்பது. சருமச் சுருக்கங்கள் முதலியவற்றை நீக்குவதில் சிறந்ததென சிபார்சு பெற்றது. விலை புட்டி 1-க்கு 10 அணா. தபால் செலவு தனி. தபால் செலவுக்காக 1 அணா ஸ்டாம்பனுப்புவோருக்கு சாம்பிள் இலவசம்.

சோல் ஏஜண்ட்:—

**The Anglo Indian Drug & Chemical Co**

**285, Jumma Musjid, BOMBAY 2.**

ஸ்டாக்கிஸ்டுகள்: ஜே. எஸ். சேட் & கம்பெனி,

68, பைக்ராப்ட்ஸ் ரோட், — திருவல்லிக்கேணி.

நமது தொடர் கதை



# ராதா

(திருமலை ஸ்ரீமான் சுந்தரம் பிள்ளை)

### முன் கதைச் சுருக்கம்

மகேந்திரத்தில் பாரெஸ்ட் ரேஞ்சராயிருந்த **நந்தகோபமுதலியாரின்** குமாரி **ராதாவிற்கு அமரேசன்** செட்டியார் தமிழ்ப்படிப்புச் சொல்லிக்கொடுத்து வருகிருர். நந்தகோபரும் அவரது மனைவி **அநந்தகல்யாணி** அம்மாளும் தாய் தகப்பனற்ற அமரேசனை மிகவும் பக்ஷமாக நடத்திவருகின்றனர்.

நந்தகோபரின் பிறப்பிடம் பாற்கடல். அங்கு அவரது மைத்துனன் **நச்சுமுதலியார்** தமது அந்தரங்க நண்பன் **பிச்சு அய்யர்** இருவரும் ஏக போகமாகவிருந்துவந்தனர். **தண்டபாணி** தன் சிற்றப்பனைப்போல் குடி, விலைமாதர்கள் முதலிய விஷயங்களில் ஈடுபட்டான். நந்தகோபர் தாம் ஸ்வயமாகச் சம்பாதித்த பணத்தைக் கொண்டு பாற்கடலில் சொத்துக்கள் வாங்கியிருந்தார். அதை நச்சு முதலியே மேற்பார்வை பார்த்து வந்தார்.

மகேந்திரம் இளவரசனுக்கும் அமரேசனுக்கும் பகை ஏற்பட்டதன் காரணமாகவும் நச்சு முதலியின் துர்ப்போதனையால் நந்தகோபர் அமரேசனை நிறுத்திவிட்டபடியாலும் அமரேசன் மகேந்திரத்திலிருந்து வெளியேறினுன்.

ராதாவுக்கும் தண்டபாணிக்கும் மணமகளின் சம்மதமின்றி விவாகம் நடைபெறுகிறது. பூர்ண கர்ப்பிணியாயிருந்த அநந்தகல்யாணி ஒரு ஆண் மகவைப் பெற்று உயிர்துறந்தாள். ஆராத்துயரத்திலாழ்ந்த நந்தகோபரை நச்சுமுதலியார் தேற்றித் தன் குமாரி **காளத்தியை** விவாகம் செய்து வைக்கிருர். பாற்கடல் தாசி **பஞ்சாமிர்தம்** நச்சுமுதலிக்கும் தண்டபாணிக்கும் வேண்டியவள். ஈரோடு கருணநிதி சாஸ்திரிகளுக்குத் திருட்டுப் போன சில சொத்துக்கள் சம்பந்தமாக நச்சுமுதலி கைது செய்யப்பட்டு அவருக்கு மூன்று வருஷ சிறைவாஸ தண்டனை விதிக்கப்படுகிறது.

தண்டனை காலம் முடிந்து வெளிவந்த நச்சு முதலியைத் தண்டபாணிசிறிதும் மதிக்கவில்லை யாகையால் அவனைத் தொலைத்துவிட பிச்சு அய்யருடனும் எமகாலன் என்ற பறையனுடனும் சதி செய்து தண்டபாணியைக் கொலை செய்துவிடுகிருர். நந்தகோபர் தம் உத்தியோகத்தை ராஜிநாமாச் செய்து விட்டுக் குடும்பத்துடன் கொத்துவால் தோப்பில் வசித்து வந்தார். காளத்தி நந்தகோபருடன் சண்டையிட்டுக்கொண்டு பிறந்த வீட்டுக்குச் சென்று விட்டாள்.

**டாக்டர் நாயனுர்** சென்னைப் பத்திரிகை யொன்றின் ஆசிரியர். நல்ல வைத்தியரும கூட. அவரது புகழ் எங்கும் விஸ்தரித்திருந்தது. அவர் தமது சுற்றுப் பிரயாணத்தில் கொத்துவால் தோப்பிற்கு வந்திருந்தார். அங்கு நந்தகோபர் வீட்டிலில்லாத சமயம் அவரது மகன் மாதவனுக்கு நோய் உண்டாகி யிருந்தது. டாக்டர் நாயனுர் இதைக் குணப்படுத்தினுர்.

## 16. பழங் கதை

பகற் போஜனம் முடிந்தபின் டாக்டர் நாயனுரும் சுலோசன நாயுடுவும் பங்களாவின் பின் வராந்தாவிலுட்கார்ந்து சம்பாஷித்துக்கொண்டிருந்தார்கள். அந்தசமயம், சூடாமணியென்ற சிறுவனையும் அவன் தகப்பன் ஜட்காவண்டி முப்பிடாரி மூப்பனையும் பிடித்திழுத்துக்கொண்டு வந்த ஸப் இன்ஸ்பெக்டர் தாதாமியா சாகிபைக்கண்டு,

சுலோ:—ஸார், ஆசாமிகளைக் கொண்டு வந்துவிட்டீர்களோ?

தாதா:—தங்களிடம் கொண்டு வருமுன்னமே கேஸையும் துலக்கிவிட்டேன். அந்தப் பையன் மாதவனிடம் ஒரு ஸ்டேட்டுமெண்டு வாங்க வேணும்.

நாய:—முதலில் நீங்கள் துலக்கின சங்கதியைச் சொல்லுங்கள், கேட்போம்.

தாதா:—நான் போய் இருவரையும் தந்திரமாய்ப் பிடித்துக்கொண்டேன். இந்தப் பையன் சூடாமணியைப் பயமுறுத்திக்கேட்டதில், தனக்கு ஒரு மோசமும் தெரியாதென்றும், தன் தகப்பன் முப்பிடாரி ஒரு லட்டுருண்டையைக் கொடுத்து அதை மாதவனுக்குக் கொடுக்கும்படி சொன்னதாயும் அந்தப்படி தான் அதை மாதவனுக்குக் கொடுத்ததாயும் சொல்லுகிருன். ஆனுல் முப்பிடாரி தனக்கு ஒன்றுமே தெரியாதென்று விழுங்குகிருன். அக்கம்பக்கத்தில் விசாரித்ததில், வடக்கேயிருந்து ஒரு முன்குடுமி பிராமணன் வந்து இரண்டு மூன்று நாள் இந்த முப்பிடாரி வீட்டிலிருந்ததாயும் அவனும் இவனும் நேற்றுக்காலையில் பள்ளிக்கூடத்தைச் சுற்றிக்கொண்டலைந்ததாயும் உபாத்திமார்கள் சொல்லுகிருர்கள். இப்பொழுது பகல்வேளையில் பயல் முப்பிடாரி ஒன்றும் சொல்லான்; நாளை விடியுமுன் எல்லா ரகஸ்யத்தையும் கக்கிவிடுவான். கேஸ் நல்ல கேஸ். தயவுசெய்து அந்த மாதவனிடம் ஒரு ஸ்டேட்டுமெண்டு வாங்கித் தாருங்கள்; வாங்கிக்கொண்டுதான் இவர்களை உள்ளே அடைக்கவேணும்.

நாய:—மிஸ்டர் நாயுடுகாரு, மாதவனை இங்கே மெதுவாய் எடுத்துக்கொண்டு வரும்படி சந்தனத்தை யனுப்புங்கள்.

சுலோ:—அடே சந்தனம், நாங்கள் சொன்னதாய் அந்தப் பெரியம்மாளிடம் சொல்லி, மாதவனை மெதுவாய் இங்கே தூக்கிக்கொண்டு வா.

சந்த:—எஜமான், உத்தரவு (என்று வடக்குத் தோப்பிற்குப் போய், மாதவனை யெடுத்துக்கொண்டு வந்து நாயுடு முன்பு விட்டான்.)

சுலோ:—மாதவ, உனக்கு இந்தப் பையன்தானு லட்டுருண்டை கொடுத்தான்?

(என்று மாதவனை யெடுத்து மடிமேல் வைத்துக்கொண்டு கேட்டார்.)

மாத:—ஆம், இந்தப்பையன் தான் (என்று சூடாமணியைச் சுட்டிக்காட்டி மற்ற விவரங்களையும் உள்ளபடியே சொன்னுன்.)

தாதா:—(மாதவன் வாக்குமூலத்தை எழுதி வாசித்து, அவன் கையொப்பமும் நாயுடுவிடமும் நாயனுரிடமும் சாக்ஷிக் கையொப்பமும் வாங்கிக்கொண்டு) ஸார், மணி இரண்டாய்விட்டது. சாப்பிடப் போகிறேன்; நாளை அந்த முன்குடுமிப் பிராமணன் யாரென்றும் துலக்கிவிடுகிறேன்; சலாம்

என்று விடைபெற்று, சூடாமணியையும் முப்பிடாரியையும் முன்னே தள்ளிக்கொண்டு ஸ்டேஷனுக்குப் போய்விட்டார். அவர் மாதவனுடைய வாக்குமூலத்தை வாசித்த பொழுது, "நந்தகோப முதலியார் மகன் மாதவன்" என்ற முதல் வக்கணையைக் கேட்ட டாக்டர்,

நாய:—(ஆவலுடன்) மிஸ்டர் நாயுடுகாரு, மாதவன் தகப்பனுர் எங்கே யிருக்கிருர்?

சுலோ:—ஏதோ ஜோலியாய் சென்னைக்குப் போயிருக்கிருர்; நல்ல யோக்கியர்; மகா ஸாது; எனக்கு ஆப்த நண்பர்.

நாய:—அவர்களுக்குப் பூர்வீகமே இந்த ஊர்தானு? குழந்தைகள் எத்தனை?

சுலோ:—பூர்வீகம் சேலம் ஜில்லாப் பாற்கடல்; குழந்தைகள் இவனும் இவன் தமக்கையும், இரண்டு பேர்கள் தான். மிஸ்டர் நாயனுர் கொஞ்சம் படுத்திருங்கள். நான் கிழப்பாளயத்திற்குப் போய்விட்டு மாலையில் வந்து விடுகிறேன்.

நாய:—நல்லது; போய்விட்டுச் சீக்கிரம் வந்து விடுங்கள். (என்று நாயுடுவை அனுப்பிவிட்டு) மாதவா, சும்மா என் கிட்டவா; சோபாவில் உட்காரு; உன் அக்காள் பெயரென்ன? எங்கே யிருக்கிருள்?

மாத:—அக்கா பெயர் ராதா; இங்கேதான் இருக்கிருள்.

நாய:—நல்லது அவளுக்கு விவாகமாய்விட்டதா?

மாத:—(பதில் சொல்லத் திகைத்து)என்னவோ எனக்குத் தெரியாது.

சந்த:—அந்த அம்மா கழுத்தில் ஒன்றையும் காணவில்லை; ஆனுல் சிவப்புப் புடவைதான் உடுக்கிருள்; என்னவென்று தெரியவில்லை. இவனுடைய தாயார் தெலுங்குமுதலியார் மனைவிக்குப் பிறந்தவூர் இது தான். அந்தம்மா முன்பே இறந்து போய்விட்டார்கள்.

நாய:—மாதவா, உன் தாயார் இப்போது இல்லையா?

மாத:—தாயாரை எனக்குத் தெரியாது; பாட்டிமார் ரெண்டுபேர் இருக்கிருர்கள்.

(என்னும்போது, வடக்கு வேலியின் இடைத்தொண்டில் நின்றுகொண்டு)

**மனோரஞ்சனி**
இது ஒரு மாதாந்த நாவல் சஞ்சிகை. 1937 ஜனவரி முதல் சம்சார சன்னியாசி என்னும் நாவல் தொடர்ச்சியாய் வெளிவரும். இதன் வருட சந்தா ரூ. 1-8. மாதிரிக்காபி இனும்!
எம். எஸ். ராமுலு கம்பெனி,
286, எஸ்பிளனேட், மதராஸ்.



பூசையாச்சி:—கார்த்திகேயன் ஆதரவு எங்களுக்கு இல்லாவிட்டால் அந்தச் சண்டாளன் நச்சுமுதலி என்னையும் என் மக்களையும் கொலை செய்தாலும் செய்திருப்பான்.

பூசையாச்சி:—மாதவா, அடே மாதவா (என்று கூவி யழைத்தாள்)

நாய:—பெரியம்மா இங்கே ஒருவருமில்லை; நான் மட்டும் தானிருக்கிறேன்; சும்மா வாருங்கள்; மாதவனுக்குக் காலையில் என்ன கொடுத்தீர்கள்?

பூசை:—(மெல்ல இடைத்தொண்டைத்தாண்டித் தெற்குத் தோட்டத்திற்குள் வந்து) ஐயா, புண்ணியவான் நீங்கள் தான் என் பிள்ளையைக் காப்பாற்றினீர்கள்! தெய்வம் போல் வந்து சேர்ந்தீர்கள். மாதவனுக்குப் பாயஸம்தான் வைத்துக் கொடுத்தேன். சாதம் எப்போகொடுக்கலாம்.

நாய:—நாளைக் காலையில் கொடுங்கள். மாதவன் தங்கள் பேரனா?

பூசை:—பேரன்தான்; அவனொருவனை நம்பி நாங்கள் நாலு பேர் இருக்கிறோம். காலையில் ஏதோ பாஷாணம் என்று சொன்னீர்களே? என்ன சங்கதி ஐயா?

நாய:—அதுவிஷயமாய்த்தான் மாதவனையெடுத்துக் கொண்டு வரச்சொன்னேன்; பாதி வெளியாய்விட்டது? காலையில் விவரமாய்ச் சொல்லுகிறேன். மாதவன் உங்களுக்கு எப்படிப் பேரன்?

பூசை:—எனக்கு மகன் பிள்ளைபேரன். காலையில் தங்களிடம் பேசிக்கொண்டிருந்த பெரியம்மாளுக்கு மகள் பிள்ளை பேரன்; இவன் பிறந்தவுடன் தாயைத்தின்றுவிட்டான். இவனுக்கு மூத்தவளொருத்தி இருக்கிறாள். எல்லாருமாய் வளர்க்கிறோம்.

நாய:—அப்படியா? தங்கள் மகன்...

பூசை:—அவன் அலைந்த காட்டிற்கு அளவில்லை. நெல்லூராம்—மகேந்திரமாம்—அங்கே தமிழே கிடையாதாம்—எங்கே யெல்லாமோ அலைந்துவிட்டு ஒரு வருஷமாய் மக்களோடு குடியிருக்கிறான்.

நாய:—நல்லது, உங்கள் பேர்த்திப் பெண்ணுக்கு விவாகமாய்விட்டதா?

பூசை:—ஐயா, அதெல்லாம் பெரிய கதை! எல்லா இழவுமாய்விட்டது. புருஷன் வீட்டில் காலெடுத்து வைக்குமுன்னமே அறுத்துவிட்டாள். என் மகனுடைய இரண்டாவது மனைவி அவள் அப்பன் வீட்டிலிருக்கிறாள். அவளும் அப்பனும் கூடித்தான் மாதவனுக்கு இந்த மோசம் செய்திருப்பார்களென்று நாங்கள் இந்நேர வரை பேசிக்கொண்டிருந்தோம் என்றிவ்வாறு, நாயனார் கேட்ட கேள்விகளுக்கெல்லாம், பூசையாச்சி சுருக்கம் சுருக்கமாய் மறு மொழி சொல்லிக்கொண்டு வரவே, டாக்டர் நாயனார் ராதாவின் போலி விவாகம், மாதவன் ஜனனம், அநந்தகல்யாணி மரணம், நச்சுமுதலி கேஸ், தண்டபாணியின் கொலை, ராதாவின் வைதவ்வியக் கோலம், கொத்துவால் தோப்பிற்கு வந்த வரலாறு முதலிய சென்ற ஏழு வருஷத்து சமாசாரங்களையும் பற்றி ஆதியோடந்தமாய்க் கிரகித்து அறிந்துகொண்டார்; ஒவ்வொரு சமாசாரத்தையும் கேட்கக் கேட்க, தன் மனத்தில் அதிகரித்துக்கொண்டு வந்த ஆச்சரியத்தையும் துக்கத்தையும் அடக்கிக்கொண்டு,

நாய:—ஆகவே, தற்சமயம் உங்கள் நான்கு பேருக்கும் மாதவனைத் தவிர வேறே ஆதரவில்லை. உங்களுக்கும் ஒரே ஆண்மகன்; உங்கள் சம்பந்திக்கும் ஒரே பெண்மகள் தானுக்கும்?

பூசை:—என் சம்பந்திக்கு அநந்த கல்யாணி ஒரு பெண் தான்; ஆனால், எனக்கு நந்தகோபனைத் தவிர, வேறொரு பெண்மகளு மிருந்தாள்; அவள் கதை பெரிய கதை; அவள் காணமற் போய் விட்டாள். எல்லாம் இந்தப் பாதகன் நச்சு முதலியினால்தான் அவன் என் குடும்பத்தைப் பலவிதமாய்க் கெடுத்துவிட்டான்.

நாய:—ஓகோ! உங்கள் மகளொருத்தியிருந்தாளா? அவள் எப்போது என்ன விதமாய்க் காணமற் போய் விட்டாள்?

பூசை:—அந்தக் கதையைக் கேட்க ஒரு நாள் செல்லும். ஐயா, என் பர்த்தா இறக்கும் போது நந்தகோபனுக்கு ஒரு வயது; காணமற் போன என் மகளுக்கு மூன்று வயது; அவள் பெயர் கற்பகம். அவளை நினைக்கும்பொழுது என் குடல் கொதிக்கிறது! என் பர்த்தா பிள்ளைகளுக்கு ஒன்றும் வைத்து விட்டுப் போகவில்லை. என் நகைகளை விற்று வட்டிக்குப் போட்டு இரண்டு குழந்தைகளையும் கஷ்டப்பட்டு வளர்த்தேன். அந்தக் காலத்தில், பண்ணை வீட்டுக்காரர் நல்ல நிலைமையிலிருந்தும்


உயர்ந்த
வைரங்கள்
T. R.
ஜோஷி & சன்ஸ்,
Diamond Merchants
38. ஏகாம்பரேசுவரர் அக்ரஹாரம்
பி. டி. மதராஸ்




நரைமயிரை
அகற்றுங்கள்



உங்களது தலைமயிர் வெகுகாலமாகவோ, மிக அதிகமாகவோ நரைத்திருந்தால் விவலேன் ஹேர் ஆயிலை உபயோகித்தால் நரை நீங்கித் தலைமயிர் கருகருவென்று பழையபடிப் பிரகாசிக்கும். இன்றே விவலேன் எண்ணெயை உபயோகியுங்கள். அதிக நரையில்லாவிடில் சிறிய பாட்டில் ரூபா 1-12. நரை முற்றியிருந்தால் பெரிய பாட்டில் ரூ. 3. ஏககாலத்தில் 3 பாட்டில்கள் வாங்கினால் தபால் செலவு இனாம்.
சயண்டிபிக் பப்ளிஷிங்கம்பெனி
(மெடிகல் டிபார்ட்மெண்டு, S. 15)
பவானிப்பூர், — கல்கத்தா
மதராஸ் ஸ்டாக்கிஸ்டு:—
ஜே. ஹஸாரிமால் & கம்பெனி,
260, சைனாபஜார் ரோட்,
ஸப் ஸ்டாக்கிஸ்டு:—
தாதா & கம்பெனி, மருந்து வியாபாரிகள், 52, நைனியப்ப நாயக்கன் தெரு, பி. டி. மதராஸ்.
செகந்தராபாத் ஸ்டாக்கிஸ்டு:—
பரோக் பிரதர்ஸ், ஜும்மா மஸ்ஜித்

# செவிடு

"டெப்கில்லர்" செவிட்டுத் தன்மையை சாசுவதமாகப் போக்கிவிடும். இன்னும் காதில் ஏற்படும் இதர கோளாறுகளையும் அகற்றிவிடும். எவ்வளவு நாள்பட்ட செவிடாக விருந்தாலும் சரி, சிறிதும் சந்தேகமன்றி நிரந்தரமாக நிவர்த்திக்கப்படும்; செவிடர் செவ்வையாகச் செவியுறுகிறார். கால்செவிடு, அரைச்செவிடு அல்லது முழுச்செவிடு எதுவாகவிருந்தாலும் அக்கரையில்லை; நீண்டகால ஜலதோஷம், இருமல், ஜுரம், தொண்டைக் கோளாறு, மூக்குக் கோளாறு முதலிய எக்காரணங்களால் ஏற்பட்ட செவிடாயினும் சரி குணமாகிவிடும். சீழ்வடிதலும் நின்றுவிடும். ஆயிரக்கணக்கானவர்கள் குணம் பெற்றிருக்கின்றனர். விலை ரூ. 5; தபால் செலவு 7-அணா

MAHAMBS TRADING COMPANY OF ASIA, Indian Depot, P O. Box 2186 Bombay

ஸ்டாக்கிஸ்ட்ஸ்:—அப்பா அண்டு கம்பெனி, 286, சைனா பஜார் ரோட், மதராஸ்.

எங்களைச் சற்றும் கவனிக்கவில்லை. அந்தக் கிழவன் பவாநந்த முதலியார் ஏதாவது உதவி செய்தாலும், இந்த நச்சு முதலி ஒன்றும் செய்யவொட்டான். இவனுக்குத் தாய் மாமன் மனைவிதான் நான். அப்படியிருந்தும் ஒருவராலும் எனக்கு ஒரு உதவியுமில்லை. பாற்கடல் நம்பர்க் கணக்கு திருப்பூவணம் பிள்ளையென்று ஒருவர் இருந்தார். அவர் என் பர்த்தாவுக்கு இஷ்டர். எனக்கு அண்ணா என்ற முறை.

நாய:—பெரியம்மா, உங்கள் பர்த்தா பெயர் யார் பேரைப் போலிருக்கும்.

பூசை:—(சிறிது நகைத்து) என் பேர்த்திக்கும் அவர்கள் பெயர்தான். அவள் பெயரோடு பெருமாள் பெயரும் சேர்ந்து வரும்.

நாய:—உங்கள் பேர்த்தி பெயர் ராதா. அதோடு பெருமாள் பெயரை எப்படிச்சேர்ப்பது? ராதாப் பெருமாளா?

பூசை:—(பின்னும் சிரித்து) கோபாலனுக்கு இன்னொரு பெயருண்டல்லவீ? பாரதத்தில் அடிக்கடி வருமே? தங்களுக்குத் தெரியாமலிருக்குமா?

நாய:—ஓகோ! கிருஷ்ணனா? அதாவது ராதாகிருஷ்ண முதலியாரா?

பூசை:—இதோ கண்டு பிடித்துக்கொண்டீர்களே? அந்தக் கணக்கப்பிள்ளைக்குக் கார்த்திகேயன் என்று ஒரு மகன் இருந்தான். அவருடைய பெண்சாதி இறந்துபோய் விட்டபடியால், அவரும் அந்தப் பையனும் நெடுநாள் என் வீட்டில் சாப்பிட்டு வந்தார்கள். அவர் அந்நியமான வேளாளனாயிருந்தாலும் பந்துக்களைப்பார்க்கிலும் நேசமாயிருந்தார். என் பர்த்தா இறந்து கொஞ்ச நாளைக்கெல்லாம் அவரும் இறந்து போனார். பையன் கார்த்திகேயனை என் கையிற் பிடித்துக்கொடுத்துவிட்டு மரணமானார். என் பிள்ளைகளோடு பிள்ளையாய்த் தாய் தகப்பனில்லாத அந்தக் கார்த்திகேயனையும் நானே வளர்த்தேன். அவனும் பாடிப்படித்துப் பெரியவனாய் வளர்ந்து தகப்பனுடைய கணக்கு வேலையையும் ஒப்புக்கொண்டு, ஊருக்கெல்லாம் நல்ல பிள்ளையென்ற பெயரெடுத்து, நன்றாய் வேலை பார்த்து வந்தான். முன்னமே பண்ணைவீட்டிற்கும் கணக்கப்பிள்ளை வீட்டிற்கும் பரம்பரை விரோதமுண்டு. பின்னால் கார்த்திகேயன் கணக்கு வேலைக்கு வந்த பின்னும் அவனுக்கும் நச்சு முதலிக்கும் பெரிய பகையுண்டாய்விட்டது. ஆனாலும் நச்சு முதலி, பெரியபணக்காரனாகையால், அந்தப் பிள்ளையாண்டான் கார்த்திகேயன் எவ்வளவு படிப்பாளியாயும் கெட்டிக்காரனாயுமிருந்தும் ஒதுங்கியொதுங்கித்தான் நடந்து வந்தான். அவன் என் வீட்டில் சாப்பிடுகிறதை வைத்து நச்சு முதலிக்கு என் பேரில் கோபம் உண்டாயிற்று. இப்படியிருக்கும்பொழுது என் மகள் கற்பகம் சோபனமானாள். அவள் நன்றாய்ப் படித்து மிகவும் லக்ஷணமாயிருந்தபடியால் நச்சு முதலி அவளைத் தனக்குக் கொடுக்க வேணுமென்று கேட்டான். எனக்கு இஷ்டமில்லை; ஒருவர்க்கும் இஷ்டமில்லை.

நாய:—உங்களுக்கு ஏன் இஷ்டமில்லை? அவர்தானே முறை மாப்பிள்ளை?

பூசை:—முறை மாப்பிள்ளையானாலும், அவனுக்கு மூன்று தபா விவாகமாகி, மூன்றாவது மனைவி அப்போது உயிரோடிருந்தாள். அவனுக்கு வயது நாற்பது; எனக்கே ஆறுவயதுக்கு மூத்தவன்? கற்பகத்துக்கு அப்போது வயது பதினாறு. அந்த சமயம் என் குடும்பத்தைப் பாதுகாத்து வந்தவன் கார்த்திகேயனாகையால், அவனிடம் யோசித்ததில் அவனும் கூடாதென்று தடுத்துவிட்டான். தீராதென்று என் பெண்ணைக் கொடுத்திருந்தாலும், நச்சு முதலியின் மற்ற நான்கு பெண்சாதிமாரைப் போலவே, என் மகளும் தற்கொலை செய்து இறந்திருப்பாளே தவிர வாழவா போகிறாள்? அவனுக்குப் பயந்து ராதாவைக் கொடுத்து என்ன பலனடைந்தோம்.

நாய:—அப்பொழுது அந்தக் கணக்கப்பிள்ளைக்கு வயதென்ன?

பூசை:—அவனுக்குப் பத்தொன்பது இருபது வயதிருக்கும். என் மகளுக்கு மூன்று வயதுக்குத்தான் மூத்தவன். கார்த்திகேயன் போதனையின் பேரில் நான் பெண்கொடுக்க மாட்டேனென்று சொல்லிவிட்டதாய் நினைத்து, நச்சு முதலி என்னைப்பலவிதமாய் இம்சை செய்தான். இரவில் என் வீட்டில் கல்லெறியும்படி ஏவினான். ஒரு தபா தீயும் வைத்துவிட்டான்.

நாய:—உங்கள் பெண்ணை வேறே மாப்பிள்ளைக்கு ஏன் கொடுக்கவில்லை?

பூசை:—வேறே மாப்பிள்ளை வந்தால்தானே கொடுக்கலாம்? ஏகதேசமாய்க் கேட்டு வந்த மாப்பிள்ளை வீட்டுக்காரரை நச்சுமுதலி கலைத்துவிட்டான். அவன் முறை

(35-ம் பக்கம் பார்க்க)





தலைவலி, இராத்தூக்கமின்மைக்கு ப்ரிங்கால் உபயோகியுங்கள். ப்ரிங்கால் துல்லிய மணமானது; மயிர் உதிர்தல், பால்ய நரை இவற்றிற்கும் சிறந்தது

BHRINGOL

ப்ரிங்கால் என்பது ஆயுர்வேத முறைப்படியான மகா ப்ரிங்கராஜ தைலம்;
தயாரிப்பவர்கள்
கல்கத்தா கேமிகல் கம்பெனி,
லிமிடெட்,

HO



இதோ!
நீங்கள் ஜலதோஷத்தை
விரைவில் ஒழிக்கலாம்.


ஜலதோஷத்தை அப்படியே விட்டு வைப்பது ஆபத்தானது. இரவிலும் காலையிலும் மிஸ்டலை உபயோகியுங்கள். இலவச டிராப்பருடன் கூடிய ஒரு புட்டி மிஸ்டல் வாங்கிக்கொள்க.

பிரயாணத்தின்போதும், உங்கள் மூக்கும், தொண்டையும் தூசி நிறைந்து எரிச்சலெடுக்கையிலும் மிஸ்டல் மேலான நிவர்த்தியளிக்கும்.


ஜலதோஷத்தை மிஸ்டல்அடியோடு அகற்றும்

தாது புஷ்டியைக் கொடுப்பதில்
சிறந்தது



சி.எம். சாமி
மன்மதக் குளிகை


இது உடலுக்கு வலுவைக்கொடுத்து ஆண்மையை அதிகப்படுத்தி இரத்த விருத்தியையும் வீரிய விருத்தியையும் திடகாத்திரத்தையும் தரும்.
20 குளிகை ரூ 2/-

பிராஞ்சு:—1/54. அருணசலநாயகன் தெரு, சிந்தாத்திரிப்பேட்டை, மதராஸ்.
மலையப்பசாமி வைத்தியநாயனிடமும் | ... எம். ராமுலு கம்பெனி. 286, எஸ்பிளனேட், மதராஸ்.

தென்னிந்தியப் பிரமுகர்கள்

## மஹாமஹோபாத்யாய பரவஸ்து

# வெங்கடாங்காச்சாரியார்

(1822—1900)

(கே. எஸ். ஆர்.)



### மஹாமஹோபாத்யாயர் பட்டம் ஆரம்பமான விதம்

மஹாமஹோபாத்யாய பட்டம் முதன்முதல் 1887-ம் வருஷம் பிப்ரவரிமாதம் 16-ம் தேதியன்று, காலஞ்சென்ற விக்டோரியா மஹாராணியாரின் அரசாட்சியின் 50 வருஷ காலப் பூர்த்தி விழாவின்போது இத்தேசத்தில் வழங்கப்பட்டதாகும். ஆகவே, இப்பட்டம் வழங்கவாரம்பித்து இப்போது சரியாக் ஐம்பது வருஷங்கள் முடிவாகின்றது. சம்ஸ்கிருத பாஷையில் மஹோன்னதமான ப்ராவீண்யம் உள்ளவர்களுக்கு இப்பட்டம் வழங்கப்படவேண்டுமென்று அப்போது நிச்சயிக்கப்பட்டது. தவிரவும் இப்பட்டதாரிகளுக்கு தர்பார் முதலிய ராஜஸதஸ்ஸுகளில், 'ராஜா'' என்ற பட்டம் வழங்கப்பட்டவர்களுக்கு அடுத்த ஸ்தானம் நிர்ணயிக்கப்பட்டது. இக்காரணங்கள்பற்றி இப்பட்டம் மிக்க மஹிமை பொருந்தியது என்பதை நாம் மறக்கக் கூடாது. இது நிற்க, இப்பட்டத்தை முதன்முதலில் இந் தென்தேசத்தில் இந்தியா கவர்ன்மெண்டார் நாலு பெரியார்களுக்கு வழங்கிக் கௌரவித்தனர். திருப்புட்குழி அப்பா என்று ஜகத்பிரசித்தராகவிருந்த மஹாமஹோபாத்யாய ஸ்ரீ கிருஷ்ணதாதார்ய மஹாதேசிகன், மன்னார்குடி ராஜுசாஸ்திரிகள் என்று கீர்த்தி மிகுந்த மஹாமஹோபாத்யாய தியாகராஜாத்வரீகள், ஆந்திரம் முதலான வட பக்கங்களில் வியாபித்த பெருமையையுடையவரான மஹாமஹோபாத்யாய பரவஸ்து வெங்கடரங்காசார்ய ஆர்யவாருள் அவர்கள், மஹாமஹோபாத்யாய பராஸர அழகியசிங்க பட்டர் ஆகிய நால்வர்களே இப்பட்டத்தை முதன் முதல் ஸ்வீகரித்த பெருமையையுடையவர்கள். இப்பெரியார்களுள் பரவஸ்து வெங்கடரங்காச்சார் ஸ்வாமி முக்கியமாக சம்ஸ்கிருத கலாபிவிருத்திக்கும் ஹிந்து மத தர்ம பரிபாலனத்திற்கும், பொதுவாக ஸ்ரீ பகவத் ராமானுஜ சந்தாந்த வர்த்தனத்திற்கும் தமது நீண்ட ஆயுள் காலத்தில் செய்த சேவை மிக உயர்ந்ததாகும்.

### பரவஸ்து குடும்பம்

மஹாமஹோபாத்யாய பரவஸ்து வெங்கட ரங்காச்சார்ய ஸ்வாமி சகம் 1744-ல் அதாவது சித்ரபானு வருஷம் மேஷ மாதம் கிருஷ்ணபக்ஷத்தில் பிரதமையன்று (1822-ம் வருஷத்தில்) உதித்தனர். பாரத்வாஜ கோத்திரத்தைச் சார்ந்த பரவஸ்து பட்டர்பிரானின் குலத்தில் ஒரு உயர்ந்த ஸ்ரீவைஷ்ணவ குடும்பத்தில் தோன்றியவர் இவர்.

"சக்ரோரி அனுராதயுஜி
சித்ரபானௌ
மேஷே அந்த்ய பக்ஷே பாதி
பத்புதிதா: |
ஸ்ரீமத் பாரத்வாஜ குலேச
பட்ட
நாதாந்வயே வெங்கட ரங்க
நாதா: | "

இந்த ஸ்லோகம் இப்பெரியாருடைய ஜனனத்தைக் கோஷிப்பதாகும்.

இந்த பரவஸ்து குடும்பத்தினர் முதலில் திருப்பதியில் இருந்து பின்பு வெங்கடகிரிக்கு வந்து சேர்ந்தவர்கள். பதினெட்டாம் நூற்றாண்டில் ஹைதர் ஆலி கர்நாடகப் பிரதேசத்தைப் பெரிதும் உபத்திரவித்த போது அதனால் சேர்ந்த ஹிம்சைகளைத் தாங்கமுடியாமல் வடக்குப் பக்கம் கிளம்பி விட்டனர். இச்சமயத்தில்தான் இவரது தகப்பனாரான ஸ்ரீநிவாஸாச்சாரியர் விசாகப்பட்டணம் ஜில்லாவிலுள்ள விஜயநகரத்திற்கு, தமது தாயார், பாட்டி, அத்தை முதலிய நெருங்கிய பந்துக்களுடன் வந்து சேர்ந்தார். அப்போது ஸ்ரீநிவாஸாச்சாரியருக்கு சுமார் இரண்டு வயதிருக்கலாம். அவருடைய உறவினர் ஒருவர் விஜயநகரத்தில் அக்காலத்தில் இருந்துவந்தபடியால் அவரும் அவரது பந்துக்களும் அங்கு தங்கினர். ஸ்ரீநிவாஸாச்சார்யருடைய வித்யாப்யாஸம் அவ்வூரிலேயே நடைபெற்றது. அவர் தமது படிப்பைப் பூர்த்தி செய்துகொண்டு, விவாகத்திற்குரிய பிராயத்தை அடைந்தவுடன் ஹைதர் ஆலி காலமாகிவிட்டான். ஆதலால் கர்நாடகப் பிரதேசம் திரும்பவும் அமைதியுடன் விளங்கியது. அவர் தமதூருக்கு வரும் நோக்கத்துடன் விசாகப்பட்டணம் வரையில் வந்துசேர்ந்தார். அங்கு வழியில் கோதே வம்சத்தைச் சேர்ந்த ஒரு சிறு ஜமீன்தார் அவரது பாண்டித்தியத்தைப் பார்த்து மெச்சியவராகி, அவருக்குத் தாம் மாதம் கொஞ்சம் சன்மானம் கொடுப்பதாக வாக்களித்து அவரைத் தம்முடனேயே இருக்கும்படி தூண்டினர். பின்பு ஸ்ரீநிவாஸாச்சார்யரும் ஸ்வதேசம் சென்று விவாகம் புரிந்துகொண்டு மீண்டும் விசாகப்பட்டணத்திற்குத் திரும்பினர். பரவஸ்து வம்சத்தினர் விசாகப்பட்டணத்தில் குடியேறி நிலைத்ததற்குக் காரணம் இதுதான். ஸ்ரீநிவாஸாச்சார்யரும் ஒரு மஹா பண்டிதராகத் திகழ்ந்தவர். சம்ஸ்கிருதத்திலும் தெலுங்கிலும் அவர் அநேகம் கிரந்தங்களை எழுதினர். இவர் எழுதி அச்சிட்டவற்றுள் முக்கியமானது "ஸர்வ சப்த ஸம்போதினி'' என்ற மகுடத்துடன் கூடிய சம்ஸ்கிருத-தெலுங்கு அகராதியாகும்.

ஸ்ரீநிவாஸாச்சார்யருக்கும் மங்கம்மாள் என்பவருக்கும் இரண்டாவது புத்திரராக வெங்கடாங்காச்சாரியார் பிறந்தார். இவர் சிறுவயது முதற்கொண்டே சூக்ஷ்மமான விஷயங்களையெல்லாம் லகுவாக எளிதில் கற்றுக்கொண்டு வந்தார். இவர் எட்டாவது வயதிலேயே சம்ஸ்கிருத பாஷையில் பெரிய வித்வானாக விளங்கினார். அந்தப் பிராயத்தில் இவர் மூன்று ஸர்க்கங்கள் அடங்கிய "கும்பகர்ண விஜயம்'' என்ற காவியத்தை எழுதினார்.

"யஸ் ஸைஸவே
அஷ்டமே வர்ஷே
காவ்யம் ஸம்ஸ்கிருத
பாஷயா
கும்பகர்ணஸ்ய விஜயம்
த்ரி ஸர்கை
வ்யரிரசத்''

### ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரர்

இவருடைய 12-வது வயதில் பிதா காலமாகிவிட்டார். இதற்குள்ளாகவே சம்ஸ்கிருதத்திலும் தெலுங்கிலும் ஸ்லோகங்கள் கவனம் செய்யும் திறமை இவருக்குக் கிட்டிவிட்டது; உடனே தர்க்க நியாய சாஸ்திரங்களைக் கற்றுக்கொள்ள இவர் ஆரம்பித்தார். பிதாவின் மரணத்திற்குப் பின்பு ராமானுஜாச்சார்யர் என்பவரிடம் வியாகரண சாஸ்திரத்தையும் வெங்கடராகவாச்சார்யார் என்பாரிடம் நியாய சாஸ்திரத்தையும் இவர் கிரமமாக அப்யஸிக்கத் தொடங்கினர். கொண்டபள்ளி வெங்கட சாஸ்திரி, ஸதாமீன் சுபோதன மிஸ்ரா என்பவர்களிடம் இவர் பின்பு நியாய சாஸ்திரத்தில் கடினமான கிரந்தங்களையும் சுலபமாக அதிகரித்தார். சுபோதன மிஸ்ரா கல்கத்தாவிலிருந்து தெலுங்கு தேசத்துடன் தமது சகோதரர் நடத்தி வரும் வர்த்தகத்தின் அபிவிருத்தியை உத்தேசித்து விசாகப்பட்டணத்தில் வசித்து வந்தவராவார். பின்னர் இவர் தமது முயற்சிகளாலேயே சகல சாஸ்திரங்களையும் பூரணமாகக் கிரஹித்து, "ஸர்வதந்த்ர ஸ்வதந்திரர்'' என்ற பட்டத்திற்கு அருகராக விளங்கினர்.

அப்புறம் இவரது பிதாவையும் அவரது மரணத்திற்குப் பின்பு அக்நிஹோத்ரத்தையும்

ஆதரித்துவந்த கோதே ஜமீன்தார்கள் இவரது பாண்டித்யத்தைப் பரீக்ஷித்து வந்தனர். அவர்கள் அடிக்கடி பெரிய பண்டிதஸதஸ்ஸுகளைக்கூட்டி, வாக்யார்த்தங்கள், வாதங்கள் முதலியவற்றை இவர் நிகழ்த்தும்படி ஏற்பாடுகள் செய்து வந்தனர். இந்த சந்தர்ப்பங்களில் எல்லாம் இவர் ஜயத்துடன் சோபித்து, தம்மை ஆதரித்த பிரபுக்களிடமிருந்தும் பொது மக்களிடமிருந்தும் நன்மதிப்பைச் சம்பாதித்துக்கொண்டார். நாலு பக்கங்களிலுள்ள ஜமீன்தார்களும் நிலச்சுவான்தார்களும் உடனே இப்பெரியாரைத் தமது வித்வத் சபைகளுக்கு சகலவிதமான மரியாதைகளுடன் வரவேற்று உசிதப்படி சன்மானிக்கலாயினர். இவர் இவ்வாறு தமது அந்திய காலத்திற்குள்ளாகவே தெலுங்கு தேசத்திலிருக்கும் ஜமீன்தார்கள் எல்லோரிடமிருந்தும் பிரதி வருஷமும் வித்வத் சம்பாவனைகளும் சன்மானங்களும் வழங்கப்பட்டு வந்தார்.

### பைபிள் போதிக்கக் கூடாதென்று வற்புறுத்தல்

1858-ல் கவர்ன்மெண்டு பள்ளிக்கூடங்களில் கிறிஸ்துவ புத்தகமான "பைபிள்" போதிப்பது கூடாதென்று வற்புறுத்த ஒரு பொதுக்கூட்டம் சென்னையில் கூட்டப்பட்டது. கனம் காஜுலு லக்ஷ்மீநரஸு செட்டியாருடைய முயற்சிகளின் பயனாகக் கூட்டப்பட்ட இந்த சபையில் (மஹாமஹோபாத்யாய) திருப்புட்குழி அப்பா அக்ராஸனம் வஹித்தார். அச்சமயம் இவரும் கலந்துகொண்டு முதன்முதலில் ஒரு பொதுக்கூட்டத்தில் ஒரு பிரசங்கத்தை நிகழ்த்தினார்.

விசாகப்பட்டணத்தில் 1865-ல் இவர் "ஆர்ஷ பள்ளிக்கூடம்" என்ற நாமத்துடன் ஒரு சம்ஸ்கிருத பள்ளிக்கூடத்தை அங்குள்ள பிரதான ஜமீன்தார்களுடைய உதவியைக்கொண்டு ஆரம்பித்து நடத்தி வந்தார். விசாகப்பட்டணம் கலெக்டராகவிருந்த மிஸ்டர் மெல்வில் துரையும் அதன் சம்ரக்ஷணத்திற்காகத் திரவிய ஸஹாயம் செய்தார். இவர் ஒரு அச்சுக்கூடத்தையும் நிறுவினார்; விசாகப்பட்டணத்தில் இதுவே முதலாவது அச்சுயந்திர சாலையாக விருந்தது எனவும் கூறலாம். இந்த பிரஸ் மூலம் இவர் அநேகம் புராதனமானவையும் துர்லபமானவையுமான சிறந்த சம்ஸ்கிருத கிரந்தங்களையும், தாம் எழுதியவற்றையும் அச்சிட்டுப் பிரசாரம் செய்துவந்தார். கஞ்சம் ஜில்லாவைச்சேர்ந்த உர்லாம் ஜமீன்தாரால் பண்டிதர்களின் யோக்கியதாம்சங்களைப் பரீக்ஷித்துப் பஹுமானிப்பதற்காகப் பிரதிவருஷமும் நடத்தப்பட்டுவந்த பண்டித பரிஷத்தின் அக்கிராஸனராக இவர் ஆரம்பம் முதல் தமது மரணகாலபரியந்தம் இருந்து பெருமையுற்றார். கடந்த நூற்றாண்டின் கடைசி வருஷங்களில் தெலுங்கு தேசத்தில் இந்த பரிஷத் மிக்க பெருமையடைந்திருந்தது. இதில் கலந்துகொள்வதையும் பரிசு பெறுவதையும் ஜன்ம சாபல்ய பயனாகப் பலரும் பாராட்டினார்.

வால்டேர் சொந்தக்காரரும், சிகாடி ஜமீன்தாரும் இவருக்கு பூமிதானம் செய்தனர்; ஸங்கம் வலஸா ஜமீன்தாரும் அவரது குடிகளும் இவரது சிஷ்யர்களாயினர். ஸ்ரீவைஷ்ணவர்களின் எட்டு ஆச்சாரியர்களுள் ஒருவரான பட்டர்பிரான் ஸ்வாமியின் வம்ஸ்யரானதுபற்றி அநேகம் பிரமுகர்கள் இவரை ஆஸ்ரயித்து சம்ஸ்கிருதம், தமிழ் வேதாந்த பாடங்களைப் படித்தனர்.

### ஸித்தாந்தத்திற்கு விரோதமான தர்க்கம்

இவர் நிகழ்த்திய வாதங்களுள் மைசூர், பொப்பிலி, விஜயநகரம் தர்பார்களில் நடந்தவையே முக்யமானவை. மைசூர் பண்டித பீமாச்சாரியருடன் இவர் நியாய சாஸ்திர விஷயமாகத் தீவிரமாக வாதாடினார். பொப்பிலி சுஸ்ருல சீதாராம சாஸ்திரிகள் ஒரு அத்வைதியாவார்; இவருடன் நடந்த சம்வாதம் பிரசித்தமானது. இவர் அத்வைத பக்ஷத்தையும் அவர் விசிஷ்டாத்வைத பக்ஷத்தையும் ஆதரித்து, தாங்கள் அனுஷ்டித்து வந்த சித்தாந்தத்திற்கு விரோதமாகத் தர்க்கம் செய்தனர். விஜயநகரம் முடும்பை நரசிம்ஹாச்சாரியருடன் வியாகரண ஸாஹித்ய பகுதிகளில் இவர்வெற்றியுடன் வாது செய்தனர். இவருக்கு எதிரிகளாக விளங்கிய மேற்குறித்த மூவர்களும் அந்நாளில் பிரபல பண்டிதர்கள். மூன்றாவதாக நிகழ்ந்த விவாதம் காரணமாக விஜயநகரம் மஹாராஜா ஸர் ஆனந்த கஜபதி ராஜ் இவரை மரியாதையுடன் வரவேற்றனர். வெங்கடகிரி ராஜாவும் இவரை வரவழைத்து மிக்க உபசரித்தார்.

### நிபந்தனைகளுடன் விதவா விவாஹத்திற்குச் சம்மதி

இவர் இலக்கியம் மட்டுமல்லாமல், மதம் ஸமூகம் முதலிய விஷயங்களைப் பற்றியும் மிகக் கம்பீரமாகவும் விமரிசையாகவும் பிரசங்கம் செய்யும் ஆற்றல் வாய்ந்தவர்; பெண்கல்வியை ஆதரித்த இவர் சில நிபந்தனைகளுடன் விதவா விவாகத்திற்கும் சம்மதம் அளித்தவர். இவற்றைப் பற்றி இவர் பல வியாசங்கள் எழுதினார். சென்ற நூற்றாண்டின் மத்திய பாகத்தில் விசாகப்பட்டணத்தில் கிறிஸ்துவமதப்பிரசாரம் தீவி

(39-ம் பக்கம் பார்க்க.)


வைத்தியரத்ன பண்டிட் யு. ராமநாத சாஸ்திரியாருடைய




## ஸித்த மகரத்வஜம்

இதில் தங்கம் முதலிய உயர்ந்த வஸ்துக்கள் சேர்ந்திருப்பதால் முக்கியமாய் அங்கங்களையும் நரம்புகளையும் பலப்படுத்தி காமோத்தீபனத்தை விருத்தி செய்வதில் நிகரற்றது. அநேக காரணங்களால் பலத்தைக் கெடுத்துக் கொண்டவர்களுக்கு அத்யாவசியமானது புரொபஸர் ராமமூர்த்தி, இந்தியன் ஹெர்குலிஸ், அவர்களால ஸர்டிபிகேட் செய்யப்பட்டது 30 மாத்திரைகள் கொண்ட சீசா 1-க்கு ரூ. 7. பரீக்ஷிப்பதற்கு 5 மாத்திரைகள் ரூ 1-4-0 வி. பி. வேறு.

## ஆனந்த பற்பொடி (ரிஜிஸ்டர்ட்)

பற்களை உறுதிப்படுத்தி வாயில் குவிந்துள்ள அழுக்குகளையும் நோய்க்கிருமிகளையும் போக்கி வாய்களுள் அடங்காத ஓர் பரிமள வாஸனையையும் நலல ருசியுடன் ஆரோக்யமான ஓர் புதிய உணர்ச்சியையும் தருகின்றது. இது ஒன்று தான் பஜாரில் மிக்கப் பிரசித்திப் பெற்றதென்று சென்னை ஹைக்கோர்ட்டார் தீர்ப்பு செய்து இருக்கிறார்கள். எங்கும் கிடைக்கும். டப்பி 1-க்கு 0-2-9. ஒரு டஜன் கொண்ட பெட்டி 1-க்கு 1—14—0. ஆனந்த பற்பசை டியூப் 1-க்கு அணா 8. வி. பி. வேறு.

சகல ஆயுர்வேத ஔஷதங்களும் கிடைக்கும். கேட்லாக் இனாம்.

**வைத்தியரத்ன யு. ராமநாத சாஸ்திரி,**

வைத்திய ஸித்தாச்ரமம், 39, பஜார் ரோட், மயிலாப்பூர், மதராஸ்.

நஞ்சன்கூடு சதவைத்யசாலை

## ச்யாவனப்ராச

சுவாச டானிக்

யுனைடெட் கன்ஸர்ன், பந்தர்தெரு, மதராஸ்

(குழந்தைகளுக்கு நம்பிக்கையான மருந்துகள் இடம்.)

பூரா திருப்தியும், ஜயமும் உத்திரவாதமும் செய்யப்படும். விளம்பரப்படி இல்லாவிட்டால் விலை வாபஸ் கொடுக்கப்படும்.

## மாந்திரீக மோதிரம்

இந்த அபூர்வமான மெஸ்மரிஸ் மோதிரம் உயர்ந்த சாமான்களால் ஆச்சரியப்படத்தக்க மின்சார காந்த சக்திகள் உடையதாய் தயார்செய்யப்பட்டிருக்கிறது.

இந்த மோதிரம் நடந்த காலம், நிகழ்காலம் நடக்கும் காலம் முதலியவைகளை ஒரே நொடியில், மாயா சக்தியால் அறிந்து கொள்ளும் திறமை



யுடையது. மேலும், இறந்தவர்களுடன் அறிமுகப்படுத்துதல், ஆயிரமைல்களுக்கு அப்பால் இருக்கும் விஷயங்களைத் தெரிந்துகொள்ளுதல், புதையல்களைத்தெரிந்து கொள்ளுதல், நோயாளிகளின் குணத்தை அறிதல், காணமற்போன சாமான்களைக் கண்டுபிடித்தல், முத்திரை போட்ட கவரில் இருக்கும் விஷயங்களைத் தெரிந்து கொள்ளுதல், மறைந்திருக்கும் பொருளைத் தெரிந்து கொள்ளுதல், இரகசியமான கேள்விகளுக்குப் பதில் அறிந்து கொள்ளுதல், இம்மாதிரி ஆயிரக்கணக்கான அபூர்வ விஷயங்களை இந்த மோதிரத்தினால், ஒரே வினாடியில் பெற்றுவிடலாம். உபயோகிக்கும் முறை மோதிரத்துடன் அனுப்பப்படும்.

விலை ரூ. 2. தபால் கூலி அணா 8.

சடிதப் போக்குவரத்து ஆங்கிலத்தில் கீழ்க்கண்ட விலாசத்துக்குச் செய்யவேண்டும்.

SHARMA TRADING Co., No. 2, ALIGARH CITY.




"தரகரை அழைத்துக் கொண்டு வா."

"சொத்துத் தரகரையா, பங்குத் தரகரையா?"

* * * *

லேடி சுந்தராசாரி (புதிய வேலைக்காரியிடம்):—உன் பெயர் என்னவாயிருந்தாலும் சரி. எனக்கு ஞாபகமறதி அதிகம். ஆகையால் என் பழைய வேலைக்காரியின் பெயரான பாக்யம் என்ற பெயராலேயே உன்னை அழைக்கப் போகிறேன். தெரியுமா?

வேலைக்காரி:—எனக்கும் மறதி அதிகம். நானும் உங்களை அழைக்க வேண்டுமானால் என் பழைய எஜமானியை அழைத்தபடி முனியம்மா என்று அழைக்கிறேன்.

* * * *

"அதிகாலையிலேயே வேலைக்குப் போகும் கணவர்களால் மிகுந்த தொந்தரவு ஏற்படுகிறது" என்று ஒரு மனைவி புகார் செய்கிறாள்.

"அதிகாலையில் சென்று மறுநாள் காலையில் திரும்பிவரும் கணவர்களைப்பற்றிப் புகார் சொல்லும் மனைவிகளை என்ன செய்வது?" என்று ஒரு கணவர் கேட்கிறார்.

* * * *

"ஸ்டேஷனுக்கு அவசரமாகப் போவதற்கு எந்த வழி?"

"ஓடுங்கள், அதுதான் சரியான வழி"

* * * *

"நாம் வசிப்பதற்கு என்ன செலவாகிறது?"

சாதாரணமாக நடுத்தரக் குடும்பவாஸி ஒருவருக்குக் கிடைக்கும் வருமானத்தைவிடச் சிறிது அதிகமாக ஆகும்.

* * * *

அன்பு மிகுந்தவர்:—இந்தா ஒரு அணா; நீ ஒரு அணாவுக்குத் தகுந்தவனல்ல; ஆயினும் ஒரு அணாக்கொடுப்பதால் நான் சந்தோஷமடைகிறேன்.

பிச்சைக்காரன்:—அப்படியானால் இரண்டணாவாகக் கொடுத்துவிட்டு மிகுந்த சந்தோஷமடையுங்கள்.

* * * *

கணவன்:—இன்று வழியில் சந்துருவைப் பார்த்தேன். அவன் என்னை அடையாளமே கண்டுகொள்ளவில்லை. நான் அவனுக்குச் சமானமானவனில்லை என்று நினைக்கிறான்...

மனைவி:—சமானமா! வாஸ்தவம்தான். அவன் ஒரு தடி முட்டாள்.

* * * *

மனைவி:—இன்று ஒரு விஷயம் நடந்துவிட்டது. அதைப் பற்றிச் சொல்லவே எனக்குப் பயமாகவிருக்கிறது. நமது



லண்டனிலிருந்து கிளாஸ்கோவிற்கு (401 மைல்) மணிக்கு 68.2 மைல் வீதம் பிரயாணம் செய்த ரெயில். இப்பொழுது இப்பிரயாணத்திற்கு 6-மணி நேரத்திற்குக் குறைவாகவே ஆகிறது. முன்பு 8-மணி நேரமாயிற்று.

சுவர் கெடியாரம் கீழே விழுந்துவிட்டது. இன்னும் சிறிது முன்னால் விழுந்திருந்தால் அது என் தலைமேல் விழுந்து என் தலையே உடைந்துபோயிருக்கும்.

கணவன்:—அந்தக் கெடியாரம் எப்பொழுதுமே பின்னால்தானே?

* * * *

வம்புக்காரர் (ரெயிலில்):—நான் உங்களை எங்கேயோ பார்த்திருப்பதாக ஞாபகமிருக்கிறது. நாம் எங்கு சந்தித்திருக்கக்கூடும்?

அருகிலிருந்தவர் (கோபமாக):—நான் சிறையில் வார்ட் தலைவனாகவிருந்தேன். அப்பொழுதுதான் உங்களைப் பார்த்ததாக ஞாபகமிருக்கிறது.

வம்புக்காரர்:—ஆமாம் அப்பொழுது நான் சிறை சூப்பரண்டாகவிருந்தேன். உங்களை ஏதோ குற்றத்திற்காக வேலையிலிருந்து நீக்கிவிடவில்லை?

* * * *

இண்டர்வலுக்குப் பிறகு ஒரு ஸ்தூல தம்பதிகள் தங்களிடத்திற்கு வந்தனர். ஒரு வரிசையில் முதலில் உட்கார்ந்திருந்தவரை, "ஐயா, போகும்போது நான் உங்கள் காலை மிதித்துவிட்டேனோ?" என்று கேட்டாள்.

அவரும் இவள் மரியாதைக்காகக் கேட்கிறாள் என்று நினைத்து, "ஆம்" என்று பதில் சொன்னார்.

கணவன்:—சரி; இந்த வரிசையில்தான் நாம் உட்கார்ந்திருந்தோம்.

* * * *

மாதிரி பிரதி இனாம்
கலியுகம்
ஆபீஸ் சென்னை

ஸ்தாபிதம் 1913
சவரன் மாத்து தங்கத்துக்கும், அசல் வெள்ளி சாமான்களுக்கும், மேன்மையான வேலைப்பாட்டுக்கும் உத்திரவாதமுள்ள இடம்
கரம்சந்த் சபில்தாஸ் & ஸன்
நகை வியாபாரிகள்
175, சைனாபஜார் ரோட் — மதராஸ்.
காட்லாக்குக்கு எழுதவும்.

ஆராய்ச்சி பூர்வமான
நவீன மருந்துகள்
மேத்தாஸ் கோனோ பில்ஸ்—எல்லா வகையான மூத்திரக் கோளாறுகளுக்கும் உத்தரவாதமான நிவாரணி. விலை புட்டி 1-க்கு ரூ. 2.
கே. எஸ். மேத்தா & கம்பெனி,
பிரபல மருந்து வியாபாரிகள்,
234, சைனா பஜார், மதராஸ்.




## த்யாகராஜ கீர்த்தனம்.

[காபிரைட்.]

ஸங்கீதவித்வான் காஞ்சி பி. பி. ஸ்ரீனிவாஸய்யங்கார், பி. ஏ. எழுதியது

I

பல்லவி

ப்ராண நாத பிரானப்ரோவவே (ப்ராணநாத)

அனுபல்லவி

வேணுகானமு சேபதியாறு-வேலகோபிகல பாலிம்சேலே (ப்ராணநாத)

சரணம்

வென்னமீகடல வேட்க மீரகனு-கன்னபின்னவாண்ட்லகடு புனிப்.சி
தின்னக வெலயு தைவரூபமா-சின்னி க்ருஷ்ணதயஜேஸி த்யாகராஜ (ப்ராணநாத)

II

| | |
|---|---|
| த்யாகராஜ | —தியாகராஜனுடைய |
| ப்ராணநாத | —பிராணநாதரே! |
| வென்ன மீகடலனு | —வெண்ணெயையும் பாலேடுகளையும் |
| வேட்க மீரகனு | —அதிக வேடிக்கையுடனும் உத்ஸாஹத்துடனும் |
| கன்னபின்னவாண்ட்ல கடு புனிம்சி தின்னக வெலயு | —உன்னுடன் விளையாடுஞ் சிறுவர்களுடைய வயிற்றில் நிரப்பி (அதாவது, அவர்களை வயிறார உண்பித்து) நன்றாக விளங்குகின்ற |
| தைவரூபமா | —தெய்விக ரூபம் வாய்ந்தவரே! |
| சின்னிக்ருஷ்ண | —பாலகிருஷ்ணனே! |
| வேணு கானமுசே | —வேணுகானத்தினல் |
| பதியாறு வேல கோபிகல | —பதினாயிரம் கோபிகாஸ்த்ரீகளை |
| பாலிம்சேவே | —காப்பாற்றினீரே (அதுபோல் என்னையும்) |
| தயஜேஸி | —க்ருபை செய்து |
| பிரான ப்ரோவவே | —சீக்கிரமாகக் காப்பாற்றும் |

III

இது ச்ருங்கார ரஸமமைந்த கீர்த்தனம், ஸ்வாமிகள் ஸ்ரீராமபிரானைப்பற்றிச் செய்தருளிய கீர்த்தனங்களை ச்ருங்கார ரஸமமைந்தவைகளாகச் செய்யக்கூடவில்லை. ஏனெனில், ஸ்ரீராமபிரான் ஏகபத்னீவ்ரதர்; பரகீயா, ஸாமான்யா என்ற வகுப்பு நாயகிகளின் வ்யவஹாரங்களை அவரைப்பற்றிய கீர்த்தனங்களில் பயன்படுத்துவதற்கில்லை. ஆகையால் ஸ்வாமிகள், ஸ்ரீரங்கநாதன் ஸ்ரீவரதராஜப்பெருமாள், ஸ்ரீக்ருஷ்ணபரமாத்மா இவர்களைப்பற்றிய கீர்த்தனைகளில்மட்டும் நாயிகா நாயக பாவம் பொருந்திய விஷயங்களை அமைத்துப் பாடியிருக்கிறார்.

ப்ராணநாத — 'நன்னுபாலிம்ப' என்ற கீர்த்தனத்தில் ஸ்வாமிகள், 'நாப்ராணநாத' என்று ஸம்போதனம் செய்கிறார்.

பிரானப்ரோவவே — 'ஏமி நேமு' என்ற சங்கராபரணக் கீர்த்தனையில், 'பிரான ஜூடவு' என்று பிரார்த்திப்பதைக் கவனிக்கவும்.

வேணுகான முசே:—கேவலம் ஸங்கீதத்தினலேயே பரமாத்மா பதினாயிரம் கோப ஸ்திரீகளைப் பசிதாக முதலிய துன்பங்கள் ஏவையுந் தோன்றாதபடி காப்பாற்றினர் என்பது வரலாறு. வேணுகானத்தின் சிறப்பை, 'நாவலம் பெரிய தீவினில் வாழும் நங்கைமீர்காள்' என்று தொடங்கும் பெரியாழ்வார் பாசுரங்கள் வெகு அழகாக வர்ணிக்கின்றன. ஸ்ரீக்ருஷ்ண கர்ணாம்ருதத்தில், பகவானுடைய அதரஸ்பர்சம்பட்ட புல்லாங்குழலை ஸம்போதனம் செய்து அதன்மூலம் தம்மையாட்கொள்ளும்படி ஸ்ரீலீலாசுகர் தூது விடுவதாக ஒரு ச்லோகம் இருக்கிறது. அது வருமாறு:—

'அயிமுரளி முகுந்தஸ்மேர வக்த்ராரவிந்த, ஸ்வஸனமது ரஸஜ்ஞேதவாம் ப்ரணம்யாத்யயாசே!
அதரமணி ஸமீபம் ப்ராப்த வத்யாம் பவத்யாம், கதய ரஹஸி கர்ணே மத்தசாம் நந்த ஸூனோ:!!

(12-ம்பக்கம் பார்க்க)

Broadcast

# பிராட்காஸ்ட்
## ரிகார்டின்
# கச்சேரி ரிகார்டு!

இதர வித்வான்கள் பாடியிருக்கும் "ராமா நீயட" ரிகார்டுக்கும் இதற்கும் உள்ள வித்தியாசத்தை கேட்டுப்பாருங்கள் !

**R. T. 2410**

ராமா நீயட
—கரஹரப்ரியா



தஞ்சாவூர் ராமதாஸ்



செம்பை



கும்பகோணம் ராஜமாணிககம் பிள்ளை

பிராட்காஸ்ட்
குயில் கூவுவதை கேட்டீர்களா!



சுப்புலக்ஷ்மி—மதுரை

G. R. 2416 { எனக்குள் இருபதம் —ராகமாலிகை

நூதன டிராமா ஸெட்
**ராதா கிருஷ்ண**
நான்கு ரிகார்டில்

"மனோரஞ்சனி"
ஐந்து ரிகார்டில்

கேளுங்கள் !
கேட்டால் வாங்குவது நிச்சயம்

# தி மியூஸிகல் பிராடக்ட்ஸ் லிமிடெட்,
313, எஸ்பிளனேட் - மதராஸ்.

10, கன்ஸிஸ்டரி கட்டிடம், பிரன்ட் தெரு, கொலம்பு.

12, வாடர்லு தெரு, கல்கத்தா.

16, ராமபார்ட் ரோ போர்ட், பம்பாய்.

F. M. S. & S. S.க்கு ஸோல் டிஸ்ட்டிரிப்யூட்டர்கள்:—

**தி இண்டியன் பிலிம் ஏஜன்ஸி, பினங்-சிங்கப்பூர்.**

[பரமாத்மாவின் புன்னகை தவழும் முகாரவிந்தத்தின் மதுரஸமான ச்வாஸத்தை நுகர்ந்த முரளி வாத்யமே, உனக்கு நமஸ்காரம் செய்து பிரார்த்தித்துக்கொள்ளுகிறேன்; திரும்பவும் நீயந்த நந்த குமாரரின் அதரங்களை நெருங்கும்போது, அவருடைய திருச்செவிகளில் அடியேனுடைய துன்பத்தைப்பற்றிய செய்தியைத் தெரிவிப்பாயாக.]

இன்னும் வேறு பல கர்ணாம்ருத ச்லோகங்கள் வேணுகானத்தின் சிறப்பை வர்ணிக்கின்றன.

வென்னமீகடல:—சிறுவர்களுக்கு ஸ்ரீக்ருஷ்ண பரமாத்மா வெண்ணெய், பால், தயிர் முதலியவற்றையளிப்பதற்காகக் கையாண்ட உபாயங்களைப் பற்றிய விசித்ரமான வரலாறுகளை ஸ்ரீபாகவத புராணத்தில் பார்க்கலாம். 'ஏமனி நொரநம்முகொந்துமு' என்ற நௌகா சரித்ரக் கீர்த்தனையில் ஸ்வாமிகள் 'முனு நீவு வென்னயாரகிம்சி தருணுல மோமுன பூயலேதா' என்று கூறியிருப்பதில் அடங்கிய விருத்தாந்தமும் க்ருஷ்ணன் வெண்ணெய் அபஹரித்ததைப் பற்றிய வரலாறுகளில் ஒன்றும். 24-1-37-ம் தேதிய 'மித்திரன்' வாரப்பதிப்பு இதழ், ஸங்கீதப் பகுதியைப் பார்க்க.

'தயஜூடு' என்றும் பாடம்.

'த்யாகராஜநுதுனி ப்ராணநாத'—என்று சிலர் பாடுவது பிழையாகும்.

IV

**சங்கராபரணம்** **ஆதி தாளம்**

சங்கராபரண ராக லக்ஷணத்திற்கு 'மித்திரன்' வாரப்பதிப்பு 22–11–36-ம் தேதிய இதழைப் பார்க்கவும்.

இந்தக் கீர்த்தனம் சூலினி ராகத்தில் பாடப்பட வேண்டுமென்பதாகக் கீர்த்தன புஸ்தகங்களில் காணப்படுகின்றது. இது 72 மேளகர்த்தா முறைப்படி 35-வது மேளகர்த்தாவாகும். அதன்படி இதில் ஷட்ச்ருதி ரிஷப மென்று கூறப்படும் (ஸாதாரண காந்தாரத்தையும்.) அந்தர காந்தாரத்தையும், மற்றப்படி சங்கராபரண ஸ்வரங்களையும் வைத்துப் பாடவேண்டும். ஆனால் பாடுவோர்களனைவரும் சங்கராபரண ராகத்திலேயேதான் பாடுகின்றனர். 72 மேளகர்த்தா முறையைப்பற்றி என் சொந்த அபிப்பிராயமும் சூலினி ராகத்தை அதற்கு லக்ஷணம் கூறப்படுகிறபடி பாடுவதற்கு அனுகூலமானதாயில்லை. அதைப்பற்றி இங்கு விவரித்துக் கூறச் சாத்தியமில்லை.

காலஞ்சென்ற கீர்த்தனாசாரிய, அபிநவ த்யாகப்ரம்ஹம் C. R. ஸ்ரீநிவாஸ ஐயங்காரும் தம்மிடம் பாடங் கேட்டவர்களுக்கு இதைச் சங்கராபரணத்திலேயே அமைத்துப் பாடஞ் சொன்னாரென்பது இங்கு அறியத்தக்கது.

பல்லவி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ; ; ; * | பாமா-காரீ ஸா | ரீகா ; | மா | பா ; ; | மா |
| ; ; ; * | ப்ராண-நா......த | பிரா ; | ன | ப்ரோ ; ; | வ |
| கமபா ; * | பாமா-மககரீ ஸா | ரீகா ; | மா | பா ; ; | மா |
| வே... ; * | ப்ராண-நா......த | பிரா ; | ன | ப்ரோ ; ; | வ |
| பா, மகரி * | கமபம-மககரி-ஸா | ரீகா , | மா | ரிகமபா | மா |
| வே,...... * | ப்ராண-நா......த | பிரா ; | ன | ப்ரோ... | வ |
| பா, மகரி * | கமபம-மககரி-ஸா | ரீகா ; | மா | ரிக மபதநி | ஸ்நி |
| வே,...... * | ப்ராண-நா......த | பிரா ; | ன | ப்ரோ... | வ |
| தபாமகரி * | கமபம-மககரி-ஸா | ரீகா ; | ரிக | மபதநிஸ்ரி | ஸ்நி |
| ...வே... * | ப்ராண-நா......த | பிரா ; | ன | ...ப்ரோ... | வ |
| தபாமகரி * | கமபம-மககரி-ஸா | ஸ்ா ஸ்நிஸ்ா | ஸ்நி | தபத நிஸ்ரி | ஸ்நி |
| ...வே... * | ப்ராண-நா......த | பி ரா... | ன | ...ப்ரோ... | வ |
| தபாமகரி * | கமபம-மககரி-ஸா | ஸ்ா ஸ்நிஸ்ா | க்ரி | ஸ்நி ரிஸ்நித | ஸ்நி |
| ...வே... * | ப்ராண-நா......த | பி ரா... | ன | ...ப்ரோ... | வ |
| தபாமகரி * | கமபம-மககரி-ஸா | ரீகா ; | மா | பா ; ; | மா |
| ...வே... * | ப்ராண-நா......த | பிரா ; | ன | ப்ரோ ; ; | வ |
| பா ; ; * | | | | | |
| வே ; ; * | | | | | |

அனுபல்லவி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ; ; ; * | தநிஸ்ா-ஸ்ா ; ஸ்ா | தா நீ பா | தா | நீ | ஸ்ா ; ; |
| ; ; ; * | வே ணு-கா ; ன | மு...சே | ப | தி | யா ; ; |
| ஸ்ா ; ; * | ஸ்ஸ்ஸ்ா-ஸ்ா ; ஸ்ா | தா நீ பா | தா | நீ | ஸ்ா ; ; |
| று ; ; * | வே ணு-கா ; ன | மு...சே | ப | தி | யா ; ; |
| ஸ்நிதபதநி * | ஸ்ஸ்ஸ்ா ஸ்ரிக்ரி ஸ்ா | ஸ்நி தநிபா | தா | நீ | ஸ்ா ; ; |
| று......... * | வே ணு-கா......ன | மு...சே | ப | தி | யா ; ; |
| ஸ்நிதபதநி * | ஸ்ஸ்ஸ்ா-ஸ்ரிக்ம்க்ரி | ஸ்நி தநிபா | தா | நீ | ஸ்ா-ஸ்நிரிஸ் |
| று......... * | வே ணு-கா......ன | மு...சே | ப | தி | யா... |
| ஸ்நிதபதநி * | ஸ் ஸ்ா-க்ரீஸ்ா | ஸ்நி தாபா | ஸ்ா | ; பா ; | பம |
| று......... * | வே ல-கோ பி | க...ல | பா | ; லிம் ; | சே |
| தபாமகரி * | ஸ்ா ஸ்ா-க்ரீஸ்ா | ஸ்நி தாபா | ஸ்நி | தப- | நிதபம-பம |
| ...வே... * | வே ல-கோ பி | க...ல | பா | ...லிம்... | சே |
| தபாமகரி * | ஸ்ாஸ்ா-ஸ்ரிக்ரிஸ்ா | ஸ்நி தாபா | மக | மப-தநிஸ்ரி | ஸ்நி |
| ...வே... * | வே ல-கோ...பி | க...ல | பா | ...லிம்... | சே |
| தபாமகரி * | ஸ்ாஸ்ா-ஸ்ரிக்ம்க்ரி | ஸ்நி தாபா | மக | மப-தநிஸ்ரி | க்ரி |
| ...வே... * | வே ல-கோ...பி | க...ல | பா | ...லிம்... | சே |
| ஸ்நிதபமக * } (ப்ராணநாத) | | | | | |
| ...வே... * | | | | | |

சரணம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ; ; ; * | கா மா பா ; மா | காரீ ஸா | ஸந் | ஸா | ஸரிகாகா |
| ; ; ; * | வெந் ந மீ ; க | ட...ல | வே | ட்க | மீ...ர |
| மா, பா, * | கா மா பா ; மா | கம பமகரி | ஸந் | ஸா | ஸரிசாகா |
| கா, நு, * | வெந் ந மீ ; க | ட...ல | வே | ட்க | மீ...ர |
| யா, பா, * | ஸ்ா நீ பா ; மா | கம பமகரி | ஸநி | ஸா | ரீகாமா |
| கா, னு, * | வெந்ந மீ ; க | ட...ல | வே | ட்க | மீ...ர |
| பா, பா, * | கமபா ரீ ; ஸா | தாநீ ஸா | ஸநி | ஸா | ரிகமாமா |
| கா, னு, * | கன்ன் பின் ; ன | வாண்ட்ல | க | டு | பூ...... |
| கா மா பா * | | | | | |
| னி ம் ரி * | | | | | |

'தினகா ிவலு,..................த்யாகராஜ'—அனுபல்லவிபோல் பாடவேண்டும்.

நமது சிறுகதை

# சிப்பி மோதிரம்

——:|○|:——

(ஸ்ரீமான் எஸ். எஸ். இராமசுவாமி, பி.எஸ்.ஸி.)

1

கடற்கரையை அடுத்த மேலக்குப்பம் என்ற கிராமத்தில பெரும்பாலும் செம்படவர்கள்தான் வாழ்ந்து வந்தார்கள். இந்தக் கிராமத்திற்கு வெளியே செங்குத்தான மலையும், அதை யொட்டி மரங்களடர்ந்த ஒரு காடும் இருந்தன.

வீரப்பன், வேலன், அன்னம் ஆகிய மூவரும் மற்றக் குழந்தைகளோடு சேர்ந்து விளையாடாமல், தனியாகத்தான் விளையாடுவார்கள். விளையாட்டில் வீரப்பனுக்கும் வேலனுக்கும் அடிக்கடி சண்டை வந்துவிடும். வீரப்பன், "அடே, வேலா, இன்று நான்தான் வீட்டுக்காரன். என் பெண்டாட்டி அன்னம். நீ விருந்தாளியாகத்தான் இருக்க வேண்டும். அன்றைக்கு மட்டும் அன்னத்தை உன்பெண்டாட்டியாகவைத்து விளையாடவில்லையோ?" என்று சொல்லுவான். அன்னம் இருவரையும் சமாதானப் படுத்துவாள். வீரப்பன் தைரியமுள்ளவன். ஆனால் வேலன் பொறுமை வாய்ந்தவன். அதனால் வேலன், தான் கணவனாக விளையாட முடியவில்லையே என்று வருத்தப்பட்டாலும், அன்னத்தின் வேண்டுகோளுக்கிணங்கி அன்று விருந்தாளியாயிருந்துவிட்டு மறு நாள் விளையாடும்போது தன் ஆசையைத் தீர்த்துக்கொள்வான்.

வீரப்பன், தாயையும் தகப்பனையும் இழந்த பத்து வயதுப் பையன், மகா புத்திசாலி. தினந்தோறும் எந்த வேலை செய்தாவது தன் வயிற்றுக்குப் போதுமானதைத் தானே சம்பாதித்துக் கொள்வான். மாலை வேளைகளிலும், ஒழிந்த நேரங்களிலும் அன்னத்தோடும் வேலனோடும் விளையாடுவான். அன்னத்தினிடம் அவன் மிகுந்த பிரியம் வைத்திருந்தான்.

வேலன் அந்தக் கிராமத்தில் நாலு தோட்டுள்ள பிரபலமான செம்படவனுடைய ஒரே மகன். அவனுக்குச் சுமார் பதினேரு வயதிருக்கும். எப்பொழுதும் சாந்தமே அவனிடம் குடிகொண்டிருக்கும். இவனுக்கும் அன்னத்தினிடம் அபார பிரேமை இருந்தது.

அன்னமோ ஒரு சாதாரண படகுக்காரனுடைய மகள். இவள் ஆறுவயது நிரம்பப் பெற்ற ஒரு அழகிய சிறுபெண். நல்ல குணமுடையவள். அதனால் எல்லாரும் அவளிடம் ஆசையோடு பழகுவார்கள். இவள் தன் தாய் தந்தையர்களுக்குப் பெரிதும் உதவியாக இருந்தாள். காட்டிற்குச் சென்று விறகு சேகரித்துக் கொண்டுவருவாள். தனது தகப்பன் கொண்டுவரும் சங்குகளை மாலையாகக் கோர்த்துக் கடைத்தெருவில் விற்றுப் பணத்தைத் தன் பெற்றோர்களிடம் சேர்ப்பிப்பாள்.

2

பத்துவருஷங்கள் சென்றன. வீரப்பனும், வேலனும் அன்னமும் முன்போல் விளையாடுவதில்லை. ஏன்! இப்போது அவர்கள் ஒருவரை யொருவர் சந்திப்பது கூட வேளா வேளைகளில்தான். அன்னம் இப்பொழுது தன் பாலிய சிநேகிதர்களைக் கண்டால் நாணிக் கோணிச் சிரித்துக்கொண்டே துரிதமாக நடந்து விடுவாள். வீரப்பனும் வேலனும் அவளைப் பார்த்துத் தயங்கித் தயங்கி நிற்பார்கள். இவர்களிருவரும் தேகக் கட்டமைந்த வீரர்களாக மாறிவிட்டார்கள். ஆனால் இருவரும் அன்னத்தையே விவாகம் செய்ய வேண்டுமென்ற தீர்மானத்துடன், அதற்கு வேண்டிய முயற்சிகள் செய்துகொண்டு வந்தார்கள். அன்னத்துக்கு இருவரிடத்திலும் ஒரேவிதமான அன்பும் ஆசையும் இருந்தபோதிலும் வீரப்பனிடம் விசேஷப் பிரேமை உண்டாக ஆரம்பித்தது.

வீரப்பன் ஏழையாயிருந்தானல்லவா? அன்னத்தின் பெற்றோர்கள், அவளைத் தன்னைப் போன்ற ஒரு ஏழைக்குக் கல்யாணம் செய்யச் சம்மதப்பட மாட்டார்கள் என்பதை யறிந்த வீரப்பன், ஒரு வியாபாரியோடு சேர்ந்து வர்த்தகத் தொழில் செய்து கொஞ்சம் பொருள் சம்பாதித்துவிட்டான். ஆகவே அன்னம்மாளின் பெற்றோர் சந்தோஷமாய் அவளை வீரப்பனுக்குக் கலியாணம் செய்து கொடுத்தார்கள். வீரப்பனும் அன்னம்மாளுடன் இன்ப வாழ்க்கை நடத்த ஆரம்பித்தான்.

வேலனுக்கு விஷயம் தெரிந்ததும் இடி விழுந்தவன்போலானான். கொஞ்ச நாட்களில் மனம் தேறுதலடைந்தபோதிலும், வேறு ஒரு பெண்ணையும் கலியாணம் செய்துகொள்வதில்லை என்ற தீர்மானத்துக்கு வந்துவிட்டான்; பித்தனைப் போல் காலங்கழிக்க ஆரம்பித்தான்.

ஏழு வருஷங்கள் சென்றன. வீரப்பனுக்கு ஒரு பெண் குழந்தையும், இரண்டு ஆண் குழந்தைகளும் பிறந்தன. வியாபாரம் செய்வதற்காக


எல்லாத் தோல் வியாதிகளையும் சீக்கிரமாய் ஆற்றும்படியானது.

நீ ரூபத்தை மாற்றும்படியான தோல் வெடிப்பினால் வருத்தப் பட்டால், உனக்கு வைத்திய சாஸ்திரம் குடிகூராவை (Cuticura) விடசீக்கிரமாய் நோய்தீர்ப்பது ஒன்றும் தரமுடியாது. இந்த மருந்து, தோல்வியாதிகளை அனேக காலமாகப் பார்த்துத் தீர்த்த வைத்தியரால் கண்டுபிடித்துச் செய்யப்பட்டது.

இந்த முறைகளைப்படித்து உபயோகிக்கவேண்டும்.

நோயிருக்கும் பாகத்தை, ராத்திரியிலும், காலையிலும், குடிகூரா சோப்புக்கட்டியால் (Cuticura Soap) வென்னீர் வார்த்துக் கழுவி, மெதுவாய் உலரத்துடைத்து குடிகூரா தைலத்தைத் (Cuticura Ointment) தடவவேண்டும். இந்த தின உபசரணை சொறி நமைச்சலைத் தணித்து, எரிப்பை உடனே நீக்கும். புண்ணாற்றி, நோய்தீர்த்து, சொஸ்தமாக்கும் குடிகூரா (Cuticura) தோல் வெடிப்புகளினுள்ளே புகுந்துவிடும். அது கருமிப் புழுகளை அழித்து, நோய் உண்டாக்கும் பாஷாணத்தை வெளிப்படுத்தி சிலைக்கும் புண்களை ஆற்றி, தோலுக்கு சுகமான வழியை உண்டுபண்ணி முழுதலும் சொஸ்தமாக்கும். முதல் தரம் பூசும்போதே சுகத்தால் பயனுகவரும் ஆனந்தம் உனக்கு ஆச்சரியக் களிப்பை உண்டாக்கும். குடிகூரா தைலமும் (Cuticura Ointment) குடிகூரா சோப்புக்கட்டியும் (Cuticura Soap) வாங்கி இன்றைக்கே உபயோகித்துப்பார்.

Cuticura
OINTMENT AND SOAP




குடிகூரா

தைலமும் சோப்புக்கட்டியும்

எந்த மருந்து கடைகளிலும், பஜார்களிலும் வாங்க அகப்படும்.



இவருடைய தலைமயிரின் அழகே அழகு..

மிருதுவு, அடர்த்தி, பள பளப்பு



காரணம்? அதன் ஆரோக்கியம்

வாசனை தேங்காய் எண்ணெய்.



வறண்டு மங்கியுள்ள தலைமயிருக்கு டாம்கோ வாசனைத் தேங்காய் எண்ணெயேசிறந்தது; "பிசுக் குண்டு" பண்ணாமல் கூந்தலுக்கு ஆரோக்கியமும், பளபளப்புமூட்டும்.

லைம்ஸ் & கிளஸரின் (லெமன் க்ரீம்)



தலைமயிர் வளர்ச்சி குன்றி அழகும் குன்றி விடுகின்றதா? வாசனை நிறைந்த இந்த டானிக் க்ரீமைக் கொண்டு நன்கு தேயுங்கள்: கூந்தலை வளர்க்கும்; உதிர்தலைத் தடுக்கும்.

TOMCO

டாம்கோ விற்பனை இலாகா
19-1, வாணியர் தெரு,
மதராஸ்.

இதர டாம்கோ கூந்தல் தயாரிப்புகள்: ஜெப் கூந்தல் தைலம், லோஷன் & பிரிலியண்டைன், வாசனை நிறைந்த ஔஷத கூந்தல் டானிக், கெட்டி பிரிலியண்டைன் முதலியன.

டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி, லிமிடெட்,
பம்பாய் & டாடாபுரம்

TH 412



தென்னாற்காடு ஜில்லா மாதர் மகாநாடு சமீபத்தில் விழுப்புரத்தில் நடைபெற்றது. அதில் சேவை புரிந்த ஸ்திரீ தொண்டர்கள்.

வீரப்பன் அடிக்கடி வெளியூர்களுக்குப் போகவேண்டியிருந்தது. வீரப்பனுடைய எஜமானனான வர்த்தகன் வீரப்பன் தன்கீழ் வேலை செய்பவனானாலும், அவனைத் தன் தோழன்போல் பாவித்து நடத்திவந்தான். ஒரு சமயம் ரொம்ப நாட்கள் வெளியூர் செல்லும்படியாக வர்த்தகன் வீரப்பனுக்குக் கட்டளையிட்டான். வீரப்பன் மறுக்க முடியாமல் இசைந்தான். மறுநாட் காலை, கப்பலில் புறப்படுவதாகத் தீர்மானிக்கப்பட்டது.

வீரப்பன் வாடிய முகத்துடன் வீட்டுக்கு வந்து குழந்தைகளை அன்போடு முத்தமிட்டுவிட்டுத் தன் மனைவியைப் பார்த்து, "இது கொஞ்சம் நீடித்த பிரயாணம். திரும்பி வர ஒரு மாதமாகலாம், நீ என்ன சொல்லுகிறாய்?" என்று பரிவுடன் கேட்டான். அன்னம்மாள் திகிலடைந்தாள். விவரிக்க முடியாத துக்கம் அவள் தொண்டையை அடைத்துவிட்டது. கொஞ்ச நேரத்தில், சமாளித்துக்கொண்டு, "நான் என்ன சொல்லட்டும். உங்களைப் பிரிய என் மனம் சம்மதிக்க மாட்டேனென்கிறது. ஐயோ நான் உங்களை மறுபடியும் பார்ப்பேனோ என்றுதான் கவலையாயிருக்கிறது" என்றாள். "அன்னம்! நீ நல்ல பெண்ணல்லவா? எனக்கு ஒரு ஆபத்தும் நேராது. நான் நிச்சயமாய்ச் சொல்லுகிறேன். எப்படியாவது திரும்பிவந்து உன்னையும், குழந்தைகளையும் பார்ப்பேன்" என்று தைரியப்படுத்தினான். அன்னம் ஒன்றுமே பேசவில்லை.

பொழுது விடிந்ததும், வீரப்பன் ஞாபகார்த்தமாக அன் [illegible]

மோதிரத்தை வாங்கித் தன் விரலிலணிந்துகொண்டு, அன்னத்தைத் தழுவி விடை பெற்றுச் சென்றான். கப்பலின் பாய்மரம் மறைகிற வரைக்கும், அன்னம் கடற்கரையில் நின்றுவிட்டுத் தன் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு வீடுவந்து சேர்ந்தாள்.

3

ஒரு மாதம் தவணை வைத்துச் சென்ற வீரப்பன் 5 வருடங்களாகியும் திரும்பிவரவில்லை. வீட்டில் அவன் சேமித்து வைத்திருந்த பொருள் எல்லாம் ஆகிவிட்டது. சாமான்களையும், வீட்டையும் விற்கும்படியாயிற்று. குழந்தைகள் ஒவ்வொருவரும் பசியால் அலற ஆரம்பித்தார்கள். பாவம்! அன்னம் என்ன செய்வாள்? பசியின் கொடுமை தாங்காமல் கடைசிக் குழந்தை இறந்துவிட்டான்!

அன்னத்துக்கு மேலும் மேலும் துன்பம் ஏற்பட்டது. இந்த நிலைமையில் வேலன் அன்னம் தங்கியிருந்த சிறு குடிசைக்கு வந்தான். "அன்னம்மா, ஒரு சிறு விஷயமாக வந்தேன். உன் குழந்தைகளும் நீயும் இப்படிப் பரிதபிப்பதைப் பார்க்க என் மனம் துடிக்கிறது. நான் பண உதவி செய்கிறேன். நீ ஏற்றுக்கொள்வாயா?" என்று நயக்கத்துடன் கேட்டான். அன்னம் அவ்வார்த்தைகளைக் காது கொடுத்துக் கேட்கவே இல்லை.

பின்னும் கொஞ்ச நாளைக்குப் பிறகு, வேலன் மறுபடியும் எதிர்ப்பட்டு உதவி செய்ய முன் வந்தான். வறுமையைப் பொறுக்க முடியாத பெண்ணின் மனம் அதற்கிணங்கிவிட்டது. தன் நன்றியைத் தெரிவித்தாள். வேலனும் தான் வாக்களித்தபடி அன்றைய தினத்திலிருந்து வேண்டிய உதவிகளைச் செய்து வந்தான். நாளடைவில் குழந்தைகளுக்கும், அன்னத்துக்கும் அவன்பேரில் திருப்தியும் பற்றுதலும் ஏற்பட்டன. குழந்தைகள் வேலனைத் தங்கள் தந்தையென்றே நினைத்தார்கள். அதற்கேற்ப அவனும் தன் குழந்தைகளைப்போல் அவர்களுடன் விளையாட ஆசைப்பட்டான். விளையாட்டுச் சாமான்களை வாங்கிக் கொடுத்து வந்தான்.

இப்பொழுது வீரப்பன் வீட்டை விட்டுப் போய் 7 வருஷங்கள் பறந்துவிட்டன. ஊரார் அவனைப்பற்றிப்பலவாறு பேசினார்கள். அவன் பிரயாணம் செய்த கப்பல் மூழ்கிப் போய்விட்டது என்ற வதந்தி வந்ததிலிருந்து, எல்லாரும் வீரப்பன் கடலில் மூழ்கி இறந்திருக்க வேண்டும் என்ற தீர்மானத்திற்கு வந்துவிட்டார்கள். அன்னம் மாத்திரம் தன் கணவன் 'வருவான், வருவான்' என்ற நம்பிக்கையுடன் இருந்தாள்.

முன்போல் வேலன்தான் அன்னத்தையும் குழந்தைகளையும் பாதுகாத்து வந்தான். ஆனால் இப்பொழுது இன்னும் கொஞ்சம் அன்புகாட்ட ஆரம்பித்தான். ஒரு நாள் மாலை, அன்னம்மாள் விறகு கொண்டுவரக் காட்டிற்குச் சென்றிருந்தாள். வேலன் குழந்தைகளைக் கூட்டிக்கொண்டு அங்கே சென்றான். அடர்ந்த காட்டின் நடுவில் அவளைக் கண்டான். குழந்தைகளிருவரும் சற்றுத் தூரத்தில் விளையாடச் சென்றார்கள். அன்னம்மாளும், வேலனும் தான் தனிமையாக விருந்தார்கள். அதுதான் தருணமென்று வேலன் அவள் நிலைமையைப் பற்றி மிகவும் எடுத்துரைத்து, முடிவில் தன் காதலைத் தெரிவித்தான். அன்னம் அதை மறுத்து, "இன்னும் சில வருஷங்கள் பொறுத்துப் பார்ப்பேன். ஒருவேளை அவர் திரும்பி வந்தாலும் வரக்கூடும். நமக்கு நிச்சயமாய் அவர் இறந்துவிட்டாரென்று தெரியாதல்லவா?" என்று வினயமாகப் பதிலளித்தான்.

மேலும், வருஷங்கள் மூன்று சென்றன. வீரப்பன் திரும்பி வரவேயில்லை. வேலன் அன்னத்தைநெருங்கிக் கேட்கும்போதெல்லாம், அவள் சாக்குபோக்குச்சொல்லி நாட்கடத்தினாள். ஆனால் ஊரார் இவர்களைப்பற்றி வம்பு பேச ஆரம்பித்தார்கள். ஊர் வாயைமூட உலைமூடியுண்டா?

4

பத்து வருஷங்களுக்குமுன் வீட்டைவிட்டுப் புறப்பட்டுப் போன வீரப்பன் என்னவானான் என்பதைக் கவனிப்போம். அவன் பிரயாணம் செய்த மரக்கலம் புயற்காற்றினால் அடித்துத் தள்ளப்பட்டு ஒரு பாறையில் மோதித் தூள் தூளாய்ப் போய்விட்டது. வீரப்பன் கடலில் வெகுதூரம் நீந்திச் செல்லப் பழகியிருந்தான்; தெய்வ சங்கற்பத்தால் நீந்திச் சமீபத்திலுள்ள தீவையடைந்தான். அந்தத் தீவில் பயங்கர மிருகங்கள் தான் காணப்பட்டன; மனித சஞ்சாரமே கிடையாது. காய் கனிகளைத் தின்று பத்து வருஷங்களைப் போக்கினான். தனக்கு விடிவுகாலம் வருமோவென்று ஏங்கி நாட்களைக் கழித்தான்.

நல்ல வேளையாக, அகோரக் காற்றினால் தள்ளப்பட்ட மற்றொரு கப்பல் அத்தீவை அடைந்தது. வீரப்பன் கப்பலிலிருந்

(27-ம் பக்கம் பார்க்க)





தென்னாற்காடு ஜில்லா மாதர் மகாநாடு ஸ்ரீமதி ருக்மணி லக்ஷ்மீபதி தலைமையில் விழுப்புரத்தில் நடந்தது.



வேலூர் ஜில்லா போர்டு அங்கத்தினராக நியமிக்கப்பட்டிருக்கும் மிஸஸ். கே. கமலா தேவி.



வைத்திய சாஸ்திரத் தேர்ச்சிக்காக ராமாராவ் தங்கப் பதக்கம் அளிக்கப்பட்டுள்ள சென்னை வைத்தியக் கலாசாலை மாணவி ஸ்ரீமதி ஒய். ராஜேச்வரி.



வடக்கு ராமநாதபுரம் ஜில்லாபோர்டு அங்கத்தினராக நியமிக்கப்பட்டிருக்கும் ஸ்ரீமதி அழகம்மை ஆச்சி. (காரைக்குடி ஸ்ரீமான் கே. பி. எஸ். எல். பழனியப்ப செட்டியாரின் மனைவி.)



இலஞ்சி (தென்காசி) ஸ்திரீகள் சங்கத்தின் புதிய காரியதரிசி மிஸஸ் கல்யாணி அம்மாள் சுப்ரமணியன்.



பெங்களூர் முனிஸிபல் சபையில் ஐரோப்பியர்கள் ஆங்கிலோ இந்தியர்கள் பிரதிநிதியாக இருக்கும் மிஸ் எப். பெரைரா.

தயாராகி விட்டது! தயாராகி விட்டது!

ரம்பா பிலிம்ஸ் லிமிடெட் தயாரித்த

# கிருஷ்ண பக்தி

அல்லது

# "பக்த ஜெயதேவ்

தமிழில்

முழுதும் அமெச்சூர் நடிகர்கள் நடித்தது

கல்கத்தா பயோனீர் ஸ்டூடியோவில் தயாரிக்கப்பட்டது.

— படம் வேண்டுவோர் எழுதவும் —

## ரம்பா பிலிம்ஸ் லிமிடெட்,

6, உட்ஸ் ரோட், மவுண்ட் ரோட், மதராஸ்.



சென்னை மாகாண ஸநாதன தர்ம மகா நாடு திருவல்லிக்கேணியில் ராவ்பகதூர் என். நடேசய்யர் தலைமையில் நடைபெற்றது.

மற்ற பக்கங்களில்

வேலைக்காரன் 2
ராதா (தொடர்கதை) 4
[illegible]ப் பிரமுகர்கள் 7
விநோதக் [illegible] 9
ஸங்கீதப்பகுதி 10
சப்திமோதிரம் (சிறு கதை) 13
கண்ணோட்டம்-பிரமுகர்கள் 15
பிரபஞ்ச வர்த்தமானம் 23
நாட்டு நடப்பு-சித்திரக் கண்ணாடி 26
நூறு பெயர்களுக்கு நமன (சிறுவர் பகுதி) 28
ஜோதிர் மண்டலம் 29
நவநாகரீகம் 31
தையல் வேலை 33
உலகப் போக்கு 34
பரம ரகசியம் (ஹாஸ்யப்பகுதி) 37
கையின் பொது லக்ஷணம் (ரேகை சாஸ்திரம்) 38

# இந்திய வர்த்தமானம்

## ஹிந்து விதவைகளுக்குச் சொத்துபாகவுரிமை

இந்தியா சட்டசபைக் கூட்டத்தில் ஹிந்து விதவைகளுக்குச் சொத்தில் பாகவுரிமையளிக்கும் மசோதாநிறைவேற்றப்பட்டது. இந்த மசோதாவை டாக்டர் தேஷ்முக் கொண்டுவந்தார். அவர் மசோதாபற்றிப்பேசுகையில் ஹிந்து சட்டப்படி பழைய காலத்தில் ஸ்திரீகளுக்கு அதிக உரிமை இருந்ததென்றும், ஆனால் பின்னர் பழைய சாஸ்திரங்களுக்குத் தவறான கருத்து கூறப்பட்டதால் இவ்வுரிமை மறுக்கப்பட்டிருக்கிறதென்றும், நமது சட்ட முறை கலப்படமாகப் போய்விட்டதென்றும் சொன்னார். ஸர் என். என். சர்க்கார் பேசுகையில் மசோதா தகுந்தவளவு தீவிரமாகவிருக்கவில்லையென்பதே தமது சொந்த அபிப்பிராயமென்றும், ஹிந்து விதவைகளின் நிலைமை வருஷக்கணக்காக வருந்தக் கூடியதாகவிருக்கிறதென்றும், பிள்ளைகள் எவ்வளவு தங்களுக்குள் சண்டையிட்டு வந்தாலும் தாயாரும் பங்கு கோருவாள் என்ற எண்ணத்தில் அவர்கள் பாகஞ்செய்து கொள்ளாமலிருக்கலாமென்றும் இனி அவ்வித நிலைமை இருப்பதற்கில்லையென்றும் கூறினார்.

* * * *

## காங்கிரஸ் பதவி ஏற்காவிடில் சபை கலைக்கப்படும்

பீஹார் தேர்தல் முடிவு அதிக வெற்றிகரமாகவே இருக்கிறது. அங்கு காங்கிரஸுக்குப் பரிபூர்ண வெற்றி கிடைத்துவிட்டது. காங்கிரஸ் கக்ஷியே இனி ராஜாங்க சபையிலில்லாவிடினும் ஜனப் பிரதிநிதி சபையில் எதையும் நிர்ணயிக்கக் கூடியதாகவிருக்கும். இந்தியா கவர்ன்மெண்டு சட்டப் பிரிவுகள் இப்பொழுது அதிகம் பரிசிலனை செய்யப்படுகின்றன. காங்கிரஸ் கக்ஷி பதவியேற்க மறுத்துவிடில் ஜனப் பிரதிநிதி சபை கலைக்கப்பட்டுவிடலாமென்று ஸ்டேட்ஸ்மன் பத்திரிகை சூசிப்பித்திருக்கிறது.

* * * *

## ரயில்வே வேலை நிறுத்தங்கள்.

வேலை நிறுத்தங்களைத் தடுக்க தொழிலாளர் கமிஷன் யோசனை கூறிய பிரகாரம் கவர்ன்மெண்டார். ஒரு ஸ்தாபனத்தை ஏற்படுத்தவேண்டுமென்று ரயில்வே சம்மேளனம் ரயில்வே போர்டிற்குத் தெளிவுபடுத்தியிருக்கிறது. சென்ற பத்துவருஷங்களுக்குள்ளாக 16 ரயில்வே வேலை நிறுத்தங்கள் ஏற்பட்டுவிட்டனவென்றும் எல்லாக் கட்சி

## அறிவிப்பு.

### சென்னை நகர சந்தா நேயர்களுக்கு

சென்னை நகரில் 'மித்திரன்' தினசரி, வாரப்பதிப்புகளுக்கு சந்தாதார் சேர்த்துக்கொண்டிருந்தவரும், தேனாம்பேட்டை 86, மவுண்ட் ரோட்டில் வசித்துவருபவருமான எ. ஆர். சீனிவாஸனை 5-12-36 முதல் விலக்கிவிட்டோம். நமது ஏஜெண்டு ஆபீஸ் ஸ்டியார் எவ்வித அதிகாரம் பெற்றிருப்பதாக பொது ஜனங்கள் கருதக்கூடாது. சம்பந்தம் வைத்துக்கொண்டால் நாம் பொறுப்பேற்றுக்கொள்ள முடியாது என்பதை இதனால் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

மானேஜர்.

ஈறுகள் மிருதுவாகவிருக்கின்றனவா ?
அவற்றினின்றும் இரத்தம் வருகிறதா ?

ஈறுகள் மிருதுவாக விருந்து அவற்றிலிருந்து சீழ், இரத்தம் பெருகினால், பயோரியா நோய்க்கு ஆளாகிறீர்கள் என்று அர்த்தம்; விரைவில் உங்கள் இப்பற்களை இழக்கலாம்; எனவே "நீம் டூத் பேஸ்ட்" உபயோகித்து ஈறுகளைப் பாதுகாருங்கள். பற்களைப் பிரஷ் செய்தபின்பு ஆள் காட்டி விரலால் ஈறுகளைத் தேயுங்கள். பற்களையும், ஈறுகளையும் ஆரோக்கியமாக வைத்திருக்கும் நவீன முறை இதுதான். ப்ராசீன காலம் தொட்டு நம தேசத்தில் வழங்கி வரும் வேப்பங்குச்சியின் சத்து நிறைந்தது "நீம் டூத் பேஸ்ட்" இன்றே இதை உபயோகிக்க ஆரம்பியுங்கள்.



'Neem' TOOTH-PASTE

பவுடர் வேண்டுமெனின் மார்கோஸ் நீம் டூத் பவுடர் உபயோகியுங்கள்.
கல்கத்தா கெமிகல்

J.H.C



களுக்கும் அவற்றால் பெருத்த நஷ்டமேற்பட்டு விட்டதென்றும் தொழிலாளர் சம்பந்தப் பட்டமட்டில் தொழிலாளர் சச்சரவு சட்டம் பிரயோஜனமற்றதாக ஆகிவிட்டதென்றும் ஏனெனில், வேலை நிறுத்தம் சட்ட விரோதமானதென்று அது கூறுகிறதே தவிர அதை சமசரப்படுத்துவதற்கு அது வழியொன்றும் தேடவில்லையென்றும் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். சட்டத்தைத் திருத்துவதில் தங்களுக்கு நம்பிக்கையில்லையென்றும் கூறியிருக்கின்றனர். முன் கூறப்பட்ட ஒரு ஸ்தாபனத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற கோரிக்கைகள் ஆலோசிக்கப்பட்டு வருகின்றனவென்று ரயில்வே போர்டார் சம்மேளனத்திற்கு உறுதிமொழி கூறியிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

* * * *

**மஞ்சள் பெட்டிக்கு நமஸ்காரம்**

பேராரில் நடந்த தேர்தலில் ஒரு போலிங் ஸ்டேஷனில் தேலிவகுப்பு (வாணியர் வகுப்பு) ஸ்திரீகளில் சிலர் காங்கிரஸ் அபேக்ஷகர்களுக்காக வைக்கப்பட்டிருந்த மஞ்சள் பெட்டிக்கு முன்பு சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்து தங்களது வாக்குச் சீட்டுகளை அதில் போட்டனராம்.

* * * *

**ஜில்லா அதிகாரிகளுக்கு எச்சரிக்கை**

ஐக்கிய மாகாண கவர்ன்மெண்ட் பிரதமக் காரியதரிசி ஜில்லா அதிகாரிகளுக்கு ஒரு சுற்றறிக்கை விடுத்திருக்கிறார். அதில் அவர் தெரிவித்திருப்பதாவது:—தேர்தல் பிரசாரத்தை பாமர ஜனங்களிடை ராஜாங்க துவேஷத்தைப் பரப்புவதற்கும் மற்றொரு நேரடியான இயக்கத்திற்கு முஸ்தீபு செய்யப் புரட்சி மனோபாவத்தை வளர்ப்பதற்குமான சாதனமாகப் பயன்படுத்திக் கொள்ளவிடக்கூடாது. ராஜாங்கத் துவேஷமான போதனைகள் நடந்தால் கி. பு. கோ. 108-வது பிரிவின்படி உடனே நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். சர்க்காரிடமும் நிர்வாகத்திடமுமுள்ள மதிப்பு பலஹீனப்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இது மிக்க முக்கியமும் அவசரமுமான விஷயமாகும்

* * * *

**இந்தியக் கடனுக்சப் பர்மா சேலுத்தும ்தாகை**

பார்லிமெண்டில் ஆஜர் செய்யப்பட்டுள்ள இரண்டு நகல் உத்தரவுகள் இப்பொழுது வெளியிடப்பட்டிருக்கின்றன. ஒரு உத்தரவுப்படி, பிரிவினை ஆரம்ப வருஷத்தில் பர்மா இந்தியாவுக்கு 3 கோடி 23 லக்ஷத்து ஒரு ஆயிரம் ரூபாய் கொடுக்கும். பிற்பட்ட வருஷங்களில் சபையுடன் கூடிய மன்னர் நிர்ணயிக்கும் தொகை பர்மாவினால் இந்தியாவுக்குச் செலுத்தப்பட்டுவரும். ஆமரி மத்தியஸ்த சபை கணக்கிட்ட பிரகாரம் 51¾ கோடி ரூபாய் கடனைத் தீர்க்க இந்தப் பணம் தவணையாகச் செலுத்தப்படுகிறது.

* * * *

**பூகம்பத்தினாலேற்பட்ட வாழ்க்கை மாறுதல்**

1935-ம் வருஷத்திய குவெட்டா பூகம்பத்தில் அகப்பட்டுக்கொண்ட ஒரு ஹிந்து யுவர், பூர்வ வாழ்க்கையில் தாம் ஹிந்துவாக வாழ்ந்ததை மறந்துவிட்டு இப்பொழுது முஸ்லீமாக வாழ்ந்துவருகிறார். அவர் இறந்து விட்டாரென்று நினைத்து அவருடைய ஹிந்து பந்துக்கள் அவருக்கு சவக்கிரியைகளை ஒவ்வொருவராகச் செய்து வந்தனர். தம்முடைய சொந்த ஊராகிய ராவல்பிண்டிக்குப் பத்துமைலுக்கப்பாலுள்ள ஒரு சிறு கிராமத்தில் இவர் வசித்து வருகிறார்.

ஹிந்துவாக இருந்த சமயத்தில் தீனநாத் என்று அவருக்குப் பெயர். அவரை சமீபத்தில் அவருடைய பந்துக்களில் ஒருவர் சிஹாலா கிராமத்திற்கருகில் அகஸ்மாத்தாகச் சந்தித்தார். பயங்கரமான பூகம்பத்தால் அவருடைய முகத்தில் தழும்புகள் ஏற்பட்டிருந்தபோதிலும் அவருடைய பந்து அவரை அடையாளம் கண்டுபிடித்துவிட்டார். ஆனால் அவருடைய பந்து அவரை நெருங்கி, தீனநாத் என்று அழைத்தபோது, தீனநாத்துக்கு ஒன்றும்புரியவில்லை. வந்தவரை அவர் தெரிந்துகொள்ள முடியவில்லை.

இப்பொழுது, ராவல்பிண்டிக்கு வரும்படியாக தீனநாத் தூண்டப்பட்டுவிட்டார். ஆனால் தனியாகவல்ல. தம்முடைய முஸ்லீம் மனைவியிடம் அவர் அளவு கடந்த அன்பு பாராட்டுகிறபடியால் அவர்களைப் பிரிக்க முடியவில்லை. அவர்களது வருகை ராவல் பிண்டியில் ஒரு பரபரப்பை உண்டு பண்ணியிருக்கிறது.

குவெட்டாவில் வேலை செய்துகொண்டிருந்த தீனநாத், பூகம்பத்தில், தாம் வசித்துக்கொண்டிருந்த வீட்டிற்கடியில் உயிரோடு புதையுண்டதாக, கிராமத்தில் அவருடைய பந்துக்களை விசாரித்ததில் தெரியவருகிறது. இறக்கும் தறுவாயில் சில முஸ்லீம்கள் அவரை மீட்டி, தெரியாத இடத்திற்குக் கொண்டுபோய் விட்டதாகச் சொல்லப்படுகிறது. அதற்குப் பிறகு அவர் இஸ்லாத்தை தத்தழுவி ஒரு முஸ்லீம் பெண்ணையும் மணந்ததாகக் கூறப்படுகிறது.


# மஞ்சள் பெட்டிக்கு 'ஜே'

*
தேசத்தை நினையுங்கள்; நம் அடிமைவாழ்வு ஒழிந்து சுதந்திரம் பெற்று சுகமாக வாழ மங்களகரமான **மஞ்சள் பெட்டியிலேயே உங்கள் ஓட்டுகளைப்போடுவீர்.**
*

**உங்கள்**

**இருவித**

**கடமை**

*
தேகத்தை எண்ணுங்கள். அன்றாடம் நம்மை வருத்தும் நோய்களினின்றும் விடுபட்டு, ஆரோக்கிய வாழ்வு வாழ **மஞ்சள் பாக்கெட்டிலுள்ள "ஜே" பெருங்காயத்தையே வாங்குவீர்.**
*

# மஞ்சள் பாக்கெட்டில் 'ஜே'



மாரிஸ் ஷெவலியர் நடிக்கும்
"கிராம வாழ்க்கை"
என்ற படத்திலிருந்து இரு காட்சிகள்.



# :: ஹைதராபாத் காட்சிகள் ::

ஹைதராபாத் நிஜாம் பட்டமே
வெள்ளி விழாக் கொண்



ஹைக்கோர்ட் கட்டிடங்கள்.



பலாக்னுமா மாளிகை.



சமஸ்தான புஸ்தகசாலைக் கட்டிடங்கள்.



ஹைதராபாத் ந



சார்மி



பிபி-கா-மக்பாரா,

டமேற்றுக்கொண்டு இப்பொழுது 25 வருஷங்களாகின்றன. இது சம்பந்தமாக இப்பொழுது சமஸ்தானமெங்கும் கொண்டாட்டம் ஆரம்பமாகியுள்ளது. ஹைதராபாத் நகரின் சில முக்கிய காட்சிகளை இங்கு பிரசுரிக்கிறோம்.



த் நகர வாயில்.



நைஜாம் சாகர் தேக்கம்.



னர்.



கோல்கொண்டா கோட்டை.



ாரா, அவுரங்காபாத்.



சார்மினர் தெரு.



சமீபத்தில் வேலூரில் நடந்த போலீஸ் பந்தயங்களில் ஹர்டில்ஸ் போட்டியில் திருநெல்வேலி ஸ்ரீமான் சுப்பய்யா தேவர் வெற்றி பெறும் காட்சி.



தை அமாவாசையின்போது சமுத்திர ஸ்நானம்.





சமீபத்தில் இத்தாலியில் நடந்த கடற்படை அணிவகுப்பு.

ராக நடந்துகொண்டால் உடனே மற்ற நாடுகள் ஒன்று சேர்ந்து தன்னை நசுக்கிவிடுமென ஹிட்லர் உணர்ந்தால் தான் அவர் திமிரைக் கைவிடுவார் என அப்பத்திரிகை எழுதியிருக்கிறது.



அடிஸ் அபாபாவில் அபிஸீனிய யுவர்கள் இத்தாலிய யுவர் ஸ்தாபனத்தில் சேர்க்கப்பட்டபோது எடுத்த படம். ஸீனர் முஸோலினியின் பெரிய உருவப் படமொன்று அப்பொழுது அங்கு வைக்கப்பட்டிருந்தது. அபிஸீனியாவில் இத்தாலிய ஆட்சி நிலை பெறுகிறதா!

# பிரபஞ்ச வர்த்தமானம்

---

### யுத்த ஒத்திகை

பிரிட்டிஷ் சர்க்கார் சிங்கப்பூரில் ஒரு கோடி பவுன் செலவில் ஒரு பெரிய படைத்தளம் நிர்மாணித்திருக்கின்றனர். அத்தளத்தின் பலத்தைச் சோதித்தறிய யுத்த ஒத்திகை நடைபெற்றது. இந்த ஒத்திகையில் கடற்படை, விமானப்படை ஆகியவற்றைச் சேர்ந்த 8,000 பேர் ஈடுபட்டிருந்தனர். எவ்வளவு பெரிய படையானுலும் அது சிங்கப்பூர் தளத்தை முறியடிக்க முடியாதெனத் திண்ணமாக நம்பப்படுகிறது.

* * * *

### ஸ்பெயின் யுத்தம்

ஸ்பெயினில் உள் நாட்டுக் கலக யுத்தம் இன்னும் மும்முரமாக நடைபெற்று வருகிறது. கலகக்காரர்கள் தங்களது படைகளையெல்லாம் ஒன்று திரட்டி மாட்ரிட்மீது படையெடுத்துச் சென்றனர். கடுமையான யுத்தத்திற்குப் பிறகு சில கேந்திர ஸ்தானங்களைக் கலகக்காரர் கைப்பற்றியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. மத்தியதரைக் கடலில் யுத்த தளவாடங்களுடன் கடலோனியாவுக்குச் சென்றுகொண்டிருந்த ஒரு ஸோவியத் கப்பல் மீது ஸ்பானியக் கலகக் கோஷ்டியைச் சேர்ந்த கப்பல்கள் பீரங்கிப்பிரயோகம் செய்து அதை மூழ்க்கிவிட்டன. மற்றொரு போர் முனையான மலாக்காவிலும் கலகக் கோஷ்டியின் யுத்தக் கப்பல்கள் இடைவிடாது பீரங்கிப் பிரயோகம் செய்தனவாம். கலகக்காரர்கள் மலாகா நகரைக் கைப்பற்றி விடுவார்களெனக் கூறப்படுகிறது.

* * * *

### காலனிகளைப் பெற ஜேர்மன் முயற்சி

லண்டனிலுள்ள ஜெர்மன் ஸ்தானீகரான ஹெர் வான் ரிப்பன்ட்ராப் இவ்வாரம் ஹாலிபாக்ஸ் பிரபுவைப் பேட்டி கண்டு பேசுவார் என அறிவிக்கப்பட்டிருக்கிறது. அப்பொழுது முன்னர் ஜெர்மனிக்கிருந்த குடியேற்ற நாடுகளை அத்தேசத்திற்குத் திருப்பிக் கொடுப்பதுபற்றிய பிரச்னையை ஜெர்மன் ஸ்தானீகர் எழுப்பக்கூடுமெனத் தெரிகிறது. இது சம்பந்தமாக ஜெர்மனியின் கோரிக்கைக்கு அதன் கொள்கை சம்பந்தப்பட்டவரை பிரிட்டிஷ் சர்க்காரின் அங்கீகாரத்தைப் பெறவேண்டுமென ஜெர்மன் ஸ்தானீகர் விரும்புகிறார்.

* * *

### அந்நியரை அவமதித்ததற்காகத் தண்டனை

ஜார்ஜ் பிரஸ் என்பவர் யூதரை ஒழிக்க வேண்டுமென ஹிட்லர் கொண்டுள்ள கொள்கையை உற்சாகத்துடன் ஆதரிப்பவர். ஒரு தெருவில் சிறிது கருத்த மேனியுள்ள மூவர் நடந்து செல்வதைக்கண்ட ஜார்ஜ் பிரஸ் "ஆபாஸ யூதர்கள்" என அவர்களை நோக்கிக் கத்தினார். இதன்பேரில் அவர் அந்நியரை அவமதித்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டார். இப்பொழுது அவருக்கு 6 மாதச் சிறைவாச தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. அவரால் அவமதிக்கப்பட்ட மூவரில் ஒருவர் இராக் ஸ்தானீகர். காரியாலயத்தின் காரியதரிசி, மற்ற இருவரும் அவருடைய நண்பர்கள்.

* * * *

### ஹிட்லரின் திமிரான பேச்சு

ஹெர் ஹிட்லர் சமீபத்தில் செய்த பிரசங்கம் திமிரான பேச்சு எனவும், அதற்குப் பிரிட்டிஷ் பிரஞ்சு சர்க்காரின் உறுதியற்ற மனப்பான்மையே காரணமென்றும் மாஸ்கோவில் கருதப்படுகிறது. இங்கிலாந்தும் பிரான்ஸும் திக்கற்ற நிலைமையில் ஹிட்லர் முன் கையேந்திக் கெஞ்சுவதுபோல் ஒரு பத்திரிகையில் ஒரு படம் வெளியாகியிருக்கிறது. தான் திமி


கேஸரியின்

மூன்று இரத்தினங்கள்

## லோத்ரா

**கர்ப்பாசய டானிக்**

சூதகவலி, சூதகக் கிரமத்தில் தோஷம், அதிக அல்லது குறைந்த இரத்தப் போக்கு, வெள்ளை, வெட்டை, வலி, இழுப்பு, கீல் பிடிப்பு, தூக்கமின்மை, அஜீரணம், மலச் சிக்கல், இருமல், காசம், தலைவலி, முதுகுவலி முதலியவற்றை நிவர்த்திக்கிறது.

## அமிர்தா

**இரத்த சுத்தி டானிக்**

இரத்த மின்மை, அஜீரணம், மலச்சிக்கல், மூளை சோர்வு, பலவீனம், ஹ்ருதயத் துடிப்பு, இந்திரிய ஸ்கலிதம், ஞாபகக் குறைவு, இந்திரிய மெலிவு, பார்வை மந்தம், பித்த மயக்கம், ஸ்திரீ சம்பந்தமான ரோகங்கள், சரும வியாதிகள் முதலியவற்றிற்கு.

## அர்க்கா

**சிறந்த ஜுர நிவாரணி**

இன்ப்ளூவென்சா, டைபாயிட், மலேரியாமுதலிய எல்லா வகை ஜுரங்களையும் நிவர்த்திப்பது. ஈரல் பெருக்கம், வயிற்றுக் குலைக்கட்டியையும் அகற்றுகிறது.

காட்லாக்குக் கெழுதுக

கேஸரி குடீரம்,

எழும்பூர், மதராஸ்.



## மாடர்ன் டயமண்ட்ஸ்

(அசல் வைரங்களுக்குப் பதில்)

மேன்மைதங்கிய சென்னை கவர்னர், லேடி மார்ஜோரி எர்ஸ்கைன்

இந்திய, ஐரோப்பிய வைர விற்பனைகள், ராஜாக்கள், ஜமீன்தார்கள், ஹைக்கோர்ட் ஜட்ஜிகள், மேயர்கள், இவர்களாலும் இந்தியா பூராவுமுள்ள, இதர கனவான்களாலும்,சீமாட்டிகளாலும் புகழப்பெற்றவை.

சவான் பொனனில் "மாடர்ன் டயமண்ட்ஸ்" வைத்துக் கட்டப்பட்ட:

அழகு நிறைந்த லோலக்குகள் ஜதை 1-க்கு ரூ. 20-ம், அதற்கு மேலும் கம்மல்கள் ஜதை 1-க்கு ரூ. 20-ம், அதற்குமேலும் மூக்குத்திருகுகள் ரூ. 4-ம், அதற்கு மேலும்.

**வி. வி. ஆச்சார்யுலு & ஸன்,**

நூறு வருஷப் பிரக்யாதிபெற்ற நகை வியாபாரிகள்.

S-03, பொன்னப்ப செட்டித்தெரு, பார்க்டவுன், மதராஸ்.

### விண்ஸர் கோமகன் விவாகம்

மிஸஸ் ஸிம்ஸனை விண்ஸர் கோமகன் ஏப்ரல் மாதக் கடைசி வாரத்தில் விவாகம் செய்துகொள்ளுவார் என்றும் விவாகத்திற்குக் கெண்ட கோமகன் கிளாஸெஸ்டர் கோமகன் இருவரையும் அவர் அழைத்திருப்பதாயும் "அம்ருதபஜார்" பத்திரிகை அறிவித்திருக்கிறது.

* * * *

### பிரெஞ்சு படைப் பெருக்கம்

பிரெஞ்சு படைப் பெருக்கத்தைப் பற்றி பிரெஞ்சு பிரதிநிதிகள் சபையில்தற்காப்புமந்திரியும், ஆகாயப்படை மந்திரியும் பின் வருமாறு தெரிவித்திருக்கின்றனர்:—

வாலிபர்களுக்கும் கட்டாய ராணுவப்பயற்சி அளிக்கவும், ரிசர்வ் அதிகாரிகளுக்கு விசேஷப்பயிற்சி அளிக்கவும், யுத்த மேற்படுகையில் தொழிற்சாலைகளனைத்தையும் சர்க்கார் உபயோகித்துக் கொள்ளவும், ராணுவ இயந்திர சாதனங்களைப் பெருக்கவும், எல்லைப் புறத்திற்கு ஒரு புதிய, பெரிய ரஸ்தா அமைக்கவும் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

ஐரோப்பாவில் யுத்தம் ஏற்படுமாயின், அது ஐரோப்பிய நாடுகள் மட்டுமே கலந்து கொள்ளும் யுத்தமாயிருக்குமென நாங்கள் நம்புகிறோம். அதைத் தவிர்க்க நாங்கள் எங்களாலான அனைத்தையும் செய்வோமெனினும் எதிரிகளுக்கு இடங்கொடாத முறையில் நமது எல்லைப்புற அரண்களைப் பலப்படுத்தவேண்டியது நமது கடமையாகும்.

ஜெர்மனியில் பத்து லக்ஷம் துருப்புகளைக் கொண்ட ராணுவப் படை இருந்து வருகிறது. இதைத் தவிர அந்நாட்டில் ரிஸர்வ் துருப்புகளும் நவீன யுத்த விமானங்களும் கடற்படையும் இருந்துவருகின்றன. நம்மைச் சுற்றியுள்ள நாடுகளெல்லாம் யுத்த தளவாடங்களைப் பெருக்கி வருகின்றன. பிரான்ஸ் மட்டும் ஒன்றும் செய்யாமல் அந்நியரால் எளிதாக முறியடிக்கப் படக்கூடிய நிலையிலிருக்கக்கூடாது.

உலகில் பிரான்ஸைவிட அதிகமான ஆகாயப் படைபலமுள்ள நாடு ரஷியா ஒன்று தான். ஜெர்மன் விமானங்களைவிட பிரஞ்சு விமானங்கள் பன்மடங்கு சக்தி வாய்ந்தவையாகும். சென்ற ஆறு மாத காலத்தில் பிரஞ்சு யுத்த விமானங்களின் தொகை 37 சதவிகிதமும், யுத்த தளவாடங்கள் 70 சதவிகிதமும் அதிகரித்திருக்கின்றன.

* * * *

### யுத்தமுறையும் ஏசுநாதர் உபதேசமும்

லண்டனில் நடைபெற்ற சர்ச் மகாநாட்டில் பின்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டிருக்கின்றன:—

"ஒரு தேசத்துக்கும் இன்னொன்றுக்கும் ஏற்படும் தகராறைத் தீர்க்க யுத்த முறையைக் கையாள்வது ஏசுநாதரின் உபதேசத்திற்கு முரண்பட்டதாகும்.

உலகமுழுதும் யுத்த தளவாடங்கள் அதிகரிக்கப்பட்டு வருவது கண்டு இம்மகாநாடு வருந்துகிறது. தேசங்களிடை நல்லுணர்ச்சியை வளர்க்க எல்லா கிறிஸ்தவர்களும் இன்னும் மும்முரமாக முயற்சி செய்ய வேண்டும்.

யுத்தத்திற்கான அரசியல், பொருளாதார காரணங்களை நீக்க பிரிட்டிஷ் சர்க்கார் எடுத்துக்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு சர்ச் ஆதரவளிக்கிறது. சர்வதேசச் சங்க உடன்படிக்கையிலிருந்து வழுவுவதில்லையென்றும், நாட்டின் தற்காப்புக்காகவும், சர்வதேசிய பந்தோபஸ்துக்காகவுமே தங்களுடைய படை பலத்தைப் பிரயோகிப்பதென்றும், பிரிட்டிஷ் சர்க்கார் கொண்டுள்ள கொள்கையை இம்மகாநாடு வரவேற்கிறது.

இக்கொள்கையை யொட்டி பார்லிமெண்டு அவசியமாகக் கருதும்படை பலத்தை வைத்துக்கொள்ள சர்க்காருக்குள்ள உரிமையை இம்மகாநாடு அங்கீகரிக்கிறது. அவர்கள் இக்கொள்கையைக் கொண்டிருக்கும் வரை கிறிஸ்தவப் பிரஜைகள் தேச சேவைக்காக ஆயுதங்கள் தாங்கலாம்.

இதே சமயத்தில் கிறிஸ்தவக் கொள்கைகளையும் தர்மத்தையும் பெரிதாகக்கொண்டு அவைகளுக்கேற்றவாறு தற்காப்புத் திட்டங்களை ஆதரிப்பதோ அல்லது எதிர்ப்பதோ கிறிஸ்தவர்களின் கடமையாகும்."

* * * *

### கொலைத் தொழிலுக்கு குமாரர்களை அனுப்பாதீர்கள்

ஸ்பானியத் தாய்மாரில் 32 பேர் சேர்ந்து ஜெர்மன் தாய்மார்களுக்கு ஒரு விண்ணப்பம் விடுத்திருக்கின்றனர். அதன் விவரமடங்கிய பிரசுரங்கள் பல்வேறு துறைகள் மூலம் ஜெர்மனிக்கு அனுப்பப்பட்டுவருகின்றன. அவ்விண்ணப்பத்தின் சாரம் வருமாறு:—

இந்நாட்டைச் சேர்ந்த பாஸிஸ்ட் துரோகிகள் ஹிட்லரின் உதவியைக்கொண்டு உங்கள் குமாரர்களை ஆயிரக்கணக்கில் இங்கு வரவழைத்து அவர்களைக்கொண்டு கோரக் கொலைத் தொழில் நடத்திவருகின்றார்கள். ஜெர்மன் தாய்மார்களே, இக் கொலைத் தொழில் நடத்துவதற்கு உங்களுடைய குமாரர்கள் இங்கு அனுப்பப்படுவதை நீங்கள் அனுமதிக்கக்கூடாது.

நமது நாடுகளுக்குத் துரோகம் செய்துவருவோரின் எண்ணம் ஈடேறுவதற்காக நமக்குப் பொக்கிஷம்போலுள்ள நமது அருமைக் குமாரர்கள் பலியாக நாம் சம்மதிக்கக் கூடாது. ஒருவரையொருவர் நேசித்துச் சமரசமாக வாழ வேண்டிய நமது குமாரர்கள் ஒருவரையொருவர் கொன்று தள்ள நாம் அனுமதிக்கக் கூடாது. ஜெர்மன் தாய்மார்களே! எங்களுக்குதவிபுரியுங்கள். நம்மிருவருக்கும் விரோதியாயுள்ளோரை எதிர்க்க நாம் ஒற்றுமைப்பட வேண்டும். நாம் ஒற்றுமையாயிருந்தால்தான் இந்தக் கோரமான யுத்தத்தை நிறுத்தக்கூடும். ஜெர்மன் இளைஞர்களும் ஸ்பானிய வாலிபர்களும் கொன்று குவிக்கப்படுவதை நிறுத்த நாம் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். உங்கள் நாட்டின், வீட்டின்க்ஷேமத்திற்காக உடனே அவ்வாறு செய்யுங்கள்.

* * * *

### பிரெஞ்சு தற்காப்புக்காக 14 கோடி பவுன்

பிரெஞ்சு தற்காப்புக்காக மூன்றுவருஷங்களில் 14 கோடி பவுன் செலவு செய்வதென்ற யோசனை பிரதிநிதிகள் சபையில் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.




இம் மாய
மெழுகு

புதிய சருமத்தை வளர்க்கிறது.

திடீரென நேரிடும் சம்பவங்களுக்கு ஜாம்-பெக் உபயோகியுங்கள்.

திடீரென விபத்துகள் ஏற்படலாம்; குழந்தைகளுக்குக் கத்தி வெட்டுகள்; சிராய்ப்புகள் முதலியவை நேரிடுகின்றன. சாமானியம் தானே என்று அசட்டையாக விடாதீர்கள்; உடனே ஜாம்—பெக் தடவுங்கள்.

படத்தில் ஒரு குழந்தை; அதன் தலையில் காயம்பட்டுவிட்டது; தாயார் உடனே ஜாம்—பெக் தடவுகிறாள்; விரைவில் ரணம் ஆறிவிடும்.

நீங்களும் இதே மாதிரி செய்யுங்கள். எல்லா சரும நோய்களுக்கும் ஜாம்—பெக் உபயோகியுங்கள். தழும்பின்றி, ஆற்றுவது. பெட்டி 1-க்கு ரூ. 1 அல்லது ரூ. 2-4 வீதம் எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்




ஏஜண்டுகள்: மெஸர்ஸ் தாதா & கம்பெனி, பார்க் டவுன், மதராஸ்.

மிருகக் கொழுப்பற்றது

ஜாம்பெக்
Zam-Buk



### இது ஓர் ஆச்சரியமல்லவா !!

இல்வாழ்க்கைத் திறவுகோல் இதுவே. தங்கள் எண்ணத்தை எனக்குத் தெரிவிக்காமலே திரிகால பலனை தங்களுக்கு அறிவிக்க ரூ. 2. தங்கள் எண்ணத்தை தெரிவித்து 1 முதல் 5 கேள்விக்கு ரூ. 1. ராசி முதல் டிக்ரிவரை கணித்து ஒரு வருட பலன் எழுத ரூ. 5. ஜனன காலம் தேவை அல்லது எனக்குக் கடிதம் எழுதும் நேரம் எழுதவும். இஷ்டார்த்த சித்தி ரக்ஷையும், மூலிகையுடன் தயார் செய்து அனுப்ப ரூ. 10. வி. பி. பிரத்யேகம்.

ரா. முத்துவேல் முதலியார்,
கலைமகள் ஜோதிடம்,
48, தேர்முட்டி வீதி,
திருப்பாபுலியூர்,
தென்னாற்காடு ஜில்லா.

## MUCH PLEASED

சென்னை (சாம்பியன் ரீப்ஸ்)யி லிருந்து மிஸ்டர்......24—9—36உ யிட்டு எழுதுயதாவது.—"வசீ கரன் மூலிகை" ரொமப திருப்தி யளித்தது; விசேஷ பலன் கிடைத் தது. இரண்டாவது நல்ல......... "திபேத மூலிகை"யால ஜீழ்ச கண்டவை சித்தியாகின்றன; லாமா யோகியின் வரப்பிரசாதம்.



வசீகரண் ஆண் பெண் இரு பாலருக்கும் இடையில் இன்பமயமான சூதலை உடனே விளைவிக்கும். இதை அணிபவர் அதன் ஆச்சரிய சக்தியை விரைவில் அறிவர் விலை ரூபா 3-8-0 2. வியாபாரமும், தொழிலும்:—நிச்சயமான தொழில்விருத்தியும், இலாபமும்சித்திக்கும். விலைரூ.3-8-0 3. வியாஜ்யங்கள்:—இதன் சக்தியால் நம்பமுடியாத எவ்விதவியாஜ்யங் களும் ஜெயமாகும். விலை ரூ. 3-8-0 4. வியாதிகள :— முடியாதெனக் கைவிடப்பட்ட சகலவித கொடிய ரோகங்களும் அடியோடு நீங்கும். விலை ரூபா 3-8-0 5. உத்தியோகம்:—வேலையில்லாத திண்டாட்டத் தில் அவதிபபடும் இளைஞருக்கு அவரவர் ஸ்திதிக்குத் தகுந்தபடி உத்தியோகம் கிடைக்கும். சம்பள உயர்வும் உத்தியோக மேன்மையும் நிச்சயம் விலை ரூ. 3-8-0 6 பரீக்ஷைகள்: எவ்விதப் பரீக்ஷைகளிலும் நிச்சயமாய்த் தேறலாம். விலை ரூபா 3-8-0 7. சத்ருக்களை ஜெயித்தல்:—எவ்வளவு அபாயகரமான விரோதிகளும் இதை அணிபவர் முன், முழந்தாளிட்டுப் பணிவர். விலை ரூபா 3-8-0 8. கிரஹ தோஷம்:-எல்லாவிதமான கிரஹ தோஷங்களும் சாந்தியாகும் விலை ரூபா 3-8-0 9. ஆரோக்யமும், செல்வமும்:— எளிதில் சித்திக்கும். விலை ரூ. 3-8-0

அறிவிப்பு:—இந்த சாஸ்திரங் களில் நம்பிக்கை உள்ளவர்கள் மாத்திரம் தங்கள் நோக்கம் இன்னதென்பதைக் குறித்து எழுதவும். ஒவ்வொரு நோக்கத்துக்கும் தனிப்பட்டமூலிகை அவசியம். ஒரு மூலிகையின் விலை ரூபா 3-8-0. தபால் சார்ஜு வேறு ஒரே தடவையில் 3 மூலிகைகள் வாங்கினால் தபால் சார்ஜ் உள்பட ரூ. 9-6-0.

**BIJOYA LODGE, (S.M.W.**
P. O SALKIA HOWRAH



## ரூ. 500 இனாம்!

திமிர்குஷ்டமும்,
வெண்குஷ்டமும்.

உலகக் கியாதி வாய்ந்த எனது மருந்துகளை 15 தினங்களுக்கு உபயோகித்தால் எல்லாவிதமான திமிர் குஷ்டமும், வெண்குஷ்டமும் நிரந் தரமாக நிவர்த்தியாகிவிடும். பற்பல டாக்டர்கள், கவிராஜர்கள், ஹக்கீம் களும் கைவிட்டதானுல்கூட பரவா யில்லை. எனது அற்புத மருந்துகளை உபயோகியுங்கள். பலனில்லை என நிரூபிப்பவருக்கு ரு. 500 இனாம். 7 நாள் மருந்து ரூ. 2—8; 15 நாள் மருந்து ரூ. 4. தபால் செலவு தனி

SRI SWAMI & Co,
(34) Panchpota, Bengal.











10 வருஷம் உத்திரவாத முள்ள புது மாதிரியான பஞ்சவர்ண கல்செயின்கள்

(செயின் 1-க்கு)

## ரூபாய் 5-0-0.

எங்கள் ரோல்டு கோல்டு செயின்கள் ஐந்துவித நிறமான செயற்கை கற்கள் வைத்துக் கட்டிய இந்த புது மோஸ்தர் செயின்களை குழந்தைகளும், பெரியவர்களும் அணிந்து ஆனந்தமடையலாம்.

(கேட்லாக் இலவசம்)

**R. S. பிரகாசம் & Co,**
அலாய் கோல்டு ஜுவல்லர்ஸ்.
187, சைனு பஜார் ரோட். ஜி டி
மதறஸ்



உலகப் பிரசித்தி பெற்ற
ஆர். மூகம் அண்டு கம்பெனியாரின்

## நெ. 1. மணிமார்க் பட்டணம் மூக்குத்தூளை

உபயோகியுங்கள்.

TRADE MARK

1. நெ. வீசை 1-க்கு விலை ரூ. 4 0
2. நெ. வீசை 1-க்கு விலை ரூ. 3 8

ஏஜண்டுகள் தேவை:—
விலாசம் : ஆர். மூகம் அண்டு கம்பெனி,
நெ. 5, ஓல்டு ஜெயில் தெருவு, மதராஸ்.



சேலத்தில் முதல் முதல் ஸ்தாபிக்கப் பட்ட நர்சரி தோட்டம்

3 வருஷத்தில் காய்க்கக்கூடிய ஒட்டுமாஞ்செடிகள், ஒட்டுப்பழவர்க் கச்செடிகளும் இன்னும் இதர செடி களும் கிடைக்கும். இங்கிலீஷ் அல் லது நாட்டுக் காய்கறி, இங்கிலீஷ் புஷ்ப விதைகள், 20 சாம்பெல் பாக் கெட் விலை ரூ. 2-10. சாம்பல் பாக் கெட்விலை ரூ 1-4 கேட்லாக் இனாம்.

ச. கோ. இ. காதர்மீரா சாயபு,
ஹெட் நர்சரி தோட்டம், சேலம்.



## மியூச்சுவல் அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.

தலைமை ஆபீஸ் :
187, மவுண்ட் ரோட், மதராஸ்.

நவீன, சாஸ்திர பூர்வமான தாராளத் தன்மை கொண்ட பாலிஸி ஒப்பந்தங்கள் எம்மிடம் கிடைக்கும். எல்லோரையும் திருப்தி செய்விப்பவை குறைந்த பிரீமிய விகிதங்கள்.

டி. வி. ராமமூர்த்தி,
செக்ரிடரி






## மாதவிடாய் கோளாறுகள்

அவைகளே பெண்மலட்டிற்கும் காரணம்

ஸ்திரீகளின் வியாதிகளுக்கு வேலன்ஸ் ஸ்திரீ ஸோதரியைவிட சிறந்த ஔஷதம் வேறில்லை. இது மாதவிடாயைச் சிரமப்படுத்தி, அதிகமாகப் போவதைத் தடுத்து, சூதக பந்தத்தை உடைத்து மாதவிடாய் காலத்தில் ஏற்படும் வயிற்று வலியைப் போக்கி, மலட்டுப்பூச்சிகளைக் கொன்று சந்தான பாக்யத்தை யளிக்கிறது. டாக்டர்களும் இதையே சிபார்சு செய்கின்றனர். பத்தியமில்லை. விலை ரூ. 5. பாக்கிங் & தபால் செலவு வேறு.

**வேலன்ஸ் மெடிக்கல் ஹால்,**
காரணீஸ்வரர் கோயில் தெரு,
மயிலாப்பூர், மதராஸ்.



திருவாங்கூர் மஹாராஜா, மஹாராணி முதலியோர் சென்னை வந்தபோது எழும்பூர் ஸ்டேஷனில் வரவேற்கப்பட்டனர்.



எகிப்திய அரசர் பரூக்கும் அவரது இரு சகோதரிகளும் நைல் பிரதேசத்தைச் சுற்றிப் பார்த்து வருகின்றனர்.

# நாட்டு நடப்பு சித்திரக் கண்ணாடி



கோஜா வகுப்பு சாரணர்கள் அணிவகுப்பு சமீபத்தில் பம்பாயில் நடைபெற்றது. அதை ஆகாகான் குமாரர் ஆலிகானும் அவரது மனைவியும் பார்வையிட்டனர். அணிவகுப்பைப் பார்க்க வந்திருந்த கோஜா ஸ்திரீகள்.

## சிப்பி மோதிரம்
(14-ம் பக்கம் தொடர்ச்சி)

தவர்களுக்கு காய் கனிகள், தேன், தினைமா இவைகளைக் கொடுத்துதவினான். தங்களை உபசரித்ததன் பயனாக வீரப்பனுக்கு உதவி செய்ய முன் வந்தார்கள். வீரப்பன் தன் விருத்தாந்தத்தைக் கூறித் தன்னை இலவசமாய் தன் ஊரில் சேர்ப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டான்.

அப்படிப் பிரயாணம்செய்து வீரப்பன் தன் சொந்த ஊரையடைந்தான். ஓடோடிச் சென்று தான் விட்டுச் சென்ற மனைவியும், குழந்தைகளும் இருந்த வீட்டைப் போய்ப் பார்த்தான். அங்கு அவர்களில்லை. வீடோ பாழடைந்திருந்தது. சிறு குடிசைகளிருந்த மேலக்குப்பத்தில் பெரிய பெரிய வீடுகள் கட்டப்பட்டிருந்தன. அடையாளமே தெரியாதபடி மாறுதல்கள் தோன்றின. மனமுடைந்தவனாய் முன் பழக்கமானது போல் தெரிந்த ஒரு பலகாரக் கடைக் கிழவியிடம் விசாரித்தான். வீரப்பனைத் தெரிந்து கொள்ளாத அந்தக் கிழவி சகல விருத்தாந்தங்களையும், சாங்கோபாங்கமாகச் சொல்ல ஆரம்பித்தாள். அன்னம்மாளும் வேலனும் நெருங்கிப் பழகுவதைப்பற்றி ஊரார் பேசிக்கொள்ளும் வம்புக் கதைகளையும் கூறினாள். வீரப்பனது கண்களிலிருந்து கண்ணீர் வடிந்தது. கதை மேலே செல்லச் செல்லத் துக்கம்மாறிவிட்டது; வெறி பிடித்தவன் போல் விழித்தான்.

நல்ல மையிருட்டு, ஊர் அடங்கிவிட்டது. நேராகக் கிழவியால் விவரிக்கப்பட்ட வீட்டுக்குச் சென்றான். கதவிடுக்கு வழியாய் உற்றுப் பார்த்தான். அப்படியே ஸ்தம்பித்துநின்றுவிட்டான்! இரண்டு குழந்தைகள் சுற்றிச் சுற்றி விளையாடிக்கொண்டிருந்தன. பையன் சில வேளைகளில் வேலனுடைய தோள்களில் ஏறி விளையாடினான். அன்னமும்வேலனும் எதிர்எதிராக உட்கார்ந்துகொண்டு இன்பமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். நடுநடுவே குழந்தைகளின் விளையாட்டில் தங்களுக்கேற்பட்ட களிப்பைக் காண்பித்தார்கள்.

வீரப்பன் குழந்தைகளையும் அன்னம்மாளையும் வேலனையும் கண்கொட்டாமல் வெகுநேரம் பார்த்திருந்து விட்டு மனக்குழப்பத்துடன் சந்தடி செய்யாமல்...இருட்டில் மறைந்தான். மனதுக்குள்ளேயே அவர்கள் நான்கு பேரையும் மனமார வாழ்த்திவிட்டுக் கிழவியிடம் சென்று, "அம்மா, நான்தான் அந்த வீரப்பன். இதோபார் நான் விடைபெற்றுச் சென்றபோது அன்னம் எனக்கு அளித்த சிப்பி மோதிரம். ஆனால் நான் உயிருடனிருப்பதை அவள் அறிந்தால் ... குழந்தைகளும் வேலன்தான் தகப்பன் என்று நினைத்துக்கொண்டு, சந்தோஷமாய் இருக்கிறார்கள். நான் அவர்களுக்கு இடையூறாகவிருக்க விரும்பவில்லை. நான் எங்கேயாவது போய் என் பாக்கி நாட்களை நிம்மதியாகக் கழிக்க நினைத்திருக்கிறேன். இந்த சமாச்சாரங்களை என் குழந்தைகளுக்கு மட்டும் பின்னால் தெரிவிக்கும்படிப் பிரார்த்திக்கிறேன்" என்று வேண்டிக்கொண்டான். பின்பு திடீரென்று பயித்தியம் பிடித்தவன்போல் எங்கோ ஓடிவிட்டான். கிழவி ஆச்சரியத்தால் பிரமித்து அப்படியே நின்றாள்.

இச்சம்பவம் நடந்த சில நாட்களுக்குப் பின், அக்கிழவி அன்னத்தின் குழந்தைகளைக் கண்டு அவர்களிடம் பரிவுடன் பேசித் தன்னிடம் அடைக்கலமாக வைக்கப்பட்ட சிப்பி மோதிரத்தைக் கொடுத்தாள். பெரிய பெண் பொன்னி அதைத் தன் கையிலணிந்துகொண்டு தன்னுடைய தாயாரிடம் சென்று தனக்குக் கிடைத்த பரிசைக் காட்டினாள். அம்மோதிரத்தைக் கண்டதும், அன்னம்மாளுக்கு வீரப்பனைப்பற்றிய நினைவுகள் தோன்றின. கணவனைப்பிரிந்த காலத்தில் தான் கொடுத்தனுப்பிய மோதிரமல்லவா! என்று திகைப்படைந்தாள். வாசலில் சென்று தன் கணவன் வந்துவிட்டாரோவென்று சுற்றும் முற்றும் பார்த்தாள். ஏமாற்றந்தான் ஏற்பட்டது; மகளின் இருகரங்களையும் அப்படியே பிடித்துக்கொண்டு தனிமையான இடத்திற்குச் சென்று, "கண்ணே, உனக்கு இம்மோதிரத்தை யார் கொடுத்தது? சொல்லு, சொல்லு" என்று ஆவலுடன் கேட்டாள். அதற்குப் பொன்னி, "அம்மா, நான் பலகாரம் வாங்கச் சென்றபொழுது, நம் தெருக்கோடியிலுள்ள கிழவி இம்மோதிரத்தை எனக்குத் தந்தாள்" என்று சொல்லித் தன் தாயின் முகத்தைப் பார்த்தாள். தாயின் முகம் வாட்டமடைந்திருந்தது.

சற்றும் தாமதியாமல், அப்பலகாரக் கடைக் கிழவியிடம் சென்று மோதிரத்தின் வரலாற்றை விசாரித்தாள். கிழவியும் மோதிரம் வந்த விதத்தை ஒன்றும் மறைக்காது தெளிவாகக் கூறினாள். அன்னம்மாள் ஒன்றும் செய்யத் தோன்றாது திகைத்தாள். மறுவிநாடியில் மனதைத் திடம் செய்துகொண்டு கிழவியைப் பார்த்து, "அம்மணி, என்னிரு குழந்தைகளையும் வேலனிடம் பாதுகாக்கும்படி நான் மன்றாடியதாகத் தெரிவிக்கவும். கடவுள் சித்தமிருக்குமானால், திரும்பி வந்து இவர்களைப் பார்ப்பேன்!" என்று சொல்லிவிட்டு வீரப்பன் மறைந்த திக்கை நோக்கி மறைந்தாள்.


# வெள்ளைச் சலவைக் கல்
## சானிடரி பிட்டிங்குகள்



தரை மட்டத்தில் வைக்கும் சாக்கடைச் சாதனங்களும், பாண்ட்ரி சிங்குகளும் ராணிகஞ்சிலுள்ள பாட்டரீஸில் தயாரிக்கப்படும் பர்ன்ஸ் வொயிட் கிளேஸ்ட் சானிடரி பிட்டிங்குகளிற்கான இரண்டு உதாரணங்கள். இவையும், பர்ன்ஸ் வாஷ் பேஸின்களும், W. C. க்களும் எல்லாப் பிரபல சானிடரி எஞ்ஜினியர்களிடமும் கிடைக்கும்; இதே ரகமான வெளிநாட்டுச் சரக்குகளைவிட இவை விலை மலிவானவை.



படங்களுடன் கூடிய இலவச புத்தகத்திற்கெழுதுக.

**தி பாட்டரீஸ், ராணிகஞ்ச்**

எம்-ஏ. பர்ன் & கம்பெனி லிமிடெட் 12, மிஸின்ரோ, கல்கத்தா.

தென்னிந்தியாவிற்கு ஏஜண்டுகள்:
பம்பாய் கம்பெனி லிமிடெட், தபாற் பெட்டி 109, மதராஸ்.

BNK 08



## இந்தியா பூராவும் புகழ் பெற்றது

மைசூர் பட்டுகள் இணையற்ற அழகிற்கும், அழுத்தத்திற்கும் பெயர் பெற்றவை.

ஆடம்பரமானஸாடின்கள், ஜார்ஜெட்டுகள், க்ரேப்புகள், டபேடாக்கள், கைக்குட்டைகள் கழுத்துப் பட்டைகள் யாவும் நவீன இயந்திர சாதனங்களைக் கொண்டு விசேஷ அனுகூலமாகத் தயாரிக்கப்படுகின்றன.




**கவர்ன்மெண்ட் பட்டு நெசவுத் தொழிற்சாலை,**
மைசூர்

ஸ்டாக்கிஸ்டுகள் :

1. மதராஸ் ஸ்வதேசி எம்போரியம் லிமிடெட், 1/17 A, மவுண்ட் ரோட், மதராஸ்
2. மேஸர்ஸ் ஜயந்மல் மிஸ்ரிலால் & கம்பெனி, கம்மர்ஷியல் ரோட், உதகமண்டலம்
3. மைசூர் ஆர்ட்ஸ் & க்ராப்ட்ஸ் இலாகா 4, சவுத்பரேட், பெங்களூர்.

சிறுவர் பகுதி

# நூறுபெயர்களுக்கு நமன்

(ஸ்ரீமான் எஸ். கோபாலய்யர்)

மேலக் காவேரியில் யத்தன் என்ற ஒருவனிருந்தான். அவனுக்கிரண்டு மனைவிகள் இருந்தனர். மூத்தவள் இளையவளை எப்பொழுதாவது கொன்றுவிட வேண்டுமென்று எண்ணி இருந்தாள்.

ஒரு சமயம் இளையவள் அருகிலிருந்த ஊரில் தன் பிறந்த வீட்டுக்குச் சென்றிருந்தாள். அவள் ஒரு மாதமாகியும் திரும்பி வரவில்லையாகையால் யத்தன் அவளைப் பார்த்துவரப் புறப்பட்டான். மூத்தவளும் இதுவே இளையவளைக் கொல்லத் தகுந்த சமயமென்று கருதி இளையவளுக்காக விஷம் வைத்து அப்பம் சுட்டுக் கொடுத்தனுப்பினாள். யத்தனும் அந்த அப்ப மூட்டையை எடுத்துக்கொண்டு கிளம்பினான்.

வேகமாய் நடந்து அஸ்தமிக்கும்பொழுதில் மூன்று காத தூரம் போய்விட்டான். யத்தன் நடந்து வந்த அலுப்பால் களைப்படைந்தான். சாலையின் அருகிலிருந்த குளத்திலிறங்கி கை கால்களைக் கழுவிக்கொண்டு சாப்பிட்டு நடந்த சிரமம் மேலிட்டதனால் தன்னையறியாமல் நித்திரை வந்துவிடவே அருகிலிருந்த சாவடியிற் சென்று அப்ப மூட்டையை தலைக்கருகில் வைத்துக்கொண்டு படுத்துக்கொண்டான். நன்றாக நித்திரை செய்தான்.

அந்தச் சாவடிக்கு நான்கு மைல் தூரத்தில் இந்திரபுரி என்றொரு நகரமுண்டு. அவ்வரசனுக்கு ஓர் பெண்ணிருந்தாள். அவளை அரசன் நாளொரு மேனியும் பொழுதொருவண்ணமுமாய் வளர்த்து வந்தான்.

இந்த இந்திரபுரி அரசனுக்கும், மாயாண்டி என்றொரு கள்ளத் தலைவனுக்கும் ஒரு பெரிய மனஸ்தாபம் நேர்ந்தது. கள்வர் தலைவனான மாயாண்டி அரசனின் அருமைப் பெண்ணான இளவரசியைக் கவர எண்ணினான். அதற்காக தன் ஆட்களில் சரியாய் நூறு பெயர்களைக் கூப்பிட்டு அவர்களிடம், "இந்திரபுரிக்குச் சென்று அஞ்சன வித்தையால் இளவரசியைக் கட்டிலுடன் தூக்கி வருமாறு" கட்டளையிட்டான். அவர்கள் எல்லோரும் அப்படியே புறப்பட்டுச் சென்றார்கள். அஞ்சன பலத்தால் இளவரசியைக் கட்டிலுடன் தூக்கிக்கொண்டு நான்கு மைல் தூரத்திலிருக்கும் சாவடி வந்து சேர்ந்தார்கள்.



அன்றிரவுதான் யத்தன் அங்கு தூங்கிக்கொண்டிருந்தது. திருடர்கள் கட்டிலைச் சாவடியிலிறக்கிவிட்டு உட்காரவும் அவர்களுக்கு அப்பங்கள் வாசனை வந்தது. அதைக்கொண்டு யத்தனின் அப்ப மூட்டையை எடுத்து அந்த நூறு திருடர்களும் தின்றார்கள். இவற்றில் விஷம் கலந்திருந்தபடியால் அவைகளையுண்ட அனைவரும் பிணமாய்ப் போனார்கள்.

கொஞ்சம் சிரமம் தீரவே யத்தனும் நித்திரை தெளிந்து கண் விழித்துப் பார்த்தான். அப்ப மூட்டையைக் காணோம். தனக்கு எதிரில் நூறு பெயர்கள் கத்தியும் கையுமாய்ப் படுத்திருப்பதைக் கண்டு அவர்கள்தான் நம்முடைய பக்ஷணத்தைத் தின்றிருக்க வேண்டுமென்று நினைத்து அவர்களுள் ஒருவன் கைக் கத்தியைப் பிடுங்கிக்கொண்டு ஒவ்வொருவனாய் வெட்டி விட்டான். அவர்கள் எல்லாம் விஷங் கலந்த அப்



பத்தைத் தின்று மாண்டார்கள் என்றாவது அல்லது மூத்தாள் இளையாளைக் கொல்ல விஷம கலந்த அப்பஞ் சுட்டுக் கொடுத்தாள் என்றாவது அவனுக்குத் தெரியாது. பிறகு அவன் அங்கிருந்த கட்டிலைக் கண்டு அதனிடம் போய்ப் பார்க்கவே தூங்கும் இளவரசியைக் கண்டான். கட்டிலில் தூங்கும் பெண்ணையும் எதிரில் தான் கொன்ற பெயர்களையும் பார்த்து, "ஓஹோ! இவர்கள் திருடர்களாக இருக்க வேண்டும். இந்தப் பெண்ணை எங்கிருந்தோ கொண்டு வந்திருக்கிறார்கள். எல்லாம் இவளைக் கேட்டால் தெரியும்" என்றெண்ணி அவளை எழுப்பினான். அவள் எழுந்திருந்தது தான் தெரியும். வழக்கமாய்த் தூங்கும் அறையில் இல்லாமலிருப்பதையும், தன் முன் ஒருவன் நிற்பதையும் பார்த்துப் பயந்தாள். யத்தன் அவளைச் சமாதானம் செய்து தான் அவளைக் கவர்ந்து வந்த நூறு கள்வர்களையும் கொன்றுவிட்டதாகச் சொன்னான். அவள் நூறு திருடர்கள் தலை வேறு, உடல்வேறுபட்டுக் கிடப்பதைக் கண்டு யத்தனின் சூரத்தனத்தை மெச்சினாள்.

பிறகு இளவரசியும் யத்தனும் நடந்து அரண்மனைக்குச் சென்றார்கள். இளவரசி யத்தனின் வீரப் பிரதாபத்தை அரசனிடம் கூறினாள். அரசனுக்கு அக்கள்வர்கள் மாயாண்டியின் ஆட்களே என்று தெரிந்துவிட்டது. அரசனும் நடந்த சங்கதியை யத்தனிடம் நன்றாய் விசாரிக்க, அவன்தான் நூறு பெயர்களை எதிர்த்து யுத்தம் செய்ததைப் பிரமாதமாய் வர்ணித்து அரசன் மனதைக் களிப்பித்தான்.

அரசன் அவனுக்கு "நூறு திருடர்களைக் கொன்றவன்" என்ற பட்டமும் கொடுத்து "நூறு பெயர்களுக்கு நமன்" என்று நாமம் வைத்தழைத்தான். இளவரசியை அவனுக்கு மணம் புரிவித்தான்.



மாயாண்டியும் நூறு பெயர்களைக் கொன்ற நமன் அங்கிருக்கின்றான் என்று அன்று முதல் இந்திரபுரி நகரத்தில் நுழைவதில்லை. யத்தன் மூன்று மனைவிகளுடன் வாழ்க்கை நடத்தினான்.


## வருங்கால பலன்



புராதன சாஸ்திர ஆராய்ச்சியின் பேரில அனுபவம் பெற்ற இருவர் கலந்து தெளிவுபடக் கூறுவதாம்.



பண்டிட் M R K. மூர்த்தி — ஜோதிஷ கலா வல்லபர்

பண்டிட் E. S. K. சுவாமி. — ஜோதிஷ தத்வக்கியானி

ஒரு ஜாதகம கணிக்க ரூ. 1. காரணமுடன் கேள்வி 1-க்கு ரூ. 1. ஒரு வருஷ மாதவாரி பலன் ரூ. 2 ஆயுள்வரை பொதுப்பலன ரூ. 10 ஜாதகமாவது, பிறந்த நேரம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை.

"ஜோதிட கழகம்" 38, தேவராஜமுதலி தெரு, பி டி. மதராஸ்.

# ஜோதிர் மண்டலம்

## தாது வருஷம்— மாசி மாதம்

—[ o ]—

(ஸ்ரீமான் பி. ஸ்ரீநிவாஸவரதன் எழுதியது.)

இப்பக்கத்திலுள்ள நக்ஷத்திர மண்டலம், இம்மாதம் இராக்காலத்தில் சென்னையில் நமக்குத் தென்படும் நக்ஷத்திரக் கூட்டங்களைக் காட்டுகிறது. படத்திலுள்ளபடியே முதல் தேதியன்று (12-2-37) இரவு 10-33-மணிக்கும், 15-ம் தேதியன்று (26-2-37) இரவு 9-38-மணிக்கும், 30-ம் தேதியன்று (13-3-37) இரவு 8-35-மணிக்கும் இக்கூட்டங்களை நாம் காணலாம். சென்னை தவிற மற்ற இடங்களுக்கும் இதை உபயோகப்படுத்தலாம். சென்னைக்கு வடக்கே இருக்கும் ஊர்களுக்கு இப்படத்தை உபயோகப்படுத்த வேண்டுமானல், வடக்கே அடிவானத்தருகே சில நக்ஷத்திரங்கள் அதிகமாகவும், தெற்கடிவானில் சில நக்ஷத்திரங்கள் மறைந்தும் இருக்கும். நக்ஷத்திரங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு இரவும், முன்னிரவைவிட நான்கு நிமிடங்கள் சீக்கிரமாகவே உதயமாகின்றன. ஆதலால் இன்று இப்படத்திலுள்ளபடி நக்ஷத்திரங்கள் இரவு 10-33-மணிக்குத், தென்பட்டால் நாளைக்கு 10-29-க்கு அப்படியே தெரியும். இம்மாதிரியே நாம் எந்த தேதிக்கு படம் எத்தனை மணிக்கு உபயோகப்படும் என்பதைக் கணக்கிட்டுக் கொள்ளலாம்.

படத்தை உபயோகிக்கநாம் எத்திசையை நோக்கி நிற்கிறேமோ, அத்திசை அடி பாகமாக வரும்படி படத்தைத் திருப்பி வைத்துக் கொள்ள வேண்டும். அப்பொழுது நமக்கு எதிரில் தெரியும் முக்கிய நக்ஷத்திரங்களைப்படத்தில் அடிக்கோடு முதல் நடு வரையில் காணலாம். படத்தின் நடுவே மத்திய ஆகாயம். நமக்கு வல இடப்புறம் இருக்கும் கூட்டங்களை முறையே வல இடப்புறங்களில் படத்தில் காணலாம்.

இம்மாதம் பால்வழியென வழங்கும் ஆகாயகங்கையின் பிரவாகம் ஒரு வில்போல் வளைந்து தென்கிழக்கு முதல் வடமேற்கு வரை வியாபித்திருக்கிறது. அது முறையே தென் சிலுவை, ஆர்கோநேவிஸ், ம்ருகவியாதா, மானஸெரஸ், ஓரியன், பர்ஸியூஸ், ஆரிகே, கஸியோபியா முதலிய கூட்டங்களினிடையே பாய்ந்து ஓடுகிறது.

நக்ஷத்திரக் கூட்டங்கள்

மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், சிம்மம், கன்னி முதலிய ராசிக்கூட்டங்கள் வரிசைக்கிரமமாக மேற்கு முதல் கிழக்கு வரை வியாபித்திருக்கின்றன. கடகம் உச்சியில் குறிப்பிட்டுள்ள நேரங்களில் காணப்படும். இக்கூட்டத்தை சிறிது கவனிக்கவும். இதனிடையே தேனீக் கூண்டுபோல் ஒரு சிறிய கூட்டம் நமக்குத் தென்படுகிறது. கலிலீயோ முதலில் தன் டெலெஸ்கோப் வழியாக இக்கூட்டத்தைப் பார்த்ததில் சுமார் 36 நக்ஷத்திரங்கள் வரை இதிலிருப்பதாகக் கணக்கிட்டார். இப்பொழுது அபிவிருத்தி யடைந்துள்ள வான—ஆராய்ச்சி ஆயுதங்களால் பல நக்ஷத்திரங்களை இக்கூட்டத்தில் அடங்கியிருக்கிறதென்கின்றனர். கன்னியும் உதயமாகிவிட்டது. வஸந்த காலக் கூட்டங்களாகிய கடக, சிம்ம, கன்னிக் கூட்டங்கள் கிழக்கே, முன்னிரவில் அதிக அழகுடன் பிரகாசிக்கின்றன. மகமும், சித்திரையும் கிழக்கேயும், ரோஹிணி, புனர்வசு முதலிய பிரகாசமான நக்ஷத்திரங்கள் மேற்கிலும் தென்பட்டு, வானின் அழகை அதிகரிக்கச் செய்கின்றன.

இதர கூட்டங்களில், துருவ மண்டலமும், ஸப்த ரிஷிக் கூட்டமும், வெகு நேர்த்தியாகக் காக்ஷியளிக்கின்றன. ஸப்த ரிஷிகளே வடவானின் உன்னதக் கூட்டம். அதன் முதல் இரண்டு நக்ஷத்திரங்களாகிய, க்ரதுவும் புலஹரும், எப்பொழுதும் துருவனை நோக்கியிருப்பதைக் காணவும். கஸியோபியா, வடமேற்கில் மறைகிருள். ஓரியன்மேற்கேஉயர்ந்த இடத்தில் காணப்படுகிருள். அழகில் சிறந்து விளங்குவது ஓரியனென்பது சொல்லாமலே விளங்கும்.

தென்வானில் 'ஹைட்ரா' கூட்டம் வெளிவந்து விட்டது. கடகத்தின் தெற்கே ஆரம்பித்து சிம்ம, கன்னிக்கூட்டத்தின் தென்பாகம்வரை வெகு தூரம் வியாபித்திருக்கிறது. ஆனல் இதில் அதிகப்பிரகாசமான நக்ஷத்திரங்கள் அதிகமில்லை. எரிடானஸ் என்னும் ஒரு பெரிய ஆகாய நதி, தென்மேற்கில் இருக்கிறது. ஆர்கோநேவிஸ் வெகு அழகுடன் விரித்த பாய்மரத்துடன் உல்லாசமாக ஆகாய சமுத்திரத்தில் ஊர்ந்து செல்லும் கப்பலை ஒத்திருக்கிறது. மிகவும் விசேஷமான கூட்டமாகிய தென்சிலுவைக் கூட்டம் இப்பொழுதுதான் உதயமாகிறது, இதன் அமைப்பும், தோற்றமும், நம் மனதைப் பாவசிக்கச் செய்கின்றது.





### நரை போக்கும் தைலம்

நரையை ஒழியுங்கள், இந்தத் தைலம் மயிரின் வெண்மையைப் போக்கி, நல்ல கருமையைத் தரும்; ஆயிரக்கணக்கானவர்கள் திருப்தியடைந்திருக்கின்றனர். எராளமான நற்சாட்சிகள் இருக்கின்றன. சொற்ப நரைக்கு வேண்டிய அளவு தைலம் ரூ. 3. பாதி நரைக்கு ரூ. 5; அதிகமாகயிருந்தால் ரூ. 9 பலனளிக்கத் தவறினல் இரட்டிப்புக் கிரயம் திருப்பிக் கொடுக்கப்படும். ஆங்கிலத்திலேயே கடிதமெழுதவும்.

BALA KALA STORES,
P. O. Kansisiuri (Darbhanga.

### வெண்குஷ்டம் பெருவியாதி

எவ்வளவு கடுமையானதாயினும், எவ்வளவு நாட்பட்டதாயினும் நாலே வாரத்தில குணம். செலவுக்கு உத்தரவாதம்.

விவரங்களுக்கெழுதுக.

KAMALA WORKS (S M.)
Panchpota—Bengal, India.

### வருஷப்பலன்

மாதவாரி ஒருவருஷப்பலன் எழுத ரூ. 3. வாராந்திர பலன் எழுத ரூ. 10. தர்ம நியாயமான 5 கேள்விகளுக்கு பதில் எழுத ரூ. 1. வி. பி. செலவு 5 அணு. ஜாதக விவரம் அல்லது கடிதம் எழுதும்போதுள்ள நேரம், சுமார் வயது, பெயர் தேவை

ஹனுமான் ஜோதிஷ அச்ரமம்

## மாசிமீ
## க்ரஹங்களின் நிலை

**புதன்:**—இம்மாத முதலில் புதன் தனுசுக் கூட்டத்திலிருந்து மகரத்திற்கு மாறுகிறது. பிறகு 22-ம் தேதியன்று (5-3-37) கும்பத்தை அடைகிறது. இது இம்மாதம் சூரிய உதயத்திற்குமுன் புதன் உதயமாகிறது. மாத முதலில் விடியற்காலை 5-10 மணிக்கும், மாதக் கடைசியில் 5-50 மணிக்கும் உதயமாகிறது. எனினும் சூரியனின் உதயக் கிரணத்தில் மாதம் செல்லச செல்ல, புதன் ஒளி மழுங்கி நம் பார்வைக்குப் புலப்படாது.

**சுக்கிரன்:**—இம்மாதம் சுக்கிரன் தன் உன்னத ஸ்தானத்தை அடைகிறது. அதன் பிரகாசம் நாளடைவில்விருத்தியடைந்து, 29-ம் தேதியன்று (12-1-37) அதிக ஒளியுடன் விளங்குகிறது. அன்று சந்திரனில்லா வானம் எங்கும்இருள். அச்சமயத்தில் ஆகாயத்திலுள்ள எல்லா நக்ஷத்திரங்களின் ஒளியிலும் சிறந்து விளங்குவது சுக்கிரனே. இவ்வருஷ முதலிலிருந்தே சுக்கிரனின் ஒளி அதிகரித்து வந்து கொண்டிருக்கின்றன. மார்ச் 12-ம் தேதியன்று அதன் ஒளி உன்னதத்தை யடைகின்றது. அப்பொழுது அதன் பிரகாசத்தையும் தென்மேற்கில் காணப்படும் ம்ருக வியாதாவின் ஒளியையும் ஒத்திட்டுப் பாருங்கள். நக்ஷத்திரங்களில் சிறந்தது ம்ருகவியாதா. க்ரஹங்களில் அதிக ஒளி பெற்றது சுக்கிரன். சுக்கிரன் தன் ஒளியினால் ம்ருக வியாதாவின் பிரகாசத்தையும் மழுங்கச் செய்கின்றது. இம்மாதம் சுக்கிரனை ஒரு 'பைனகுலர்ஸ்' மூலமாய்ப் பார்க்கவும். அப்பொழுது அது பிறைச் சந்திரனைப்போல் தோன்றும். பிறைச் சந்திரனாயிருக்கும்பொழுது அதிப்பிரகாசமடையுமென்றால், சுக்கிரனின் முழு பாகமும் ஒளி பெற்று விளங்கினால் இதைவிட பன்மடங்கு பிரகாசமாயிருக்குமென எண்ணலாம். ஆனால் உண்மையில் அப்படியல்ல. சுக்கிரன் பிறைத் தோற்றத்துடன் தோன்றும்பொழுது நமக்கு 26,000,000 மைல் தூரத்திற்கப்பால் இருக்கிறது. ஆனால் அது முழு பாகமும் ஒளி பெற்றிருக்கும்பொழுது 160,000,000 மைல் தூரத்திற்கப்பால் போய்விடுகிறது. ஆதலால்தான் நமக்கு சிறு பாகம் ஒளிபெற்ற சுக்கிரன் பெரும் பாகம்பிரகாசத்தை அளிக்கிறது.

இம்மாதம் 26-ம்தேதியன்று (9-3-37) சுக்கிரன் மீனத்திலிருந்து மேஷத்திற்கு மாறுகிறது. இது மாதக் கடைசியில் இரவு 9 மணிக்கு அஸ்தமிக்கிறது.

**குஜன்:**—இம்மாதமெல்லாம் குஜன் துலாக் கூட்டத்திலிருந்துவிடுகிறது. பங்குனி முதல் தேதியன்று விருச்சிகத்தை அடைகிறது. மாதக்கடைசியில் குஜன் இரவு 11 மணிக்கு உதயமாகிறது.

**குரு:**—இம்மாதமும் தனுசிலேயே ஊர்ந்து வருகிறது. இக்கிரஹம் மாதக் கடைசியில் பின்னிரவு 2-45 மணிக்கு உதயமாகிறது. விடியற்காலையில் மிகவும் அழகாக இது கீழ் வானத்தில் பிரகாசிப்பதைக் காணலாம்.

**சனி:**—இம்மாதமும் கும்பத்திலேயே இருக்கிறது. மாத முதலில் இரவு 7-40க்கும் மாதக்கடைசியில் 6-36 மணிக்கும் அஸ்தமிக்கிறது. ஆதலால் மாதமுதலில் சில தினங்கள்தான் சனி நமக்குப் புலப்படும்.

**உரானஸும், நெப்டியூனும்** முறையே மேஷத்திலும், சிம்மத்திலும் இருக்கின்றன.

சந்திரன் ஆகாயத்திலுலவி வருகையில் கீழ்க்கண்ட தேதிகளில் க்ரஹங்களினருகில் காணப்படும்:—

பிப்ரவரிமீ:—

13உ— சனியருகில்
15உ— சுக்கிரனருகில்
16உ— உரானஸருகில்
26உ— நெப்டியூனருகில்

மார்ச்சுமீ

4உ— குஜனருகில்
8உ— குருவினருகில்
12உ— புதனருகில்

ஜோதிடத்தில் பிரியமுள்ளவர்கள் பொருட்டு, இம் மாதத்திய இராசி சக்கரத்தைக் கீழே கொடுத்திருக்கிறோம்.

தாது வருஷம் மாசிமீ-15-ம் தேதி-சூரிய உதயம்.

| | | | |
|---|---|---|---|
| சுக்கிரன் சனி | | கேது | |
| சூரியன் | 10உ—விருச்சிக—குஜன்<br>13உ—மீன—சனி | | |
| புதன் | 16உ—மேஷ—சுக்கிரன்<br>19உ—கும்ப—புதன்<br>30உ—மீன—ரவி—(45-38). | | |
| குரு | ராகு குஜன் | | |





### லேடிஸ் செயின்கள்

ஐந்து வித நிறமான சிந்தடிக் கற்கள் இடப் அல்லது ஒரு கலரிலும் ஆர்டர்படி ரோல்டு கோல்ட் செயின் 5 வருஷ உத்தரவாதத்துடன் அனுப்பப்படும்.

25 அங்குல நீளமுள்ள செயின் 1-க்கு விலை ரூ 4

யூனிவர்ஸல் ஏஜென்ஸி,
தபால் பெட்டி நெ. 28, சென்னை.



போலிகளைக் கண்டு உஷார்!!!




### அமிர்தாஞ்சனம்

சகல வலிகளையும் போக்கும்
இந்திய திவ்யாமிர்தம்

அமிர்தாஞ்சனம் லிமிடெட்.

பம்பாய், மதராஸ், கல்கத்தா.



Gram—"SIMILICURE" Box 643

வெளிவந்து விட்டன!

### ஹோமியோ புத்தகங்கள்

ஹோமியோ வைத்திய முறை
தத்துவப்

தெலுங்குப்பதிப்பு விலை ரூ. 1 தான்.

M. BHATTACHARYYA & Co
Economic Pharmacy, 84, Clive Street, CALCUTTA.



"குஜராத்சமாச்சார்" (தினப் பதிப்பு)
"பிரஜாபந்து" (வாரப் பதிப்பு)

[1898-ல் ஸ்தாபிக்கப்பட்டவை]

குஜராத்தில் பிரபல்யம் வாய்ந்தவை. ஆமதாபாத்தினின்று பிரசுரிக்கப்படுபவை.

குஜராத்தில் உங்கள் வியாபாரம் பெருக வேண்டுமானால் இப்பத்திரிகைகளில் விளம்பரஞ் செய்யுங்கள்.

ஆங்கிலத்திலேயே கடிதங்கள் எழுதவேண்டும்

Manager, Gujarat Samachar & Praja Bhandhu
AHMEDABAD



உத்தரவாதமான
பொன், வெள்ளி, நகைகளுக்கும்,
பல ஊர் பட்டு ஜவுளி தினுசுகளுக்கும்

### ஸ்ரீ ஆண்டாள் ஜுவெல்லரிஸ் லிமிடெட்.

109, சைனா பஜார் ரோட், மதராஸ்.



# நவ நாகரீகம்

## வெள்ளைப் பட்டு

(காசினி எழுதியது.)

* * * 'வெள்ளைப் பட்டில், கோடுகள், கட்டான்கள் போட்ட புடவைகள் நெய்கிறார்களாமே? இந்தப் புடவைகள், பூக்கரைகள்போட்ட வெள்ளைத் துணிப் புடவைகள் மாதிரியில் இருக்கும் பட்டுப் புடவைகள் இல்லையாம்; இந்தப் புடவைகளை அசல் கொர்நாட்டுப் புடவைகள் மாதிரியிலேயே, கரை, தலைப்பு எல்லாம் போட்டு நெய்கிறார்களாம். இது பார்வைக்கு நன்றாக இருக்கிறது என்று என்னுடைய அம்மங்கார் சொன்னாள். நீ இந்தத் தினுசுப் புடவைகளைப் பார்த்திருக்கிறாயா?' என்று நீ கேட்டிருக்கிறாய்.

ஆமாம்; இந்தத் தினுசில் சில வாரங்களுக்கு முன்புதான் லேடி சுந்திராசாரி வீட்டில் அரை டஜன் புடவைகள் வாங்கிக்கொண்டார்கள். இவைகள் எல்லாம் சொல்லிப் போடச் சொன்ன புடவைகள்தான். எல்லாவற்றுக்கும் சாண் அகலத்திற்கு அரக்குக் கரை போட்டிருந்தது. நாலு புடவைகளுக்கு, கரை முழுக்க விரல் அகலத்திற்குச் சற்றுக் குறுகலாகவே இடம் விட்டுச் சரிகைக் கோடுகள் போட்டிருந்தது. மற்றைய இரண்டு புடவைகளுக்கும் சாதா சரிகை நெளிகள் போட்டிருந்தது. ஒரு பக்கம் தலைப்பு சுமாருக்கு முக்கால் முழம் நீளமான அரக்குத் தலைப்பு; மற்றைப் பக்கம் பூனாத் தலைப்பு. இரண்டு தலைப்புக்கும் நாலு விரல் அகலத்துக்குச் சரிகை போட்டிருந்தது. இந்தப் புடவைகளில் நாலு புடவைகள் சுத்த வெண்பட்டில் நெய்யப்பட்டவைகள். உடலில் மெல்லிய சிகப்புக் கோடுகளினால், கட்டான்கள் போட்டிருந்தது. இந்தக் கட்டான்கள், அதிக அகலமாகவும் இல்லாமல், மிகவும் சிறியதாகவும் இல்லாமல் நிதானமாக, அழகாக இருந்தது. பாக்கி இரண்டு புடவைகளும் இலேசான இஞ்சள் நிறமாக இருந்தது. மதில் கறுப்புச் சதுரங்கள் போட்டிருந்தது. அதாவது, ஒரு கறுப்புச் சதுரம், ஒரு மஞ்சள் சதுரம் என்று மாறி மாறி இருந்தது; கறுப்பும், மஞ்சளும் கலந்த புடவை என்றால் பொருத்தமாக இருக்கும். எல்லாம் ஆறுகஜம் புடவைகள்தான். வெள்ளைப் பட்டுப் புடவைகள் ஒன்றின்விலை கிட்டத்தட்ட முப்பது ரூபாய்கள் ஆச்சுது என்று சொன்னாள். மஞ்சள் புடவைகள் ஒன்றின் விலை இருபத்திஐந்து ரூபாய்கள் ஆச்சுதாம். புடவைகள் வழவழப்பாகவும், உறுதியாகவும் இருந்தது. நாசூக்காகவும் இருந்தது.



இந்தியன் போலீஸ் ஸர்விஸில் உத்தியோகம் வஹிக்கும் ஸ்ரீமான் வி. வி. சந்திரசேகரனுக்கும் ஸ்ரீமதி ப்ரமிளாகோமளுக்கும் சமீபத்தில் விவாகம் நடந்தது.

'வெள்ளையில் புடவைகளை மெனக்கெட்டு நெய்யச்சொல்ல வேண்டுமா? அழகிய தினுசுகளில் கரைகள் போட்டுத்தான் வெண் பட்டுப் புடவைகள் விற்கிறதே என்று என்னுடைய அத்தை கேட்டாள்.

'அதுவா? எங்காத்தில் நாங்கள் வெள்ளை கட்டிக் கொள்ளுவதைப் பற்றி அச்சானியப்படுவதில்லை. சில மாதங்களுக்குமுன் என்னுடைய தங்கை பெண் இங்கே வந்திருந்தாளே இல்லையோ? அவள், இவாள் எல்லாம் துணியிலும், பட்டிலுமாக, வெள்ளையில் புடவைகள் கட்டுவதைப் பார்த்து, தானும் வெள்ளை கட்ட ஆசைப்பட்டாள். ஆனால், அவளுடைய புக்ககத்தில், வெள்ளைப் புடவை என்றால் பிடிக்காதாம். அச்சானியம் மாதிரியில், சுமங்கலிகள் வெள்ளை கட்டுவார்களோ?' என்று சொல்லுவார்களாம். இப்படி ஆசைப்படுகிறாளே என்று, கொர்நாட்டுப் புடவை போலவே வெள்ளைப் பட்டில், கரையும், தலைப்புமாக நெய்து, நடுவில் சிகப்புச் சதுரங்கள் போட்டு,ஒரு புடவை நெய்யச் சொன்னேன். இதைப் பார்த்ததும், சாதா வெள்ளைப் பட்டுப் புடவையை விட, இது அழகாக இருக்கே என்று எங்காத்தில் ஆளுக்கு ஒன்னு வேணும் என்றார்கள். சதுரத்துக்குப் பதிலாகக் கோடு போட்டு, நாலு புடவையும், மஞ்சளும், கறுப்புமாக, மற்றொரு தினுசாக இருக்கட்டுமே என்று இரண்டு புடவையும் போடச் சொன்னேன்' என்றாள் லேடி சுந்திராசாரி.

நான்கூட இந்தத் தினுசில் ஒரு புடவை போடச் சொல்லி இருக்கிறேன். உனக்கு வேண்டுமானால் ஒன்பது கஜத்தில் நெய்யச் சொல்லுகிறேன். இந்தப் புடவைகள், அழகிய கறுப்பு, பச்சை, அரக்கு முதலிய கரைகளுடன், புதிய நாசூக்காகக் கிளம்பி இருக்கிறது.

* * * *

## எலுமிச்சம் பழம்

எலுமிச்சம் பழம் கெடாமல், சில நாட்கள் இருக்க வேண்டுமானால், அதைக் குளிர்ந்த தண்ணீரில் போட்டு வைக்க வேண்டும். சில ஊர்களில் எலுமிச்சம் பழம் கிடைப்பது சிரமமாக இருக்கலாம்; சில சமயங்களில் நல்லதாக இருக்கே என்று நாமே அதிகம் வாங்கிவிடலாம். இதை ஊறுகாய் போடாமல் சில நாட்கள் வரையில், தினப்படி உபயோகத்திற்கு வைத்துக் கொள்ளப் பிரியப்படுகிறவர்கள், ஒரு வாயகலமான பாத்திரத்தில், தண்ணீரை விட்டுப் பழங்களை அதில் போட்டு வைக்க வேண்டும். தினம் ஒரு முறை தண்ணீரை மாற்றிப் புதிய ஜலம் போட வேண்டும். இப்படிச் செய்வதி



மற்ற முக க்ரீம்களை நான் விட்டு விட்டேன்

டாகெட் & ராம்ஸ்டேல் மேலான கோல்ட் க்ரீம் ஏற்பட்டதும்

முக வசீகரத்தைப் பெருக்கும் விஷயத்தில் நாளுக்கு நாள் மண்டையை உடைத்துக்கொள்ள வேண்டாம்; நல்ல வசீகரத்துடனிருப்பவரைக் கண்டு பொறாமைப்பட வேண்டாம். டாகெட் & ராமஸ்டெல்ஸ் மேலான கோல்ட் க்ரீமை ஒரு தடவை உபயோகித்துப் பாருங்கள்; இது நன்கு ஊடுருவிச் சென்று, சுத்தம் செய்கிறது; சருமத்திற்கு மிருதுத்தன்மை யூட்டுகிறது; வேறெந்த க்ரீமும் இது மாதிரி செய்யாது. இரவிலும், காலையிலும் இதை உபயோகியுங்கள்; உங்கள் சருமம் எவ்வளவு அழகுடன் விளங்குகிறதென்பதைக் காணுங்கள்.




D. 54.



தஞ்சையில் ஸ்ரீ தியாகய்யர் தினக் கொண்டாட்டம் டாக்டர் ஏ. ஜே. பாண்டியன் தலைமையில் நடைபெற்றது.

னால், எட்டுப் பத்து நாட்கள் வரையில் பழங்கள் வாடாமலும்; புள்ளி விழுந்துபோகாமலும் கெடாமலும் இருக்கும்.

* * * *

### பப்பாளிக்காய் கறி

இதற்குக் காய் மிகவும் பிஞ்சாகவோ. பழுக்கும் பருவம் அடைந்ததாகவோ இருக்கக் கூடாது. பப்பாளிக் காயை, நீள் வாட்டத்தில் நறுக்கிச் சீவி, உள்ளே உள்ள விதைகளைப் போக்கி, வாழைக்காய்த் துருவியிலோ, அல்லது பெரிய கண்கள் உள்ள கொப்பரைத் துருவியிலோ. துருவிக் கொள்ள வேண்டியது. சிட்டிகை மஞ்சள் பொடியும். வேண்டிய அளவு உப்பும் போட்டு, ஒரு ஆவி கொண்டு, வடிதட்டில் கொட்டிவிட வேண்டியது பிறகு கொஞ்சம எண்ணெயும், நெய்யுமாகக் கலந்து வைத்து, கடுகு. மிளகாய், தாளித்து, வெந்த துருவலைக் கொட்டி, வதக்கிக் கொஞ்சம் .தேங்காய்த் துருவலையும் போட்டுக் கிளறி எடுத்துக் கொள்ள வேண்டியது. முதலில் இலேசாக வெந்து, தண்ணீரை வடித்து விடுவதால், பப்பாளி வாசனை தெரிவதில்லை. இந்தக் கறியை முதல் தரம் சாப்பிட்ட சிநேகிதர் ஒருவர், 'என்ன கறி, சொல்லுங்கள் பார்ப்போம்?' என்றதற்கு, 'வாழைத் தண்டு, கோஸ் அல்லது நூல்கோல்' என்றார். 'மூன்றுமில்லை; நாலாவதாகப் பப்பாளி,' என்று சொன்னேன் இது வாய்க்கு ருசியாக இருப்பதுடன், உடம்புக்கும் நல்லது சீரண சக்தியைச் சரிப்படுத்தி நல்ல பசி உண்டாகும்படிச் செய்யும் குணம் பபபாளிக்கு உண்டு என்று கூறுகிறார்கள். செய்து, உனக்குப் பிடிக்கிறதா என்று பார்.'

* * * *

### கோப்பரை பர்பி

இதற்கு முதலில் கொப்பரையின் மேல் தோலை நன்றாகச் சீவி விட வேண்டும். பிறகு கொப்பரையைக் கொப்பரைத் துருவியில் நிதானமாகத் தேய்த்துத் துருவிக் கொள்ள வேண்டும். பிறகு, துருவலை அளந்து, ஒரு பங்கு துருவலுக்கு இரண்டு பங்கு சர்க்கரை என்ற அளவில், பாகு வைக்க வேண்டும். பாகைப் பால் தெளித்துச் சுத்தம் செய்து கொள்ள வேண்டும். பாகு நன்றாக முதிர்ந்த பின், துருவலைக் கொட்டிக் கிளற வேண்டும். பாகு மறுபடியும் கெட்டியாகிக் கொதித்துப் பொங்கும் பொழுது, ஏலப் பொடியைப் போட்டுக் கிளறி, மறுபடியும் பொங்க விட்டு, ஒரு குழிவான தாம்பாளத்தில் கொட்ட வேண்டும். இது சற்று ஆறினதும், கூரான கத்தியால் கீறிவிட்டு, நன்றாக ஆறினதும், ஒடித்து எடுத்துக் கொள்ளவேண்டும். இது பார்வைக்கு நல்ல வெளுப்பாகவும் அழகாகவும் இருக்கும். பிரை பிரையாக இருப்பதுடன், கடுக்கென்று இருக்காமல் வாயில் கரையும். காத்துப் போகாமல் ஒரு கண்ணாடி சம்புடங்களில் போட்டு மூடி வைத்தால், கெடாமலும் இருக்கும். இஷ்டமானால், இந்த பர்பிகளைப் பல வர்ணங்களிலும் செய்யலாம்.

* * * *

### பிளானல் தோய்க்க

எங்கேயாவது, அலசும் தண்ணீரில் எண்ணெயைப் போடுவதினால். துணி நன்றாகும் என்று நீ கேட்டதுண்டோ? குழந்தைகளின் கம்பளிச் சட்டைகள் முதலியவற்றைச் சுத்தப் செய்யும் பொழுது. இவ்விதம் செய்வதினால், துணி மிருதுவாக இருக்கும் என்று ஒரு பத்திரிகையில் நான் சில நாட்களுக்கு முன்பு படித்தேன். அலசும் தண்ணீரில் ஒரு தேக்கரண்டி அளவு கிளஸரீனையும், சில துளிகள் ஆலிவ் எண்ணெயையும் போட்டுக் கலந்து கொள்ள வேண்டுமாம். இதில் குழந்தைகளின் கம்பளிச் சட்டை முதலியவற்றை அலசுவதினால் பிளானல் காயும்பொழுது முறமுறவென்று ஆகாமல், மிகவும் மிருதுவாக இருப்பதுடன், சுருங்காமலும் இருக்குமாம். மற்றைய விஷயங்கள் அடுத்த கடிதத்தில்.

பிரபல ஜோதிஷர்



மஹாராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசுபெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்க ரூபா 2. 1 வருஷ மாதவாரிப் பலன் எழுத ரூபா 5. எதிர்காலத்தைப் பற்றின 3 கேள்விகளுக்கு ரூ 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8 ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், 58, லஸ் சர்ச் ரோடு மைலாப்பூர். மதராஸ்

மோஹனமான ஆடைகள்
வேண்டுமானால்
இந்தக் கடைக்கே
வாருங்கள்.
N. C. B.
என். ஸி. பாலுசாமி அய்யர் & ஸன்
(கார்னர் ஷாப்) 84 நைனியப்ப நாயக்கன் வீதி. மதராஸ்.



வியாதியாலோ, பிரஸவத்தாலோ வேறு எந்தக்காரணத்தாலோ உதிர ஆரம்பித்த கூந்தலை, உதிராமல் தடுப்பது
கேசவர்த்தினி
ஒன்றே
மாத உபயோகத்துக்குப் போதுமான புட்டி விலை அணா 12;
மேற்செலவு வேறு.
தயாரிப்பவர்!— தென் இந்திய ரஸாயன சாலை
மயிலாப்பூர், சென்னை.




# தையல் வேலை

## டாட்டிங் தையல்

ஸ்ரீமதி ஆ. ராஜசூடாமணி
அம்மாள் எழுதியது.

[காபிரைட்]

'ஒற்றைத் தையல்களால் அமையும் ஜோஸபைன் முடிச்சு அல்லது பிக்காட்':—

சென்ற வாரம் 'இரட்டைத் தையல்' அல்லது 'முடிச்சு' எவ்வாறு தைக்க வேண்டுமென்று விவரித்தேன். அந்தத் தையலில் முதல் பாகத்திற்கு 'ஒற்றைத் தையல்' என்று பெயர். அல்லது 'அரை முடிச்சுத் தையல்' என்றும் கூறுவதுண்டு. இத்தையல்களை நெருக்கி இழுத்துத் தைக்க வேண்டும். இவ்வாறு தைக்கப்படுகிற தையல்களுக்கு 'ஜோஸபைன் முடிச்சு' என்று பெயர்.



படம் 1.

நான்கு அல்லது ஐந்து அரை முடிச்சுத் தையல்களினால் நெருக்கித் தைத்துச்செய்யும் முடிச்சிற்கு 'நெருக்கல் ஜோஸபைன் முடிச்சு' என்று பெயர். மேலேயுள்ள படத்தைப் பார்க்கவும்.

பத்து அல்லது பன்னிரண்டு அரை முடிச்சுத் தையல்களினால்கீழேயுள்ள படத்தில்காட்டியவாறு தைக்கப்படுகிற முடிச்சிற்கு 'திறப்பு ஜோஸபைன் முடிச்சு' என்று பெயர்.



படம் 2.



படம் 3

இரட்டைத் தையல் அல்லது முடிச்சு என்ற பெயரோடு சென்றவாரம் விவரித்த தையலில் இரண்டாவது பாகம் தைத்து முடிந்தவுடனே சென்றவாரம் காட்டிய படங்களில் படம் 1-ல் கொடுத்திருக்கிற நிலையில் கைகள் திரும்பவும் அமையவேண்டும். இந்த வாரத்து விஷயத்தில் படம் 2, 3ல் அதே நிலையைத்தான் காட்டியிருக்கிறது. ஆனால் இந்தப் படத்தில் முடிவுற்ற சில இரட்டைத் தையல்களும் காணப்படுகின்றன.



படம் 4.

பிக்காட் அல்லது பரல் தையல் தைக்கும்பொழுது கைகளின் நிலை:—படம் 4 பார்க்கவும். பிக்காட் பரல் என்னும் பெயர் வழங்கப்படுகிற தையல்கள் டாட்டிங் தையல் முறையிலும் குரோஷே தையல் முறையிலும் அதிகமாய் உபயோகமாகிற ஒரு தையல். இந்தப் பிக்காட்டுகள் தையலின் பல பாகங்களைச் சேர்க்கவும் அவற்றின் உதவியால் பல வடிவ அமைப்புகளும் மாதிரிகளும் செய்யவும் பெரிதும் பயன்படுகின்றன.

திறப்புப் பிக்காட் நெருச்சல் பிக்காட்:—படம் 5, பார்க்கவும்.



படம் 5.

இந்தப் பிக்காட்டுத் தையல், இரட்டைத் தையலில் முதல் பாகத்தைத் தைக்கிறபொழுது அகன்ற நூலில் ஒரு கண்ணியை இறுக்காமல் விட்டு விடுவதினால் அமைவதாகும். அதாவது, முடித்த தையலின் கடைசிப் பாகத்திற்கும் புதிதாய்த் தொடங்கப் போகிற இரட்டைத் தையலின் முதல் பாகத்திற்குமிடையில் இந்தப் பிக்காட் தையல் அமைக்கப்படும். பின்பு, இரட்டைத் தையலின் இரண்டாவது பாகத்தை முடித்து, பின்பு அவற்றை நெருக்கி முந்தின தையலோடு நெருக்கி இழுத்துக் கொள்ளவும்.

டாட்டிங் தையல் முறையை விவரிக்கிறபொழுது, பிக்காட்டுக்கு அடுத்த தையல் எப்பொழுதும் கண்ணியோடு சேராமல் விடுபட்டு நிற்பதென்று அறியவேண்டும்.

இனிமேல், வருகிற வாரங்களில் டாட்டிங் தையல் மாதிரிகளை விவரிக்கிறபொழுது நீங்கள் இதை மறவாதிருக்கவேண்டும். உதாரணமாக,

2 தையல் (அதாவது இரட்டைத்தையல் 2 என்று பொருள்.)—1 பிக்காட்—3 தையல்—1 பிக்காட்—2 தையல் இப்படியே விவரிக்கிறபொழுது, பிக்காட் தையலை அமைத்துத் தையலையும் நீங்கள் கூடவே தையலோடு சேர்த்து எண்ணிக் கொள்ள வேண்டும். இதற்கு மாருக, 2 தையல்—1 பிக்காட்—4 தையல் என்று கணக்கிட்டுத்தைக்கக்கூடாது

தையல் என்று குறிப்பிடுகிற இடங்களிலெல்லாம் இரட்டைத் தையல் என்று கருதவும். எங்கேயெல்லாம் பாதித் தையல் என்று குறிப்பிடுகிறேனே அங்கே எல்லாம் இரட்டைத் தையலில் முதல் பாதி என்று கருதவும். இவ்விஷயங்களை அடிக்கடி ஞாபகப்படுத்திக் கொள்ளும்பொருட்டுப் பத்திரிகைகளைப் பத்திரமாக வைத்துக்கொள்ளுங்கள்.

கடைசியாகச் சொல்ல வேண்டிய விஷயம் பிக்காட்டுகளினுல் வளையங்களைச் சேர்க்கும் முறையேயாம்.

பிக்காட்டுகளினுல் வளையங்களைச் சேர்ப்பதெப்படி? வளையங்கள் முதலிய பலவற்றையும் பிக்காட்டுகள் மூலமாகச் சேர்ப்பதற்கு, இடது கையின் மேலாக ஓடுகிற நூலை ஒரு குரோஷே ஊசியினுலாயினும் அல்லது ஒரு டாட்டிங் கொக்கியினுலாயினும் (படம் 7) வாங்கி எடுத்து மேலிருந்து கீழ்நோக்காகப் பிக்காட்டிற்குள் நுழைத்து நூலை அதினூடு இழுத்துக் கொள்ளவும். பின்பு ஷட்டிலை பிக்காட்டினூடு இவ்வாறு அமைந்த கண்ணியினுள் நுழைத்து வாங்கி மற்றத் தையல்களை இறுக்கிக் கொள்ளும் முறைப்படியே இறுக்கிக் கொள்ளவும்.

* * * *

### காலண்டர் வரவு

சென்னை பார்க்டவுன் 19-22, நைனியப்ப நாய்க்கன் தெருவிலுள்ள பிரபல ஜவுளிவியாபாரியும் சென்னை கவர்ன்மெண்ட், ரெயில்வே கண்ட்ராக்டருமான ஸ்ரீமான் ஜி. மணவாள நாயுடு அண்டு ஸன்ஸிலிருந்து அழகான படக் காலண்டர்கள் வரப்பெற்றோம்.

## கெற்ப சஞ்சீவி எண்ணெ

**ஸ்திரீகளுக்கு** மாதாந்தரத்தில் வரும் பொறுக்கமுடியாத வயிற்று **வலியை அந்த க்ஷணமே நிறுத்தும்.** சூதக க்ஷயம், சூதக சூலை, சூதக ஜுரம், சூதக வாய்வு, சூதக கட்டு, சூதகச் சிக்கல், சூதகத் திராக்ஷி, சூதகக் கட்டினுல் உண்டாகும் தலைவலி, உடம்புவலி, கைகால் பொருத்துகள் உளைவு, மேலெல்லாம் குத்து, குடைச்சல், உடம்பு ஸ்துலித்துப் போதல், வயிர் பெருத்தல், காந்தல், எழுந்திருக்க முடியாமை, திகைப்பு, மூச்சு, மயக்கம், பசியின்மை, சாப்பாட்டில் வெறுப்பு, ஒருசெம்பு ஜலங்கூட தூக்கமுடியாத பலஹீனம், சூதக ஜன்னி முதலிய வியாதிகளையெல்லாம் தீர்த்து கெற்பப்பை சுத்திகரிக்கப்பட்டு, கெற்ப உற்பத்தியை உண்டுபண்ணும். 6-வித மலடு தீரும். கெற்பம் தரிக்கவிடாது பண்ணும் கிருமிகளைக் கூட்டோடன் வெளியிலகற்றிவிடும். திடகாத்திரமும், பூரண ஆயுளுமுள்ள குழந்தை தரிக்கும்.

1 நபருக்கு 3 புட்டி வேண்டும்.

1 புட்டி ரூ. 2. 3-புட்டி ரூ. 5. சேலவு வேற

**குணம் இல்லாவிடில் ரூபா 5 வாபீஸ்**

பழனி வைத்திய ஆசிரியர்

**ஆர். எம். கே. வேலுசாமி பிள்ளை,**

சித்த வைத்தியசாலை,

146, புரசவாக்கம் ஹைரோட், சென்னை

தலைமை ஆபீஸ், பழனி

# உலகப் போக்கு

ஜுகோஸ்லேவியாவில் கடைக்காரர்கள் இலக்கணப் பிசகாகப் பேசினாலும், விளம்பரம் போஸ்டர் முதலியவற்றில் இலக்கணப் பிசகு இருந்தாலும் போலீஸார் அபராதம் விதிக்கின்றனர். வெறுக்கத்தக்க வார்த்தைகளைப் பஹிரங்கமாக உபயோகிக்கிறவர்களுக்கும் இவ்விதியின்படி அபராதம் விதிக்கப்படுகிறது.

* * * *

க்ரீன்விச் காலநிலைக் காரியாலயத்தில் சுமார் 30 பேர்கள் வேலை செய்து வருகின்றனர். இவர்கள் ஜோதிர் மண்டல ஆராய்ச்சியை நடத்தி வருகின்றனர். இதற்காக வருஷத்தில் 20,000 பவுன் செலவாகிறது.

* * * *

பிரிட்டனில் ஒரு வருஷத்தில் 50,000 மோட்டார்கள் செய்யப்பட்டு வருகின்றன. இதன்படி கணக்குப்பார்த்தால் ஒரு நிமிஷத்திற்கு ஒரு மோட்டார் செய்யப்படுவதாகிறது.

* * * *

லண்டனில் அல்ஹாம்ரா என்ற தியேட்டர் இருந்தவிடத்தில் ஒரு புதிய தியேட்டர் கட்டப்பட்டு வருகிறது. அதில் இனிமேல் தயாரிக்கப்போகும் ஒரு குறிப்பிட்ட கம்பெனியின் படத்தைக் காட்டுவதற்கு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டிருக்கிறதாம்.

* * * *

சமூகப் பிரஷ்டம் செய்யப்பட்டவர்கள் தங்களுக்கென்று ஒரு சங்கத்தை ஸ்தாபித்துக் கொண்டிருக்கின்றனர். இது ஜுகோஸ்லேவியாவில் தோன்றியிருக்கிறது. ஒவ்வொரு அங்கத்தினரும் மாதம் ஐந்து பென்ஸ் கட்டணம் கொடுக்க வேண்டும்.

* * * *

ஆப்பிரிக்காவில் மழை காலத்திற்குப் பிறகு பழச் செடிகளும் மரங்களும் சரியாகவே பூக்கவில்லை. பழ சாகுபடியும் மிகக் குறைவாகவிருந்தது. எதிர்பார்க்கும் காலத்திற்குத் தாமதமாகவே சாகுபடி ஆயிற்று. இதனால் தோட்டக்காரர்கள் பற்பல முறையைக் கையாண்டும் பலனேற்படவில்லை. பிறகு ஒரு தோட்டக்காரர் எதோ எதிருச்சையாக லின்ஸீட் எண்ணெய் கலந்த ஒரு திராவகத்தை மரத்தின்மீது குழாய் மூலம் தெளித்தார். ஒரு மாதத்திற்கெல்லாம் மரம் நன்கு பூத்து நல்ல சாகுபடியையும் கொடுத்தது. பழங்கள் பெரியதாகவும் நல்லதாசவும் இருந்தன. ஆப்பிள்களுக்கு இது நல்ல பலனளித்ததாம். பலவிடங்களில் இப்பொழுது இதைப் பற்றி ஆராய்ச்சி நடந்து வருகிறது.

* * * *

தீராத பைத்தியம் தீருவதற்கு ஒரு புதிய வழி கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. பைத்தியம் குணப்படாது என்று தீர்மானிக்கப்பட்ட ஒருவரின் ஞானப் பல்லைப் பிடுங்கிவிட்டதனால் அவரது பைத்தியம் தெளிந்துவிட்டது. இந்த முறை இப்பொழுது பிரிட்டனிலுள்ள பல பைத்தியக்கார ஆஸ்பத்திரிகளில்; அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. இது வெற்றிகரமாகவே இருக்கிறதாம். பைத்தியம் ஆறு மாதங்களில் நிவர்த்தியாகிவிட்டதாம். மற்றும் சிலருக்குச் சொத்தை விழுந்த பற்களைப் பிடுங்கிவிட்டதால் குணமேற்பட்டதாம். இந்த முறைகள் ஒரு சிலருக்குத் தான் பலன் தருகிறதாம். இதைப்பற்றி இப்பொழுது ஆராய்ச்சி நடந்து வருகிறது.

பைத்தியம் சம்பந்தமாக ஆஸ்திரேலியாவிலிருந்து ஒரு ரஸமான விஷயம் கிடைக்கிறது. ஆஸ்திரேலியாவின் ஒரு புகழ் பெற்ற ஸ்திரி டாக்டர் "இப்பொழுது உலகில் பைத்தியக்காரர்கள் தொகை அதிகரித்து வருவதுபோலானல் 2039-ம் வருஷத்தில் உலகிலுள்ள அனைவரும் பைத்தியமாகிவிடுவார்கள்" என்று கூறினார். சென்ற பத்து வருஷங்களில் பைத்தியக்காரர்கள் தொகை 30 சத விகிதம் அதிகரித்துவிட்டதாம். தொந்தரவு, கஷ்டம், யுத்தம் முதலியவையே பைத்தியத்திற்குக் காரணங்களாம்.

* * * *




1. இங்கிலாந்திலுள்ளோர் பிரதி தினம் 23,60,00,000 கப் தேயிலைப் பானம் குடிப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. 2. லண்டன் ஸ்டோர் ஒன்றில் மரத்திலிருந்து ஸ்டாக்கிங்ஸ், தொப்பிகள், சாக்கிலட்கள் முதலியவை தயாரித்துக் காட்டப்பட்டன. 3. தென் ஆப்பிரிக்காவிலுள்ள புலாவியோ நகரின் மார்க்கெட்டில் திடீரெனத் தேனீக்கள் புகுந்ததால் இரண்டு மணி நேரத்திற்கு வியாபாரம் தடைபட்டுப் போயிற்று. தீயணைக்கும் யந்திரங்களின் உதவியால் தான் தேனீக்களை அப்புறப்படுத்த முடிந்தது. 4. ஒரு புதிய ரிக்கார்டை ஸ்தாபிக்கத் தீர்மானித்துக் கொதிக்கும் தண்ணீரில் உட்கார்ந்திருந்த ஒருவனை ஹங்கேரியப்போலீஸார் பலாத்காரமாக அப்புறப்படுத்தினர்.

# ராதா

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

மாப்பிள்ளையென்றும் பணக்காரனென்றும் பயந்து, பின்னால் ஒருவரும் வரவில்லை; நானே ஏழை.

நாய:—இந்தக் காலத்திலெல்லாம் கார்த்திகேய பிள்ளைக்கும் விவாகமாகவில்லையோ?

பூசை:—இல்லை; நச்சு முதலி தீயைக் கொளுத்தத் தொடங்கியபின், பாற்கடலில் இருக்கப்பயந்து, திருவூர் என்னும் அடுத்த கிராமத்தில் கார்த்திகேயனுடைய சிறிய தாயார் வீட்டில் குடியிருந்துவந்தேன். கார்த்திகேயன் ஆதரவு எங்களுக்கு இல்லாவிட்டால், அந்தச் சண்டாளன் நச்சுமுதலி என்னையும் என் மக்களையும் கொலை செய்தாலும் செய்திருப்பான். முதலிமார்களில் எல்லாப் பந்துக்களும் நச்சு முதலிக்குப் பயந்து என்னைக் கைவிட்டுவிட்டார்கள். அப்படியிருக்க, அந்நியமான வேளாளன் அந்தக் கார்த்திகேயன், நான் அவனை வளர்த்த அருமையை நினைத்து, எங்களைப் பாதுகாத்து வந்தான். அவன்தான் நந்தகோபனையும் மெட்டிக்குலேஷன்வரை இங்கிலீஷ் படிக்க வைத்தான். கற்பகத்துக்குத் தமிழ்ப் படிப்பித்தவனும் அவன்தான். ஐயா, தங்களிடம் உண்மையைச் சொல்ல வேண்டாமா? சுய ஜாதி சுயபந்துவென்ற அபிமானம் எனக்கு அடியோடு போய்விட்டது. ஆபத்துக்குதவாத பந்துக்கள் இருந்தென்ன, போயென்ன? ஆபத்துக்குதவுகிறவன் அந்நியனாயிருந்தாலும் அவன்தான் சொந்தமென்று எனக்கு ஒரு எண்ணமுண்டாய்விட்டது. கார்த்திகேயன் வேளாளனும் நாங்கள் முதலிமாராயுமிருந்தாலும் பந்தி போஜனமுண்டு; எல்லாரும் சைவாள்தான்.

நாய:—அதெல்லாம் சரி; முடிவில் என்ன செய்தீர்கள்?

பூசை:—அதுதான் ஐயா, அந்தக் கார்த்திகேயனுக்கே என் மகளைக் கொடுத்துவிட்டாலென்னவென்று துணிந்துவிட்டேன். அதற்கேற்க, கார்த்திகேயன் அந்தரங்கத்திலும் இவ்வித எண்ணமிருந்ததாய்த் தோன்றிற்று. அவன் கருத்திற்கிசையாதிருக்க எனக்கு மனம் வரவில்லை. பையன் நந்தகோபனும் அப்படியே செய்ய வேண்டுமென்று பிடிவாதமாய்ச் சொன்னான்.

நாய:—ஆகவே, பெண்வீட்டுக்காரர் மூன்றுபேரும் சம்மதித்து விட்டீர்கள். மாப்பிள்ளைக்கும் இஷ்டம். அவருடைய பந்துக்கள் சம்மதித்தார்களா?

பூஜை:—வேளாளர்களுக்கு அதைப்பற்றி வரவு செலவு கிடையாது. பாழாய்ப் போகிற எங்கள் முதலிமார் ஜாதியில்தான் குலம், கோத்திரம், மண்ணாங்கட்டி, தெருப்புழுதியென்று ஆயிரம் தொல்லையும் தொந்தரவும் வைத்துக் கொண்டு இழவு பண்ணுகிறார்கள்.

நாய:—பேஷ் பெரியம்மா, குறையும் சொல்லுங்கள். கல்யாணம் நடந்ததா?

பூசை:—கல்யாணக் கதையா! அந்தப் பாழுங் கதையைக் கேளுங்கள். திருவூரில், கல்யாணம் நடத்துவதென்று முகூர்த்தம் வைத்து, மாப்பிள்ளை வீட்டுப் பந்துக்களெல்லாரும் பாக்கியில்லாமல் வந்துவிட்டார்கள். எல்லாம் கார்த்திகேயன் செலவுதான். நான் ஒரு செம்புத்துட்டு நகைகூடப் போடவில்லை. எல்லா நகையும் புண்ணியவான் அவன்தான் போட்டான். முடிவில், என் மகளும் கெட்டு, என் மகளால் அவனும் கெட்டான்! நான் இன்னும் உயிர் வைத்து வாழுகிறேன்—என்று கண்ணீர் வடித்தாள்.

நாய:—வருத்தப்படாதேயுங்கள் பெரியம்மா, சும்மா சொல்லுங்கள்.

பூசை:—நச்சு முதலி என்ன சூது செய்தானோ தெரியாது; தாலி கட்டப் போகிற சமயத்தில், போலீஸார் வந்து கார்த்திகேயனைப் பிடித்துக் கையில் விலங்கு மாட்டி, அவனோடு கல்யாண வீட்டிலிருந்த ஜவுளி சாமான்களையும் ஜப்தி செய்துகொண்டு போய்விட்டார்கள்.

நாய:— (வருத்தத்துடன்) ஐயோ! ஐயோ! பிறகு என்ன நடந்தது?

நச்சு முதலி தன் விரோதியாகிய ஒரு செட்டியை வழிமறித்துத் தன் ஆட்களைக் கொண்டு கொலை செய்துவிட்டு செட்டியை என் மருமகன் கார்த்திகேயன் கொலை செய்து அவன் ஜவுளிப் பொட்டணத்தையும் கொள்ளையடித்துக் கொண்டு வந்து விட்டதாய்க் கட்டுப்பாடு செய்து, செட்டி பெண்சாதிக்கும் போலீஸாருக்கும் லஞ்சம் கொடுத்து கேஸ் உண்டாக்கிவிட்டான். போலீஸ் அமுலுக்குப் பயந்தும் நச்சு முதலியின் பணத்துக்கு ஆசைப்பட்டும் சில பாவிகள்—சண்டாளப் பாதகர்கள்—கொலையையும் கொள்ளையையும் கண்ணால் கண்டதுபோல் சாக்ஷியும் சொல்லிவிட்டார்கள். முதலில், பாற்கடல் மேஸ்திரட்டாராம்—ஒரு வெள்ளாளன்—சண்டாளப் பாதகன்—நச்சு முதலியாரிடம் இரண்டாயிரம் ரூபாய் லஞ்சம் வாங்கிக் கொண்டு, சாக்ஷிகளுக்குச் சொல்லிச் சொல்லிக் கொடுத்து, தன் இஷ்டப்படியெல்லாம் வாக்கு மூலத்தையெழுதிக்கொண்டு, சேலத்துக்கு அனுப்பிவிட்டான். சேலத்தில் ஒரு துரை—புண்ணியவான்—தரும புத்திரன்—என் மருமகன் கார்த்திகேயன் முகத்தைப் பார்த்தவுடன்,


## ஜோதிஷ மகுடவர்த்தனர்

இந்து மன்னர் சமஸ்தான 25-வது தலைமுறை ஜோதிஷர்-பீமகவி-சகர்-புஜண்டா சாஸ்திர நிபுணர் இப்பூமண்டலப் புகழுரையில் எதிர்கால பலன் கூறுவதில் "உலக சிரேஷ்டர்" என வெற்றி பாமாலையும் தங்க சன்னதங்களும் பெற்றவர்.



ஜாதகம் லக்கின நக்ஷத்திர ஸ்புடஞ் செய்து பொதுப் பலன் எழுத ரூ. 1. ஒரு தசைக்கு புக்தி பலன் ரூ. 2. அஷ்ட வர்க்கம் ஆயுள்வரை புக்தி பலன் ரூபா 7. ஜாதக குறிப்பு முன்பணம் ரூபா 4. தேவை.) 1 வருட மாதா மாதப் பலன் ரூ. 1-8. கேள்வி 6-க்கு ரூ. 1. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

புரோபஸர், N. சுப்பிரமணியம்,
நெ. 2 (ஜோதிஷ ஆசிரமம்)
வாலாஜாபாத், S. I. R. சென்னை.



நஞ்சன்கூடு சத்வைத்யசாலை
டி. எல். மகரத்வஜம் D. L.
ஆரோக்ய சஞ்சீவி
...பந்தர் தெரு, மதராஸ்

(எவ்வொரு கிராமத்திலும் ஸ்டாக்கிஸ்டு தேவை)



# நீரிழிவு, மதுமேகம்

முதலிய சகல நீர் ரோகங்களுக்கு

பண்டிட் ஸ்வாமி ஸ்ரீநிவாஸய்யங்காரின்

## மயூரகாய கற்பம்

ஒரு தெய்வீக சஞ்சீவி !!

இதுவரை இதன நன்மையைப் பிரபுக்கள் மட்டுமே பெற்று வந்தனர். இப்போது சகல ஜனங்களும் பயன்பெறவேண்டி 20 டோஸ் கொண்ட பொட்டணம் ரூ. 15-8-0 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. 10 நாளைக்கு வரும். அதற்குள் கண்கூடாகக் குணங்காணும். பிரபல இங்கிலீஷ் டாக்டர்களுடையவும், குணமடைந்த பலருடையவும் உயர்ந்த உண்மை அபிப்பிராயங்கள் கொண்ட இலவசப் புத்தகத்திற்கு

இன்றே எழுதுங்கள்.

ஸ்கந்தாசிரமம்

தபால் பெட்டி, 759 : : எழும்பூர், மதராஸ்



# மின்சாரரசம்

சகல வியாதிகட்கும் தேவாமிருதம் போன்றது.
புட்டி 1-க்கு ரூபா 2.
மின்சார ரசம் கம்பெனி, (லிட்)
சேலம்,

கேஸ் கட்டுப்பாடு என்று சந்தேகித்து, அவனே ஜாமீன் பேரில் வெளியே விட்டுவிட்டார். ஜனங்களெல்லாரும் கேஸ் விடுதலே ஆய்விடுமென்று சொன்னார்கள். நாங்களும் மகிழ்ந்தோம். நானும்—என் மகள் கற்பகம் விவாகமாகாத பெண்ணுயிருந்தாலும், ஆபத்துக்குப் பாபமில்லேயென்று—அவனேயும் கூட்டிக்கொண்டு சேலத்திற்குப் போய் கார்த்திகேயனேடு ஒரு வீட்டில் குடியிருந்து கொண்டு ஒரு வக்கீலும் தீர்மானித்தோம். கற்பகம் எப்படியாவது தன் நாயகனே மீட்டிவிட வேண்டுமென்ற ஆசையால்தான் போட்டிருந்த ஐந்நூறு ரூபாய் நகையையும் விற்றுச் செலவுக்குக் கொடுத்தாள். நாங்கள் அதிர்ஷ்டமில்லாத பாபிகளாகையால், இதற்குள் அந்தத் துரை—அந்தத் தரும நீதிபதி—பட்டணத்திற்கு மேல் வேலேக்குப் போய்விட்டார். பின்னல் இன்னெருவன் வந்து சேர்ந்தான். இனி என்ன சொல்லப் போகிறேன். அந்தப் பாவி கேஸை விசாரித்தான். என் மருமகன் சொன்ன வாக்குமூலத்தைக் கவனிக்கவேயில்லே. எங்கள் வக்கீலேப் பார்த்துச் சீறிச் சீறி விழுந்தான். என் மருமகன் பக்கம் சாக்ஷி சொல்ல ஒரு பாவியும் வரவில்லே. துணிந்து வந்த இரண்டொருவரும் கோர்ட்டார் இருக்கும் அறையைப் பார்த்துவிட்டு ஓடியே போய்விட்டார்கள். நீதிபதியின் வாயால் என்ன தீர்ப்புச்சொல்லுவானேவென்ற கவலேயுடன் இராப்பகல் தூக்கமில்லர்மல் நானும் கற்பகமும் தெய்வங்களே யெல்லாம் கும்பிட்டுக் கொண்டிருந்தோம். முடிவில் என் மருமகனே—நான் வளர்த்துப் புனர்த்தி வாலிபமாக்கி என் அருமை மகளுக்கு மாலேயிடச் சொன்ன, கார்த்திகேயனே ஆயுள் வரை அண்டமானிலிருக்கும்படி அந்தப்பாவி தீர்ப்பு சொன்னன்.

நாய:—(விழித்த கண்ணிமையால், பரிதாபத்துடன் பெருமூச்செறிந்து) தீர்ப்புச் சொல்லுகிறவரை கார்த்திகேயபிள்ளே, நீங்கள் எல்லாரும் ஒன்ருய்த் தானிருந்தீர்களோ?

பூசை:—ஐயா ஒன்ருய்த்தானிருந்தோம். தீர்ப்புச் சொன்னபின், கார்த்திகேயனே என் கண்ணல் பார்க்கவில்லே. இனி எந்த ஜென்மத்தில் காணப் போகிறேன். வீட்டிற்கு வந்து கற்பகத்தினிடம் சொல்லிக் கீழே விழுந்தேன். கற்பகம் ஓவென்றலறி உடனே மூர்ச்சையாய் விட்டாள். நானும் பக்கத்திற் படுத்திருந்தேன். சற்று நேரம் கழித்து, தீபம் வைக்கிற சமயம் திரும்பிப்பார்த்தேன்! என் மகள்—நான் பத்து மாதம் சுமந்து பெற்ற மகள்—என் மகவாசை தீர்த்த தலே மகள்—ஐயோ! என் கண்மணி கற்பகம்—என்ன நினைத்தாளோ!—என்ன யோசனே செய்தாளோ!—திடீரென்று மறைந்துவிட்டாள்!—அங்கே தேடினேன்—இங்கே தேடினேன்—பெரிய சேலம் பட்டணத்தில் எங்கேயென்று தேடுவேன்? குளம் கிணறு வரப்பு வாய்க்காலெல்லாம் தேடினேன்—தேடினேன், தேடினேன்—ஐயா! எட்டுநாள் தேடினேன்—காணவில்லே; இன்னும் காணவில்லே—போய் விட்டாள்—ஒரே போக்காய்ப் போய்விட்டாள்—இன்னும் இருக்கிருளோ—இறந்தாளோ ஈசன் அவளே எப்படிவிட்டானே!—என்னவானளோ!—ஒன்றும் தெரியவில்லே!

நாய:—நீங்கள் அவர்களிருவரையும் பிரிந்து எத்தனே வருஷமிருக்கும்?

பூசை: — நந்தகோபனுக்கு அப்போது வயது பதினேந்து; அவனுக்கு இப்பொழுது நாற்பதாகிறது.

நாய:—அதாவது இருபத்தைந்து வருஷமாய் விட்டது. இனி எது? இவ்வளவு காலம் வரை எப்படி யெப்படி யானர்களோ?

பூசை:—அண்டமான் போனவன் சங்கதி ஒன்றுமே தெரியவில்லே. ஆனல். ஐந்தாறு வருஷங்கழித்து, என் மகன் வடக்கே வேலேயாய்ப் போன பின்பு, அண்ணுமலேயில் ஒரு பெண்பிள்ளே பரதேசியாயிருப்பதாயும், அவள் பாற்கடல் சங்கதிகளேப் பற்றி ஆவலாய் விசாரித்ததாயும் ஒரு துப்புக் கிடைத்து, என் மகன்போய்த் தேடினன். அந்தப்பரதேசியைக் காணவில்லே யென்று திரும்பிவிட்டான்.

நாய:—அப்படியா? தங்கள் மகள் நல்ல சிவப்பு நிறமோ? கட்டையான பெண்பிள்ளேயோ? அப்படியானல், நான் சிறு பிள்ளேயாயிருக்கும்பொழுது, சுமார் பதினேந்து வருஷங்களுக்குமுன், சென்னே மைலாப்பூரில் "அண்ணுமலே அம்மையார்" என்று ஒரு பெண் பரதேசியை அடிக்கடி கண்டிருக்கிறேன். ஒருக்கால் அதுவாயிருக்கலாமோ என்னவோ?

என்று பேசிக்கொண்டிருக்கும் போழுதே, மாலேயில் வருவதாய்ச் சொல்லிவிட்டுப் போன நாவலரும் நாயுடுவும் மடமட வென்று பங்களாவுக்குள் வரவே, பூசையாச்சி திடுக்கிட்டெழுந்து மாதவனே யழைத்துக்கொண்டு, வந்த வழியே அவசரமாய்ப் போய் விட்டாள்.

(தொடரும்)


## தேவை

எமது ஸிகரெட்டுகளே விற்பனே செய்ய எல்லா நகரங்களிலும், ஊர்களிலும் ஏஜண்டுகள் தேவை. தாராள நிபந்தனேகள். கீழ்க்கண்டவர்களுக்கு எழுதுக:-K. John & Co., Mirchi St. Mandvi Bombay No3.



# முத்துக்குளியல்

சில வருஷங்களுக்கு ஒரு :முறை தென் சமுத்திரத்தில் முத்துக்குளித்து, சிப்பிகளே சிறு பொட்டணங்களாக்கி, ஒரே சராசரி விலேயில் விற்பதுண்டு. அவற்றை வாங்கும் அதிர்ஷ்டமுள்ள சிலருக்கு மாத்திரமே முத்துக்கள் கிடைக்கின்றன.

அவ்வண்ணமே, காப்பிக்கொட்டைக்கு பச்சைச் சாயமேற்றி விற்கும் இக்காலத்தில், நீங்கள் கடையில் காப்பி வாங்கும் சமயத்தில் உங்கள் விதிப்படி நல்ல காப்பியோ அல்லது வெளிப்பகட்டான காசுக்கு உதவாத மட்டச் சரக்கோ கிடைக்கலாம். ஆனல் **ஸ்டேன்ஸ் கம்பெனி**யில் 3, 5, 7 பவுன் துணிப்பைகளில் பிடிக்கப்பட்டு முகவாயில் ஈய முத்திரை தரிக்கப்பட்ட அசல் நீலகிரிக் காப்பியை வாங்குவீர்களேயானல், உங்கள் பணத்துக்குத்தக்க பொருள் பெறுவீர்கள். துர் அதிர்ஷ்டம் என்பதே கிடையாது; போட்டி சரக்குகளும் துணிப்பைகளில் விற்பனே செய்யப் படுவதால்,

ஸ்டேன்ஸ்

என்று கேட்கவும்.



குமார சஞ்சீவினி
ரிஜிஸ்டர்ட்
குழந்தைகளின்
ஈரல்-குலே-ஜுரக்கட்டி
வியாதிகளுக்கு
நிகரற்ற குணமுடையது
ஸ்ரீ வைத்தியர். அண்ணுமலே முதலியார்
வைத்தியர் அண்ணுமலே தெரு, மயிலாப்பூர், சென்னே





விலே குறைவான போலி நகைகளே வாங்கி ஏமாறுகிறீர்கள்

நெருப்பிற்கும். திராவகத்திற்கும் உத்தரவாதமான நகை எது?

## அதுதான் தியாகராஜ தங்க நகைகள்

எமது கம்பெனி நகைகள் அதிக நாட்கள் உழைக்கக் கூடியவை என்பது யாவருக்கும் தெரிந்த விஷயமே. இப்போது அதிக நாட்கள் கஷ்டப்பட்டு நீண்ட நாட்கள் உழைக்கக் கூடிய விதமான மெட்டல் தயார் செய்து கை தேர்ந்த வேலேக் காரர்களேக் கொண்டு நகைகளே தயார் செய்து இருக்கிறோம் ஒரு தரம் வாங்கி பார்த்தால்தான் எங்கள் உண்மை தெரியவரும் எமது நகைகள் கண்களேக்கவரும் அழகும் வேலேப்பாடும் உள்ளவை பல பொருட் காக்ஷிகளில் தங்க மெடல்கள் பரிசுபெற்றவை. தங்கத்திற்கு வனத்தில் குறைந்தாலும் குணத்தில் மேற்பட்டவை. அதிக செலவின்றி எல்லோரும் அழகாய் அணிந்து கொள்ளத் தகுந்த உயர்தர நகைகளும் பலரகமான கல்மாலேகளும் நயமாய் கிடைக்கும்.

கேட்டலாக் இனம்.

கல்மாலே 1 பெட்டை ரூ. 5

ஸ்ரீ தியாகராஜா மெட்டல் ஜிவல்லரி ஒர்க்ஸ்,
77, சைனபஜார் ரோட், மதராஸ்

**ஹாஸ்யப்பகுதி**

# பரம ரகசியம்

"தொச்சி"

பரம ரகசியங்கள் அன்பர்கள் கூடும்பொழுது வெளி வந்துவிடுகின்றன. நம் சகோதரிகளிடத்திலும் இது சகஜமே!

பரம ரகசியமாயிருந்த மனைவிக்கு அவ்விஷயத்தை வெளிவிடுவதில்லை என்று உறுதிமொழி கூறியிருந்தும், தர்மராஜன் தன் சிநேகிதன், ராமுவைக் கண்டபொழுது, மேலே கூறிய விதிக்கு விலகாமல் விஷயத்தைக் கூறினுன்.

* * * *

தற்சமயம் ஓர் குடும்பம், கடந்த இருபது வருஷங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்டு, சண்டைச் சச்சரவு எதுவுமின்றி நடந்து வருகிறது ஒன்று உண்டென்றுல், அது தர்மராஜனுடையதுதான்! அவன் குடும்பத்தில் நபர்கள் அதிகமில்லை. தர்மராஜன், அவனுடைய மனைவி மங்களாம்பாள், புத்திரி சுந்தரி இவர்களே! சுந்தரிக்குச்சென்ற வருஷம்தான் விவாகமாயிற்று. மாப்பிள்ளை செல்வத்திலும் கல்வியிலும் செழித்து ஓங்கி இருந்தான். ஆயினும் சற்று முரட்டு சுபாவமுடையவன்.

இவர்களைத் தவிர, தர்மராஜனுக்கு சந்திரன் என்ற சகோதரன் இருந்தான். அவன் எங்கோ வடக்கே வேலை பார்த்து வந்ததால் அடிக்கடி சகோதரர்கள் சந்திக்க முடியவில்லை. அதனுல் அவனைக் குடும்பத்தில் ஒருவனுக நினைக்க தர்மராஜனுக்கு சந்தர்ப்பம் ஏற்படவில்லை.

* * * *

காவேரியாற்றில் நீர் ஓடிக்கொண்டிருந்தது. இரு கரைகளிலுமுள்ள தோட்டங்களில் புஷ்பங்கள் மலர்ந்திருந்தன. பக்ஷிகள் எங்கும் களிகொண்டு சப்தித்துக்கொண்டிருந்தன. காற்று சரீரத்திற்கு ஒத்ததாய் வீசிக் கொண்டிருந்தது. பொங்கும் மங்களம் அங்கும் தங்கிற்று.

இப்பேர்ப்பட்ட தோட்டங்களில் ஒன்றில் காவேரி யாற்றின் கரையோரமாக மணலில் தர்மராஜனும், ராமுவும் உட்கார்ந்திருந்தார்கள். இங்குதான் தர்மராஜன் பரமரகசியத்தை வெளியிட்டது.

"ராமு! நான் சொல்லப் போவதை நீ நம்பவே மாட்டாய்? வீட்டில்...," என்றுன் தர்மராஜன் கம்மியகுரலுடன்.

"தர்மா! என்ன வீட்டில் அப்படி நடந்து விட்டது.நீயும் உன் மனைவியும் மிகவும் அன்னியோன்னிய மாயிற்றே?"

"நீ சொல்வது வாஸ்தவமே! ஆனுல் போன தீபாவளி முதல் நானும் மங்களமும் பேசுவதில்லை."

"ஆஹா...என்ன சொன்னுய்?என் காதுகளை நம்பமுடியவில்லையே! காரணம் என்னமோ?" என்று தாழ்ந்த குரலுடன் ராமு தன் சிநேகிதனைப் பரிதாபத்துடன் நோக்கினுன்.

"சரி அக்கதையைச் சொல்லுகிறேன், கேள். ஆனுல் ஒன்று..."

"ஆனுல் என்ன?"

"ஒன்றுமில்லை. இது வேறு யாருக்கும் தெரியக்கூடாது. நீ என் ஆத்ம சிநேகிதன். ஆனதால் சொல்லுகிறேன்."

"என்ன, தர்மா! என் இடத்தில் அப்படி சந்தேகப்படுகிருய்?" என்றுன் ராமு.

தர்மராஜன் ஆரம்பித்தான்:—இவ்வருஷம் எங்கள் குடும்பத்தில் தலை தீபாவளியல்லவா? அதற்கு ஒரு வாரத்திற்கு முன்பே என் மாப்பிள்ளை சந்திரனுக்கு அழைப்புக் கடிதம் எழுதினேன். அதற்கு அவன், 'தீபாவளிக்கு ஒரு ஆஸ்டின் கார் வாங்கித் தந்தாலொழிய இங்கு வர' மறுத்துவிட்டான். நான் என்ன செய்வேன்! பணத்திற்கு எங்கு போவேன்!

அக்கடிதத்தை என் மனைவியிடம் கொடுத்தேன். அவளின் யோஜனையின் பேரில் என் மாப்பிள்ளைக்கு ஒரு லிகிதம் எழுதினேன். அதில் எனக்கு தற்போது பணமுடையாயிருப்பதாயும் வருகிற வருஷம் வாங்கித்தருவதாயும் கேட்டுக் கொண்டேன். ஆனுல் அவன் மறு தபாலில் தீபாவளிக்கு வரமுடியாததைப்பற்றி வருந்துவதாகப் பதில் எழுதிவிட்டான்."

"அப்புறம் என்ன செய்தாய்?" என்று குறுக்கிட்டான் ராமு.

"ஆனுல் தீபாவளிக்கு முதல் நாள் ஓர் ஆச்சர்யம் நடந்தது. அன்று மத்தியானம் எனக்கு ஓர் தந்தி வந்தது..."என்று முடித்து, தன் கோட் பைகளைத் தேடி, அவைகளிலொன்றிலிருந்து ஓர் கடிதத்தை எடுத்து, ராமுவிடம் நீட்டி, "அத் தந்தி இதுதான். வாசிப்பார்ப்போம்" என்றுன்.

ராமு அத் தந்தியில் உள்ளதை உறக்கப் படித்தான்:—தீபாவளிக்கு அங்கு வருகிறேன். சந்திரன்! "பிறகு மாப்பிள்ளை வர ஒப்புக் கொண்டிருக்கிருனே..." என்று ராமு சொல்லிக்கொண்டிருப்பதை மறித்து, "அப்படி ஒன்றும் நடக்கவில்லை. நான் சொல்வதை முழுதும் கேட்டுவிட்டுப் பிறகு கேள்வி கேள். நான் பதில் சொல்லத் தயார்" என்றுன் தர்மராஜன்.

பின்பு தர்மராஜன் தொடங்கினுன்: "பிறகு நான் விருந்துக்கு வேண்டியதை வாங்கி வர கடைக்குச் சென்றேன். ஆயத்தங்கள் வெகு மும்முரமாக நடந்தன. எல்லோரும் முக மலர்ச்சியுடனிருந்தோம். சாயங்காலம் மணி ஆறுக்கு எங்கள் வீட்டின் எதிரில் ஓர் வண்டி வந்து நின்றது. அதிலிருந்தும் என் தம்பி சந்திரன் இறங்கினுன். "அண்ணு, பெங்களூருக்கு என்னை மாறறி விட்டார்கள். ஒரு வாரம் லீவு எடுத்துக்கொண்டு வந்தேன். என் தந்திவந்து சேர்ந்திருக்குமென்று நம்புகிறேன்" என்று சொல்லிக்கொண்டே உள்ளே நுழைந்தான். எங்களுக்கெல்லாம் தூக்கி வாரிப் போட்டது. விஷயமும் புரிந்தது.

"அன்றிரவு மங்களம் என் தம்பியை—இவ்வாறு விஷயங்கள் ஒன்றும் நன்கு புலப்படாத விதம் தந்திச் செய்தி அனுப்பியதற்குக் கோபித்துக் கொள்ளக் கூடாதோ என்றுன். நான் அவன் என்ன அப்படி ஆகாததைச் செய்துவிட்டான். அவன் செய்தது நியாயம்தானே! அதற்கென்ன செய்வது? மாப்பிள்ளை பெயரும், என் தம்பியின் பெயரும் ஒன்றுய் இருப்பதால் என் தம்பியின் மேல் என்ன குற்றம் என்றேன்.

"அப்புறம்"

"பின்பு என் மனைவி என்னுடன் பேசுவதில்லை."

ராமு தர்மராஜனின் மன

(அடுத்த பக்கம் பார்க்க)



ராமுவின் மனைவி கமலம் அன்னம் பரிமாறிக்கொண்டே: "உங்கள் சிநேகிதன் தர்மராஜனும் மங்களாம்பாளும் பேசுவதில்லையாம். பாவம்! மிகவும் அன்னியோன்யமாயிருந்தார்கள். காரணம்............" என்று இழுத்தாள்.

ரேகை சாஸ்திரம்

# கையின் பொது லக்ஷணம்

—:[ o ]:—

“ சக்திதாஸன் ”

கையைப் பரிக்ஷிப்பதற்கு தக்க வழி யாதென்றால், சமதளமான மேஜை அல்லது பலகையிலாவது, விரல்களை நீட்டிக்கையை வைக்கவேண்டும். வளையக்கூடிய மிருதுவான கையாக விருந்தால் சமமாய் வைக்கச் செய்வது நலமாகும். இப்பொழுது முழுக்கையும் பார்வைக்குட்படும். முதலாவது விரல்களின் அமைப்பு உள்ளங்கையைவிட நீளமா அல்லது குறுகியதா அல்லது சம அளவுடையதாவென்பதைக் குறிக்க வேண்டும்.

இனி கையை மூன்று பாகமாகப் பகுத்து விரல்கள் ஒன்றாகவும், உள்ளங்கை இரு பகுதியாயும், பார்க்குங்கால், அதன் ஏற்றக் குறைவு விளங்கும். ரேகை சாஸ்திர விஞ்ஞானிகள் இதனை ஆழ்ந்து ஆராய்ந்து மூன்றையும் மூன்று உலக ஞானமாகப் பகுத்தறிகின்றனர். எந்த ஆதாரங் கொண்டு வாழ்க்கை நடைபெறுகிறது? மானசிகமான சிந்தனையா, காரிய சந்தர்ப்பமா அல்லது (மிருகம் போன்ற) தேகபலமா இந்த மூன்றில் எந்தப் பகுதி வேலை செய்கிறது? இவற்றை நாம் உணர வேண்டும் தேக தத்துவ சோதனையில் தேகம்; ஆத்மா, சக்தி என்ற மூன்றையும் நாமறிவோம். இவைகள்




மனம் (காற்று), சக்தி (நெருப்பு), ஸ்தூலம் (ஜலம்) என்று மூவுலகைக் குறிக்கும் திரிபதார்த்தமாய் அறியத் தக்கவை.

இந்த மூன்றையும் கையிவிருந்தே ஒருவாறு அறியலாம். கையில் விரல்களுள்ள பகுதி மானசீகத்தையும், மத்தியபாகம் அதாவது விரல்களின் அடிமட்டத்துக்குக் கீழ், சந்திர மேட்டிலிருந்து சுக்கிர மேடு வரை குறுக்கேயுள்ள கோடுவரை ஸ்தூலபுத்தியையும், கையின் அடிப்பகுதியான மணிக்கட்டிலிருந்து நடுக்கோடுவரை தாழ்ந்த நிலைக்கான தத்துவத்தையும் குறிக்கும். ரேகை சாஸ்திரப்படி இம்மூன்றும் மூவுலமாகும். இவற்றில் விரல்கள் அளவில் மற்றவைகளைவிட நீண்டிருந்தால் மானசீகத்தால் வாழ்வதை அறிவிக்கும். மத்திய பாகம் கம்பீரித்திருந்தால் இவ்வுலகப் பிரவிர்த்தி மேன்மேல் ஓங்குவதைக் குறிக்கும். மணிக்கட்டுக்கு மேலுள்ள மூன்றும் பகுதி மிகக் கெட்டியாயிருக்குமாயின், தாழ்ந்த நிலைமையில் புத்தியும் விவகாரமும் அமைந்திருக்குமென்பதாம்.

திடசித்தம் அல்லது அழுத்தமான மனதுடையோர் இவ்வுலகில் மேன்மேலும் விர்த்தியாகி வருவதை நாம் அறிந்து வருகிறோம். தன்னைத் தான் உயர்த்திக்கொள்ள மனமொன்றே காரணமாகும். கல்வியினாலும், பலபேர் அபிவிர்த்தியைக் கண்டும், தக்க யோசனைகளாலும், இவற்றாலுண்டாகும் அனுபவத்தாலும் ஆதாரங்கூட இல்லாமல் ஒருவன் உயர் நிலையை யடைந்து விடுவான். யுக்தி, யோசனை, விடாமுயற்சி இவைகள் மனோதர்மத்தைச் சேர்ந்தவை. படித்த மேதாவிகள், கலை ஆசிரியர்கள், ஆராய்ச்சியிலேயே யிருக்கும் மாணவர்கள் முதலானோர், நல்ல மனமிருந்தும், தொழில் அல்லது பிரவிர்த்தியிலீடுபட முடியாதிருப்பதால், ரேகை சாஸ்திரப்படி மனோராஜ்யம் செய்யும் முதல் உலகத்தைச் சேர்ந்தவர்களாவர். மத்திய உலகம் அனுபவப் பிரபஞ்சம்; இது அபிலாஷைக்குட்பட்டது; அபிவிர்த்திக்கானது; அதற்கான யோசனை நுண்ணறிவு, சாமர்த்தியம், லாப நஷ்டத்தைத்தாங்க அல்லது நீக்கத்தக்க உபாயம் முதலியன உண்டாகின்றன. இப்பிரபஞ்ச வாழ்க்கையெனும் சம்சார சாகரத்தில் சுகியாய் வாழ்வதெனின், கஷ்டங்களோடு போராடமலிருக்க முடியாது. இக்காலத்தில் எவருக்கும் போதுமான சக்தியிருக்குமெனச் சொல்வதற்கில்லை. மத்தியப் பிரபஞ்ச வாழ்வு நல்வழிப்பட்டிருக்க வேண்டுமாயின் மற்றிரண்டு உலகங்களின் ஆதரவு அவசியமாகும். இவ்விரண்டும் ஒத்திருக்குமாயின் பிரவிர்த்திகளான இராஜீயம், வர்த்தகம், கைத்தொழில், யுத்தம், பயிர்த்தொழில் முதலிய யாவும் அனுபவத்தில் சிறப்புற்றோங்கும். அப்பொழுது மூளையின் சக்தியும் அதன் பிரபாவமும் நன்கு விளங்கும். பொருள் உள்ளோருக்கு இவ்வுலகமாதலால் மூவுலகும் சாத்திய மாகும்போது பொருளைத் தக்க வழியில் தேடி அடைந்துவாழ்வில் மேன்மை பெறுகின்றனர்.

மணிக்கட்டுக்கு மேலேயுள்ள மூன்றும் பகுதி கம்பீரமாயிருந்தால் இத்தகையோர் வாழ்க்கை விநோதமாயிருக்கும். அழகைவிரும்பியிருப்பர். ஆனால் அழகற்றதையே அழகென ஏற்றுக் கொள்வர். பொருள் கிடைக்கினும் சௌகரியமான வழியில் செலவிடத்தெரியாது. காரணமென்னவெனில் மூளை வேலைசெய்கிறதில்லை. மனம் வழிகாட்டுகிறதில்லை. ஸ்தூல புத்தியேயாயினும் எல்லாம் தகாதவழியில் பிரவர்த்திக்கும். இத்தகையோர் கைரேகை பார்த்துக் கொள்வதும் அபூர்வம். கை மிருதுவாயிருந்தால் மூவுலகையாளும் சக்திவாய்ந்திருக்கும். மனிதரின் தோற்றமும் நடையுடை பாவனைகளும் அவர் எத்தகைய சக்தியுடையவர் என்பதை யூகித்தறிந்துகொள்ள உதவும். மனோராஜ்யத்தில் தேர்ந்த மேதாவிகள் இவ்வுலகை மதிப்பதில்லை. அவர்கள் மனம் எவ்வளவு ஜெயப்பிரதாபத்தைக் கொடுப்பதாயினும் பொருள் தருவதாயில்லை. அந்தந்த உலக ஆட்சியே இதற்குக் காரணமாகும். நல்ல பகுத்தறிவும் லோகானுபவமும் சேர்ந்திருக்க வேண்டுமாயின், மூவுலகில் ஒன்றுக்கொன்று ஆதாரமாயிருக்கவேண்டும். என்றாலும் கையில் நடுப்பகுதியே மேம்பாடுடையது. மானசிகமின்றி பிரவிர்த்தியில்லையாகையால் அது ஒரு பெரிய சாதகம். முற்பகுதி இரண்டும் ஒத்திருப்பில் மனோபலத்தால் பொருளும் நல்ல ஞானமும் உண்டு. பிற்பகுதி இரண்டும் ஒத்திருப்பில் ஊழியத்தால் பொருள்சேரும். மத்தியப் பகுதியின்றி, முதலும் கடையும் ஒத்திருந்தால், மனோராஜ்யம் ஆகாயக்கோட்டையைப் போலாகும். பிரவிர்த்தியில் புத்தி செல்லாது. ஆகையால் இவ்விரண்டும் பலன் கொடாது. எனவே, ஆதரவுள்ள நடுப்பகுதி சிலாக்கிக்கத்தக்கது.

---

(முன் பக்கத் தொடர்ச்சி.)

தின் நிலையற்ற தன்மையைக் கண்டு ஒன்றும் பேச இயலாதவனாய் மௌனமாய் வீடு திரும்பினான்.

* * * *

ராமுவின் மனைவி கமலம், இலையில் அன்னம் பரிமாறினவளாய், “உங்கள் சிநேகிதன் தர்மராஜனும், மங்களாம்பாளும் பேசுவதில்லையாம். பாவம்! மிகவும் அன்னியோன்னியமாயிருந்தார்கள். காரணம்......” என்று இழுத்தாள்.

அதற்குள் ராமு, “தர்மராஜனின் தம்பி சந்திரன் வருகிறானென்று தந்தி அனுப்பித்திருந்தான். இவர்கள் மாப்பிள்ளை சந்திரன்தான் எழுதி இருக்கிறானென்று நம்பினார்கள். அதற்கு தர்மராஜன் ஒன்றும் அறியாத சந்திரனைக் கோபித்துக் கொள்ள உத்திரவு பிறந்தது. அதை அவன் மறுக்க, இருவரும் பேசுவதில்லை” என்று ஒரே மூச்சில் முடித்தான்.

“உங்களுக்கு யார் சொன்னது!” என்றாள் கமலம்.

“உனக்கு யார் சொன்னது!” என்றான் ராமு.

இப்படியாகப் பரம ரகசியம் வெட்ட வெளிச்சமாயிற்று.

## தென்னிந்தியப் பிரமுகர்கள்

(8-ம் பக்கத் தொடர்ச்சி.)

மாகக் கையாளப்பட்டபோது இவர் ஹிந்து வாசகசாலையில் ஹிந்து மதத்தைப்பற்றிக் கோர்வையாகப் பல உபந்நியாசங்கள் நிகழ்த்தி, அதி துரிதமாக நடந்து வந்த மதமாற்றுதலுக்கு முற்றுப் புள்ளியிட்டார்; தவிர கிறிஸ்துவ மதத்தைத் தழுவியவர்களையும் நமது மதத்திற்கு இவர் ஆகர்ஷித்தார். நமது மதத்தைப் பற்றி தெலுங்கில் "ஆர்ஷமதோபந்யாஸமுலு" என்ற மகுடத்துடன் பல உயர்ந்த வியாசங்கள் தொகுக்கப்பட்ட ஒருபுத்தகத்தையும் எழுதி வெளியிட்டார். முக்தி, முக்திமார்க்கம், அவதாரம், ஈஸ்வரன், ப்ரமாணம், ஆத்மா, கர்மா, தர்மம், ஸ்ருஷ்டி, ஜன்மம், குணம், வேதம் ஆகிய விஷயங்களைப் பற்றி இவர் எழுதினார்.

1890-ல் தென் தேசத்தில் யாத்ரா மார்க்கமாக மைசூர் சென்று, அங்கு சமஸ்கிருதத்தில் ஸாஹித்யாலங்கார விஷயங்களைப்பற்றிப் பல பிரசங்கங்கள் செய்தார். இவருடைய அதிதர சாதாரண நைபுண்ணியம் திவான் முதலியோர்களையும் ஆகர்ஷித்தது; மஹாராஜா ஸ்ரீ சாமராஜேந்திரவுடையார் இவரை நின்றுகொண்டே வரவேற்றார்; இவரது பிரசங்கத்தையும் சிரத்தையுடன் கேட்டார். பரமசந்துஷ்டரான அவர் இவருக்கு "மஹாவித்வத்" சம்பாவனையான இரண்டு தங்க தோடாக்கள், இரண்டு துப்பட்டாக்கள், ஒரு பண முடிச்சு ஆகியவற்றை வழங்கினார். இவருக்குத் திருவாங்கூர் சமஸ்தானத்திலும் இத்தகைய கௌரவம் கிடைத்தது.

அஷ்டாவதானம், சதாவதானம் செய்யும் அதிசய ஆற்றலும் இவரிடம் அமைந்திருந்தது. அநாயஸமாக சம்ஸ்கிருதம், தெலுங்கு பாஷைகளில் கவனம் செய்யும் சக்தி இவருக்கு உண்டு. ஒரு சமயம் 30 பேர்களுக்கு வரிசைக் கிரமத்தில் வெவ்வேறு விஷயங்களைப் பற்றி வெவ்வேறு விருத்தங்களில் பிசகாமல், ஞாபகத்துடன் சுலோகங்களைக் கவனம் செய்து ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பாதம் சொல்லி அவர்களை எழுதச் சொன்னார். கடைசியில் அவர்களை நாம் என்ன சொன்னோம் என்று கேட்காமலே பூர்த்திசெய்த சுலோகங்களை முழுதும் திரும்பச் சொன்னார். அவர்கள் எழுதியதற்கேற்ப இவர் அந்த சுலோகங்களை ஞாபகமாகச் சொன்னது எங்கும் விஸ்மயத்தை விளைவித்தது.

### மஹாமஹோபாத்யாயர் பட்டம்

1858-ல் இத்தேசத்திய அதிகாரம் ஈஸ்டு இந்தியா கம்பனியாரிடமிருந்து பிடுங்கப்பட்டு, விக்டோரியா மஹாராணியின் ஆட்சி கோஷிக்கப்பட்டபோது, இவர் "ஆங்கலாதிராஜ்யஸ்தவம்" என்று ஒரு சிறு காவியத்தை ராணியின் ஆட்சியை திருப்தியுடன் வரவேற்பதாக எழுதி, வைஸ்ராய் பிரபு முதலியோருக்கு அதை அனுப்பினார். இந்த காவியம் சந்தோஷத்துடன் பாராட்டப்பட்டு, இவருக்கு "ஸர்டிபிகேட் ஆப் மெரிட்" (நற்சாக்ஷிப் பத்திரம்) கொடுக்கப்பட்டது. 1887-ல் இவருக்கு "மஹாமஹோபாத்யாயர்" பட்டமும் வழங்கப்பட்டது. இதற்கு முன்பு ஆயுதச் சட்டம் இத்தேசத்தில் அமுலுக்குக் கொணரப்பட்டபோது, அச்சட்டத்தின் விதிகள் இவரைப் பாதிக்கக்கூடாது என அரசாங்கத்தார் உத்தரவிட்டனர்.

### எழுதிய கிரந்தங்கள்

மஹாமஹோபாத்யாய ரங்காச்சார், சம்ஸ்கிருதத்திலும் தெலுங்கிலும் அநேகம் கிரந்தங்கள் எழுதினார். ராஜ சூடாமணியின் "கமலினீகலஹம்ஸ"த்தையும், காளிதாஸனின் "சாகுந்தல"த்தையும் இவர் தெலுங்கில் மொழிபெயர்த்தார். சாகுந்தல நாடகத்தை தெலுங்கில் முதலில் மொழிபெயர்த்தவர் இவரே. "உபநிஷத்ஸாரகிதலு" என்ற தலைப்புடன் உபநிஷத் தத்துவங்களை தெலுங்கில் இவர் பல பாட்டுக்களாக அமைத்து எழுதினார். இவை மஹாராஜா ஸர் கோவிந்த நாராயண கஜபதிராவின் வேண்டுதலுக்கிணங்கி எழுதப்பட்டவை. தெலுங்கு சந்த விருத்தங்களைப் பற்றி "ஸ்ரீநிவாஸ லக்ஷணமு" என்று தமது பிதாவின் ஞாபகார்த்தமாக இவர் ஒரு சிறு கிரந்தம் எழுதினார்.

"லகு வியாகரணம்" என்ற சம்ஸ்கிருத இலக்கண நூலை இவர் கத்யரூபமாக சம்ஸ்கிருதத்தில் எழுதினார். "சப்தானுஸாஸனம் போதேர், பாலானாம், பிதவே ஸதஸாம் குர்வே சுகா வகாஹாய, லகு சப்தானு ஸாஸனம்" என்றபடி இவர் எளிய முறைகளில் வியாகரண கிரந்தத்தை எழுதினார். தத்துவ பாகத்தைப் பற்றின "ப்ரபத்திவாதம்" என்ற இவரது நூல் இவர் பொப்பிலி சீதாராம சாஸ்திரியுடன் நடத்திய வாதத்தின் பலனாகும். மஹாபாரதத்தில் இருக்கும் நளதமயந்தி கதையை நாடகரூபமாக சம்ஸ்கிருதத்தில் "மஞ்ஜுள நைஷதம்" என்று எழுதினார்; இந்த நாடகத்தின் ஸப்த அங்கங்களும் ஏழு தினங்களில் எழுதி முடிக்கப்பட்டன. முராரியின் "அநகர்காகவ"த்திற்கும் இன்னும் இதர நாடகங்களுக்கும் இவர் அரிய வியாக்யானங்கள் எழுதினார்.

### அச்சிடப்படாத அரிய கிரந்தம்

இவர் எழுதியவை எல்லாவற்றிலும் மிக சிரேஷ்டமானது "சப்தார்த்த ஸாரஸ்வம்" ஆகும். இது சம்ஸ்கிருதத்தில் எல்லாவிஷயங்களும் அடங்கிய கிரந்தமாகும். இவரால் இது சித்தார்த்தி வருஷம் (1865-ல்) ஆரம்பிக்கப்பட்டு, பின்பு 35 வருஷகாலம் வரையில் சிறிது சிறிதாக எழுதப்பட்டு வந்ததாகும். ஆனால் இது இவரது ஆயுட்காலத்திலும் முடிவுபெறவில்லை. அச்சிடப்படாத இக்கிரந்தம் இன்றும் இவரது பௌத்திரரான விஜயநகரம் சம்ஸ்கிருத கலாசாலை அதிபர் ஸ்ரீமான் பரவஸ்து ராமாநுஜஸ்வாமியிடம் இருக்கிறது. இப்புத்தகத்தை அச்சிட்டு வெளியிடுவதை உத்தே

அசல் புளூ ஜாகர்
வைரங்கள்
இயற்கை முறையில்
உற்பத்தி செய்யப்பட்ட
(CULTURE)
நல்முத்துக்கள்
கிடைக்குமிடம்:
சிமன்லால் பிரதாப் சந்த்
175, சைனாபஜார், மதராஸ்




ஜகத்ரக்ஷக
ஸ்ரீ ஷண்முக யந்திரம்
125,6600. ஜனங்கள் போற்றுவது
பரீக்ஷை வெற்றி, ஜீவன விருத்தி, சொற்பன மிரட்சி, சத்துரு அடக்கம், வழக்கு ஜெயம், புத்திர விருத்தி, குடும்ப ஒற்றுமை, நோய்பேய் ஒழிதல், யந்திரம் 1க்கு ரூ 2.
மாந்திரீக மருத்துவ ஆபீஸ்,
வாலாஜாபாத், P.O, S.I.R. சென்னை.

நம்பிக்கையான இடம்.



மர்ச் & செமூர்
மார்ஷல் ரோட், எழும்பூர் மதராஸ்.




உங்கள் கூந்தல் ஒளியிழந்திருக்கிறதா?—அதனால் உங்களுக்கு வயது அதிகமாகிவிட்டாற்போல் தென்படுகிறதா?—அப்படியாயின் உங்கள் மருந்து வியாபாரியிடம் ஓடி ஏதாவதொரு சாயத்தை வாங்கித் தடவிக்கொள்ளாதீர்கள். கேஷ்கலாவை உபயோகியுங்கள். அற்புதமான கூந்தல் லோஷன்.

Obtainable from:—
அப்பா & கம்பெனி, சைனாபஜார் ரோட், மதராஸ். வி. ஜே. சேத், பந்தர் தெரு, மதராஸ் டி. ஷேகுஸ்தான் & கம்பெனி, டெங்களூர் சிடி & கண்டோன்மெண்டு. ஸ்ரீ கணேஷ் மார்ட், ராஜா தெரு, கோயமுத்தூர். எக்ஸ்-ட-பேல்வா, பிரின்ஸ் தெரு, கொளும்பு.

Further Inquiries to:—
KESHKALA CHEMICAL CO., P.O. Box No. (M)5506. Bombay, 14.

டாக்டர் ஜம்மி வெங்கடரமணய்யாவின்
லிவர்க்யூர்
குழந்தைகள் ஈரல், குலைகட்டிகளுக்கு
நிகரற்றது என்று டாக்டர்களாலும்,
பெற்றோர்களாலும் போற்றப்பட்டது.
அநேக கண்காட்சிகளில் தங்கமெடல்களும், நற்சாட்சி பத்திரங்களும் பெற்றது.
ரங்கூன் ஏஜெண்டு:—ரிலையன்ஸ் பார்மசி, 125-12, பின்னட் வீதி—ரங்கூன்.

சித்துதான் இவர் அச்சுக்கூடத்தை நிறுவினார். இவர் எவ்வளவு முயற்சித்தபோதிலும், முதல் இரு அக்ஷரங்களின் கீழ் காணப்படும் விஷயங்களடங்கிய இரண்டு பாகங்களுக்கு மேல் அச்சிட முடியவில்லை. சிறு தெலுங்கு அக்ஷரங்களில் அச்சிடப்பட்ட இவை 650 பக்கங்கள் அடங்கியுள்ளன; இதினின்றும் இவ்வரிய கிரந்தம் முற்றுப் பெற்று அச்சிடப்பட்டால் எவ்வளவு விஸ்தாரமாக விருக்கும் என்பது தெரியவரும். விஜயநகரம் மஹாராஜா ஸர் ஆனந்த கஜபதி இதை நாகரி அக்ஷரத்தில் அச்சிட்டுக் கொடுப்பதாக வாக்களித்தார்; இதற்குள்ளாகவே அவர் காலமாகிவிட்டது விசனத்திற்குரியது.

"அக்ஷரக்ரம ஸம்பத்த
ஸப்தக்ரம ஸமந்விதம்
பஸ்யன் பாஷாவிசேஷாஸ்
தம் ஸர்வ சாஸ்த்ரார்த்த
ஸங்கிரஹம்
கிரந்தம் ஸம்ஸ்கிருத
பாஷாயாம் கர்த்துகாமஸ்த
தாவிதம்
கிரந்தம் ஆரப்தவான் வனம்
சித்தாத்தே வத்ஸரே
ஸுபே
தஸ்ய ஸபத்ரர்த்த ஸர்
வஸ்வம் இதிஸம்ஞானம்
அபிபவம்"

எக்காலமும் அழியக்கூடாத இக்கிரந்தம் அச்சிடப்பட்டு வெளிவருமாகில், சம்ஸ்கிருத உலகிற்கே ஒரு ஜோதியாக விளங்கும். 1869-ல் விசாகப்பட்டணம் ஜில்லா புத்தகத்தை எழுதிய கார்மிகேல் துரை இதையும், இவரது பிதா எழுதிய "ஸர்வஸப்தஸம்போதினி"யையும் தமது நூலில் குறிப்பிட்டுள்ளது கவனிக்கத்தக்கது.

### அந்தியகாலம்

நம் மஹாமஹோபாத்யாயர் தமது அந்திய பத்து வருஷங்களை கோதாவரி ஜில்லாவில் டூனியில் கழித்தார். 1890-ல் டூனி ஜமீன்தார் இவரை வற்புறுத்தி அழைத்துச் சென்றார். அவர் வருஷம் 1000 ரூபாய்கள் இவருக்குக் கொடுத்துவந்தார். இதற்கு முன்பு வருஷத்தில் ஆறுமாத காலம் விசாகப்பட்டணத்திலும், மிகுதியை தெலுங்கு ஜில்லாக்களைச் சுற்றித் தமது வருஷ வருமானங்களை வாங்கிக் கொண்டு வருவது வழக்கம். இதன் பின்பு தாம் மாத்திரம் டூனியில்வசித்து வந்தார். தமது காலத்தை சிஷ்யர்களுக்குப் பாடம் போதிப்பதிலும் விசேஷ அகராதியை எழுதுவதிலும் இவர் போக்கி வந்தார். 1896-ல் ஏற்பட்ட இவரது புத்திரரின் மரணம் இவரை மிக்கவும் வாட்டியது; மேதாவியான தமது குமாரன் தமது புத்தகத்தைப் பூர்த்திசெய்வார் என இவர் நம்பினார். இவ்வகால மரணம் பற்றி இவர் அதிதுரிதமாகத் தமது வேலையை நடத்தினார்.

1899-ல் சம்ஸ்கிருத ஞானம் மிகுந்த இவரது பௌத்திரனும் நோய்க்கு இரையாகவே இவர் தமது நம்பிக்கையை விட்டொழித்தார். இக்காரணங்கள்பற்றி வாழ்க்கையில் வெறுப்புகொண்ட இவரது தேகதிடம் விரைவில் குன்றிவிட்டது. 1900-வருஷம் ஜனவரிமாதம் 20-ந் தேதி யன்று டூனியில் மஹாமஹோபாத்யாய பரவஸ்து வெங்கடாச்சாரியஸ்வாமி தமது 78-வது ஆண்டில் தேகவியோகமானார். ஜகத்விக்யாதிபெற்ற தேஜஸ் மறைந்தது.

"வந்தே ஸ்ரீ பரவஸ்து
ஸ்ரீ வாஸகுரோ:
பதாஸ்ரி தம்தனயம் |
வெங்கடாரங்கேச குரும்
ராமாநுஜ—
முநிதயோல்லாஸித
வோதம் | |"

இம் மஹாமஹோபாத்யாயருக்கு 2 குமாரர்களும் 3 குமாரிகளும் பிறந்தனர். இப்போது ஜீவித்திருக்கும் இவரது கடைசி புத்திரியைத் தவிர மற்றவர்கள் யாவரும் இவரது காலத்திலேயே காலமாயினர். ஜ்யேஷ்ட புத்ரர் இளம்பிராயத்திலேயே காலமானார்; இளைய குமாரர் 42 வயதுவரை ஜீவித்து, பல கிரந்தங்கள் எழுதி மஹா பண்டிதராக விளங்கினார். அவரும் விசாகப்பட்டணத்தில் 4 குமாரர்களையும் 3 பெண்களையும் விட்டுவிட்டு இவ்வாழ்வை நீத்தனர்; இந்த நான்கு புத்திரர்களுள் கடைசியான ஸ்ரீமான் பரவஸ்து ராமாநுஜஸ்வாமி இப்போது விஜயநகரம் மஹாராஜா சம்ஸ்கிருத கலாசாலையின் தலைவா இருந்து, இக்குடும்பத்தினருக்குக் கிட்டிய துர்லபமான சம்ஸ்கிருத பாண்டியத்திற்குத் தற்காலத்திய நிதர்சனமாக சோபித்து வருகிறார்.

1922-ம் வருஷம் மே மாதம் 12-ம் தேதியன்று, விசாகப்பட்டணத்தின் பொது ஜனங்கள், ஜெயப்பூர் மஹாராஜா ஸ்ரீ விக்ரம தேவவர்மா பஹதூர் வாரு, மற்றும் பல பிரமுகர்களின் ஆதரவின்கீழ் இந்த ஸ்ரேஷ்ட திவ்ய புருஷர் உதித்து ஒரு நூற்றாண்டு முடிவான தினத்தை, திவான் பஹதூர் பி. நாராயண் மூர்த்தி பந்துலுவின் தலைமையின் கீழ், "ஹிந்து வாசக சாலையில்" விமரிசையாகக் கொண்டாடினர். இவரது உருவப்படம் பிரதிஷ்டை செய்யப்பட்டது; அச்சமயம் இவரது உத்கிருஷ்டோத்கிருஷ்டமான கிரந்தத்தை வெளியிட ஏற்பாடுகள் செய்ய ஒரு கமிட்டி நிறுவப்பட்டது. இவ்விஷயத்தில் திரும்பவும் ஊக்கமும் சிரத்தையும் மேற்கொள்ளவேண்டியது அவசியம்". இன்றேல் இது நமக்கு அவமானத்தைக் கொண்டு வரும்!

* * * *

சிறந்த கூந்தல் ஆகாரம்

உடலுக்கு எப்படி நல்ல உணவு அவசியமோ அதே மாதிரி கூந்தலுக்கும் சிறந்த ஆகாரம் அவசியமானது. எனவே உலகப்புகழ்பெற்ற காமினியா ஆயில் (ரிஜிஸ்டர்ட்) உபயோகியுங்கள் கூந்தலின் ஆரோக்கிய வளர்ச்சிக்கு அத்யாவசியமான சத்துக்கள் பல சேர்ந்தது. மூளைக்குக் குளிர்ச்சி; துல்லிய மணம் நிறைந்தது.



விலை புட்டி 1-க்கு ரூ. 1.
„ 3 புட்டிகள் ரூ. 2-10.
வி. பி. சார்ஜ் தனி

தபால் செலவுக்காக அரையணா ஸ்டாம்பு அனுப்புவோர்க்கு சாம்பிள் இலவசம்.

ப்ராசீன மலர்களின் சுவாசனையும், புத்தப் புதிய இனிமையும் வாழ்விற்கு மகிழ்ச்சியூட்டுபவை; இவ்வளவையும் கீழ்க்கண்டதன் வாசனையில் நனகு அனுபவிக்கலாம்.

ஆட்டோ டில்பஹார்

(ரிஜிஸ்டர்ட்)

ஒரு சில துளிகள் பல நாட்களுக்கு அழியாத வாசனை யூட்டும்; ஏனெனில் ஆட்டோ டில்பஹாரில் விரைவில் ஆவியாக மாறிவிடும் ஆல்கஹால் கிடையாது.

விலை ¼ அவுன்ஸ் ரூ. 1-4. 1 டிராம் 12 அணா.

தபால் செலவு தனி.

சோல் ஏஜெண்டுகள்:—

The Anglo Indian Drug & Chemical Co
BOMBAY 2.

நஞ்சன்கூடு பல்பொடி
டிப்பி) I. D. L. №61. மெடிகேடட் (அணா 4

நஞ்சன்கூடு பல்பொடி பாக்டரியின்
ஊக்கம் உற்சாகம் ஊட்ட ஜிஞ்சிப் அஜீர்ண பித்த சமனி

ஸிவடன்ஸால்
வீர்யவிருத்திகரும் சுகநித்திரைக்கும்



பயனற்ற "கிருமி நாசினிகள்" பூச்சிகளைக் கொல்லலா!
சக்திவாய்ந்த பிளிட் டையே வாங்குக.

FLIT

"பிளிட்" என்றபெயருடன் விளங்கும் போலிச்சரக்குகளை நம்பாதீர்கள். கறுப்புப் பட்டையுடன் கூடிய சோல்ஜர்கொண்ட மஞ்சள் டின்னிலேயே "பிளிட்" விற்கப்படுகிறது. இடுக்குகளில் "பிளிட்" தெளியுங்கள். ஜீவன அனைத்தும் மடிகின்றன




ஸோல்ஜர் உருவம் இல்லாத டின் பிளிட் அல்ல.

தென்னிந்தியாவிற்கு சோல் டிஸ்டிரிபியூட்டர்கள்:—
டி. த. கிருஷ்ணமாச்சாரி, 11-14, அரமனைக்காரத் தெரு, மதராஸ்

## கவலை யொழிக்க



# இந்திய தேயிலை பானம்

“துக்க நிவாரணி தேயிலையே” என்று ஒரு வேதாந்தி கூறியிருக்கிறார். அது கவியின் சாமர்த்தியமான கூற்றல்ல. தேயிலை பானம் செய்யும் ஒவ்வொருவரும் அனுபவத்தில் தெரிந்துகொண்டது. இந்தியாவில் விளையும் தேயிலையினால் தயாரித்த பானத்தை முதலில் தாம் சாப்பிட்டவர்கள் மிகவும் நேர்த்தியானதும் அதிசயமான பொருள்களைப் பார்த்தவுடன் என்ன உணர்ச்சி யேற்படுமோ அதற்கு ஒப்பிடுகிறார்கள்.



### தேத் தண்ணீர் செய்யு முறை

சுத்தமான தண்ணீரை கொதிக்க வை. ஈரமில்லாத பாத்திரமாக ஒன்று எடுத்து ஒவ்வொருவருக்கும் ஒரு டீ ஸ்பூன் வீதமும் அதிகமாக ஒரு ஸ்பூனும் நல்ல இந்தியதேயிலையை போட்டுகொதிக்கும் ஜலத்தை விடு. 5 நிமிஷம் கழித்துவடிக் கட்டி பாலையும் சர்க்கரையையும் சேர்த்துக் கொள்ளவும்.

**இந்தியாவின் சந்தோஷமும், பெருமையும் – இந்திய தேயிலை**

IK 43.

Regd. No. 2514




ஒரு ஆரோக்யமுள்ள மனிதன்

வெட்டை வியாதியில் அவஸ்த்தைப்படும் போழுது

கொபெய்சான் சாப்பிட்டு

வியாதியை சொஸ்த்தப்படுத்திக் கொண்டான்

# வெட்டை நோய்

கொடுமைக்கு ஆளாகியுள்ள மற்றவர்களும் இதேமாதிரி குணம் கண்டு, சுகம் பெறலாம். சற்றும் தாமதியாமல் அவர்கள் உபயோகிக்க வேண்டியது

# கொபெய்சான்

2 அளவுகளில் எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

15 மாத்திரைகள் அடங்கிய புட்டி 1-க்கு ரூ. 1.

50 மாத்திரைகள் கொண்ட புட்டி 1-க்கு ரூ. 3.

பாக்கிங் & தபால் செலவ தனி. பூரா விவரங்களுக்கு எழுதுக

## சோல் எஜண்டுகள்

சவுத் இண்டியன் மர்க்கண்டைல் கம்பெனி

12, மன்னுரு தெரு, பார்க்டவுன் மதராஸ்


Printed and Published by T. S. Visvanatha Iyer, B.A. at the Swadesamitran Power Press, Mount Road Madras—Editor C. R. Srinivasan, B.A.